மார்ச் 2003 www.padippakam.com ரூ. 5.00



பொறுக்கி அரசியலின் புதிய பரிணாமம்

# புதிய ஜனநாயகம்





படிப்பகம்

www.padippakam.com

# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

## தமிழ்நாட்டில் மெரீனா கருநாடகாவில் பிருந்தாவனம்



தனியார் முதலாளிகளுக்கு தாரை வார்க்கப்படும் மைசூர் பிருந்தாவனம்.

**மை**சூர் பிருந்தாவனம் பூங்காவைப் பார்த்தவர்கள் யாரும் அந்த நடமாடும் நீரூற்றுகளையோ, வண்ணமயமாய் அலங்கரிக்கப்பட்ட புல்வெளிகளையோ, படகு பயணத்தையோ அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. தினசரி ஏழாயிரம் பேர் வந்துபோகக் கூடிய இந்த அழகிய சுற்றுலா மையத்தைத் தனியாருக்கு விற்கப் போகிறது கருநாடக அரசு. பிருந்தாவனத்தையொட்டி உள்ள கெம்மங்குண்டி, நந்தி குன்றுகளையும் பன்னாட்டு நிறுவனத்துக்கு தாரை வார்க்கப் போவதாக அறிவித்துள்ளது. இதன்படி, பிருந்தாவனத்தைச் சுற்றி வணிக வளாகங்களைக் கட்டிக் கொள்ளவும், நுழைவுக் கட்டணங்களை வசூலித்துக் கொள்ளவும் அத்தனியார் நிறுவனங்களுக்கு அதிகாரத்தையும் அளிக்கவுள்ளது கருநாடக அரசு. தொழிற்சாலைகளையும், சேவை நிறுவனங்களையும் மட்டுமின்றி இயற்கை வளங்களையும், சுற்றுலா மையங்களையும் தன் கட்டுக்குள் கொண்டுவரத் துடிக்கின்றன பன்னாட்டு நிறுவனங்கள் என்பதற்கு பிருந்தாவனம் இன்னொரு சாட்சியம்!

## ஊழலின் இன்னொரு அத்தியாயம்

**பி**ஜி தீவில் நடைபெற்ற ஆட்சிக் கவிழ்ப்பிற்கு பிறகு அதிபர் மகேந்திர சௌத்ரி இந்தியா வந்தபோது அவருக்குச் சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்றார் அரியானா மாநில முதலமைச்சர் ஓம் பிரகாஷ் சௌதாலா. பிஜி நிலைமையைக் காட்டி, இந்திய வம்சாவழியினரான சௌத்ரிக்கு உதவுவதாக அப்போது வாக்கும் அளித்தார் சௌதாலா. இது நடந்து இரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன. இப்போது அந்த உதவிக்காக சௌதாலாவைச் சந்திக்க பல வழிகளில் சௌத்ரி முயற்சி செய்தும் சந்திக்க முடியவில்லை. அரசு முறைப்படி தூதரக அலுவலகம் வழியே தொடர்பு கொண்டபோதும் சௌதாலா சந்திக்க மறுத்துவிட்டாராம்! இந்த திடீர் மாற்றத்துக்கு என்ன காரணமென்று ஆராய்ந்தபோதுதான் மகேந்திர சௌத்ரியின் பெயரைச் சொல்லி வசூலித்து ரூ. 2.5 கோடியை ஓம் பிரகாஷ் சௌதாலா ஏப்பம் விட்டுள்ள கதை வெளியில் வந்துள்ளது. ஆடு நனைந்தால் ஓநாய் ஏன் அழுகிறது என்று இப்போது புரிந்து விட்டதல்லவா?

## வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது

**பொ**லிவியா நாட்டில் திடீரென்று அறிவிக்கப்பட்ட விலைவாசி ஏற்றத்தை எதிர்த்து வீதிகளில் இறங்கி போராடத் தொடங்கினர் பொலிவிய மக்கள். அதன் உச்சகட்டமாக மருத்துவ ஊர்தியொன்றில் ஏறிக் கொண்டு அதிபர் மாளிகையை முற்றுகையிட்டு சூறையாடினர். அங்கு காவலில் இருந்த போலீசார் இவர்களைத் தடுக்கவோ, அதிபர் மாளிகையைப் பாதுகாக்கவோ முயலவில்லை. மாறாக, போராடிய மக்களுடன் போலீசாரும் இணைந்து கொண்டனர். ''போலீசும் மக்களும் ஓரணியில்! எங்களை யாரும் வீழ்த்த முடியாது!'' என்ற முழக்கம் விண்ணைப் பிளந்தது. நிலைமையைச் சமாளிக்கவந்த பொலிவிய இராணுவம் போலீசுடன் துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில் 17 பேர் பலியானதோடு நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமுற்றனர். நிதி நெருக்கடியைக் காரணம் காட்டி பல மாதங்களாக முறையாக சம்பளம் தரப்படாததுதான் போலீசாரின் கோபத்துக்கு காரணமாம்! தமிழகத்தில் ஜெயா, போலீசு துறைக்கு வாரிவாரி வழங்குவதின் சூட்சுமம் இதுதான்.

## தண்ணீரே நஞ்சாய்...

**தி**ல்லியைச் சேர்ந்த அறிவியல் மற்றும் சுற்றுச் சூழல் மையம் என்ற அரசுசாரா நிறுவனம் சமீபத்தில் நடத்திய ஆய்வில் ஒரு அதிர்ச்சியூட்டும் உண்மையை வெளியிட்டுள்ளது. தில்லி மற்றும் மும்பையைச் சேர்ந்த முப்பது முன்னணி நிறுவனங்களின் தாது குடிநீரில் (மினரல் வாட்டர்) அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மேல் பூச்சிக் கொல்லி தன்மை இருப்பதை நிரூபித்துள்ளது. இப்பூச்சிக் கொல்லி மருந்தளவு மனிதர்களை மெல்லச் சாகடிக்கும் நச்சுத் தன்மை கொண்டது என்றும் அந்நிறுவனம் கண்டறிந்துள்ளது. இதில் கோகா - கோலாவின் 'கின்லே'வும் அடங்கும். ஆண்டுக்கு 1000 கோடி ரூபாய் வருமானம் ஈட்டும் பன்னாட்டு நீர் வியாபாரிகளின் தகிடுதத்தம் ஆதாரப்பூர்வமாக வெளியான பிறகுதான் அவற்றைத் தடை செய்வதைப் பற்றி பரிசீலிக்கத் தொடங்கியுள்ளது மத்திய அறிவியல் தொழில் நுட்ப அமைச்சகம். சுத்தம், சுகாதாரம், சேவை இவற்றின் மறு பெயர்தான் தனியார்மயம் என்று பேசித் திரிந்தவர்கள் வாயடைத்துப் போயுள்ளனர். தனியார்மயம் என்றால் இலாபவெறி மட்டும்தான்.

## மீண்டும் இந்தித் திணிப்பு

தமிழ்நாட்டில் தேசிய நெடுஞ்சாலைகளில் உள்ள கி.மீ. கற்களில் மீண்டும் இந்தியைப் புகுத்தியுள்ளது இந்திய அரசு. தேசிய நெடுஞ்சாலைகளில் ஏற்கனவே தமிழில் எழுதப்பட்டிருந்த கற்களை அகற்றிவிட்டு இந்தியில் எழுதப்பட்ட கற்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த நூற்றாண்டில் தமிழ்நாட்டில் நடந்த முக்கியமான நிகழ்வுகளில் ஒன்று இந்தி திணிப்புக்கு எதிரான போராட்டம். திராவிடக் கட்சிகள் அரசியலில் செல்வாக்குப் பெற காரணமாயிருந்த அப்போராட்டத்தை இப்போது அனேகமாய் எல்லா திராவிடக் கட்சிகளும் கனவாய், பழங்கதையாய் மறந்துவிட்டு 'இந்து, இந்தி, இந்தியா' என்ற தேசிய நீரோட்டத்தில் சங்கமித்துவிட்டன. இன்று அதே திராவிடக் கட்சிகளின் வழியேதான் இந்தி திணிப்பு பகிரங்கமாய் அரங்கேறுகிறது. இனியும் இதை அனுமதிக்கப் போகிறோமா?

●○●



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய — லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 18

**இதழ் 5**

மார்ச் 2003

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

அட்டை ஓவியம்
முகிலன்

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அஞ்சல் பெட்டி எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.


## ஜெயலலிதாவின் அராஜகத்தை எதிர்த்தாக்குதல்கள்தாம் வீழ்த்தும்

தமிழ்நாடு சட்டப் பேரவைக்கான சாத்தான்குளம் தொகுதி இடைத் தேர்தலில் ஜெயலலிதா கட்சி வெற்றிபெற்றுள்ளது. எதிர்க் கட்சிகள் சித்தரித்ததைப் போலவோ, எதிர்பார்த்ததைப்போலவோ, வியாபாரத்தைப் பெருக்கிக்கொள்வதற்காக பத்திரிக்கைகள் பரபரப்பூட்டி எழுதியதைப் போலவோ ஜெயலலிதா கட்சிக்கு இந்தவெற்றி கடினமானதாக இருக்கவில்லை.

1991–96–ஆம் ஆண்டுகளின் பழைய கதையை மறந்துவிட்டுப் பார்த்தால்கூட, கடந்த மூன்றாண்டுகளில் ஜெயலலிதா ஆட்சியின் இவ்வளவு இலஞ்ச – ஊழல், அக்கிரமங்கள் - அதிகாரமுறைகேடுகளைப் பார்த்த பிறகும் இத்தனை அப்பட்டமான, ஆணவமான மக்கள் விரோதப் போக்குகளையும் பாசிச அடக்குமுறைகளையும் அனுபவித்த பிறகும், ஜெயலலிதா அரசின் மதமாற்றத் தடைச்சட்டம் காரணமாக அதை எதிர்க்க வேண்டிய கிறித்தவ மக்கள் பெரும் எண்ணிக்கையில் வாழும் சாத்தான்குளம் தொகுதியில் மிக அதிக அளவிலான வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயலலிதா கட்சி வெற்றிபெற்றுள்ளது.

இது எப்படி சாத்தியமானது? ஜெயலலிதாவின் தொலை இயக்கி (ரிமோட் கண்ட்ரோல்) ஆணையின் கீழ் இயங்கும் ஒரு இராட்சத தேர்தல் எந்திரம் இருக்கிறது. தொழில்முறைக் கிரிமினல்கள் கூட எண்ணிப் பார்க்கமுடியாத குற்றங்கள் – மோசடிகள் – முறைகேடுகள் மூலம் தேர்தல் தில்லுகள் செய்வதில் திறமை பெற்ற வல்லுநர்களைக் கொண்டது அந்தத்தேர்தல் எந்திரம். பணப்புழக்கம் என்னும் மசகு எண்ணெய் வார்த்து, அரசியல் அதிகாரம் என்னும் எரிசக்தி நிரப்பி எப்போதும் தயார்நிலையில் பராமரித்துவரும் அந்த எந்திரத்தைத் தேர்தல் களத்தில் ஜெயலலிதா ஏவிவிடும்போது எதிர்த்தரப்பு பொடிப் பொடியாகத் தகர்ந்து போகிறது.

வாக்காளர் பட்டியல் தயாரிக்கும் நிலையிலேயே அ.தி.மு.க. தேர்தல் எந்திரம் போலி வாக்காளர்களை அரசு அதிகாரிகளின் உடந்தையோடு பதிவு செய்துவிடுகிறது. தேர்தல் தேதி அறிவிப்புக்கு முன்னரே, எதிர்த்தரப்பு உள்ளூர் பிரமுகர்களுக்கு விலைபேசுவது தொடங்கிவிடுகிறது. தேர்தலை ஒட்டி ''அம்மா''வின் ஆசிபெற்று கட்சிமாறுவது நடக்கிறது. வேட்டி–சேலை, குடம்–குத்து விளக்கு, மூக்குத்தி – தோடு என்று அன்பளிப்புகள் குவிக்கப்படுகின்றன.

பல அமைச்சர்களையும், கட்சி நிர்வாக எடுபிடிகளையும் கொண்ட தேர்தல் பணிக்குழு நியமிக்கப்பட்டு கோடிக்கணக்கான ரூபாய் பணப்பெட்டியுடன் தொகுதிக்குள் இறக்கிவிடப்படுகின்றனர். ஊருக்கு ஊர், பகுதிக்குப் பகுதி பொறுப்பாளர்கள் என்கிற பெயரில் ''தளபதி''களுடன் குண்டர்படை; பிரியாணி, சாராயம், இசைத்தட்டு நடனம் என்று ''குஷி''ப்படுத்தப்படுகிறது. அரசு எந்திரம், ஆளும் கட்சியின் தேர்தல் எந்திரம் ஆகியவை இரண்டறக் கலந்து தொகுதி ''மேம்பாட்டுப் பணிகளை''ச் செய்கின்றன.

நாக்கில் நரம்பில்லாமல் புளுகுவதற்கும், எதிர்த்தரப்பின் மீது அவதூறுகளை அள்ளிவீசவும், வாக்காளர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப்படுவதை மேற்பார்வையிடவும் ''அம்மா'' தேர்தல் பிரச்சாரம் ஏற்பாடு செய்யப்படுகிறது. எதிர்த்தரப்பின் பிரச்சார சாதனங்கள் தவறியும் ''அம்மா'' கண்ணில் பட்டுவிடாதவாறு அடித்து நொறுக்கப்படுகின்றன. தினசரி கூலிக்கும், பிரியாணிக்கும் திரட்டப்பட்ட மக்கள்முன்பு முன்னாள் நடிகை மீண்டும் வேஷங்கட்டிக்கொண்டு, மக்கள் மீது கரிசனை உள்ளவர்போல நடிக்கிறார்.

''அம்மா''வுடன் தொகுதிக்குள் மறுபடியும் வந்து இறங்கும் பணப்பெட்டிகள், தேர்தல் பிரச்சாரக் கெடுமுடிந்ததும் ''பட்டுவாடா'' செய்யப்படுகிறது, பரிசுப் பொதிகள் வாரி இறைக்கப்படுகின்றன. வெளியூர்களில் இருந்து அடியாள்படை போலி வாக்காளர்களுடன் லாரியில் வந்து இறங்குகின்றனர். இரண்டு, மூன்று மணி நேரம் அமைதியாகத் தேர்தல் நடக்கிறது. திடீரென்று ரௌடியாட்கள் முன்னேவர லாரிகளில் போலி வாக்காளர்கள் வந்திறங்குகின்றனர். போலீசு அதிகாரிகள் விலைபோன எதிர்த்தரப்பு முகவர்களோடு சலாமடித்துவிட்டு ஒதுங்கிப் போகின்றனர். எதிர்ப்புக்காட்டும் முகவர்கள் அரிவாள் முனையில் விரட்டப்படுகின்றனர். தங்கு தடையின்றி இரட்டை இலைப் பொத்தான்களை அமுக்கி கள்ளவாக்குகள் குவிக்கப்படுகின்றன.

தொகுதியை வலம்வரும் எதிர்த்தரப்புத் தலைவர்கள் கண்டு கொள்ளாமல் ஒதுங்கிவிடவேண்டும். இல்லையென்றால் ஆளுங்கட்சி கிரிமினல்கள் அவர்

www.padippakam.com

களுடைய மண்டையைப் பிளப்பார்கள்; தேர்தல் அதிகாரிகள் வேறுபக்கம் திரும்பிக் கொள்வார்கள். இரத்தம் சொட்டச் சொட்ட போலீசிடம் முறையிட்டால் இவர்களே கைது செய்யப்பட்டு வழக்கும் போடப்படும். இதுவரை வாக்குச் சாவடிக்குள் புகுந்து கள்ள ஓட்டுப்போட்டு வன்முறை வெறியாட்டம் போட்ட அ.தி.மு.க. கிரிமினல் ரௌடிகளின் தேர்தல் எந்திரம் கடந்த சில ஆண்டுகளாக வாக்கு எண்ணும் இடத்திலேயே புகுந்து அராஜகம் செய்து, தேர்தல் முடிவுகளையே மாற்றுவதையும் செய்கிறார்கள்.

ஜெயலலிதா கட்சியின் வழக்கமாகி விட்ட இதே வேலைகள்தாம் சாத்தான் குளத்திலும் நடந்தன. தேர்தல் விதிமுறைகளைத் துச்சமாக மதித்துக் கிரிமினல் முறைகளை அக்கட்சி மேற்கொண்டது. வெளியூர்களில் இருந்து ரௌடிகளும் போலிவாக்காளர்களும் குவிக்கப்பட்டனர். தேர்தல் விதிமுறைகளை அப்பட்டமாக மீறி தொகுதிக்கு வாக்குறுதிகளை ஜெயலலிதா வீசியது போன்றவை குறித்த புகார்களை, ஒன்று கிடப்பில் போடுவது அல்ல கண்துடைப்பு கண்டனங்கள் செய்வதோடு கண்ணை மூடிக் கொண்டது. தேர்தல் ஆணையம். போலீசோ அ.தி.மு.க. ரௌடிகள் – கிரிமினல்களுக்கு முழு ஒத்துழைப்புத் தந்தது. வாக்காளர் அடையாள அட்டைகள் இல்லாதவருக்கு மாற்றாக அடையாளங்காணும் முறைகளை தேர்தல் ஆணையம் அறிவித்தது. இதைப் பயன்படுத்திக்கொண்டு வாக்குச்சாவடிகளுக்கே அரசு அதிகாரிகளைக் கொண்டுவந்து போலி அடையாளச் சான்றிதழ்களைக் கொடுத்து கள்ள ஓட்டும் போட்டு சாதனை புரிந்தனர், ஜெயலலிதா கட்சியினர். சாத்தான் குளத்தில் இருந்து வெளியூர்காரர்களை வெளியேற்றும்படி உத்திரவு போட்டதும், எதிர்த்தரப்பினர் அனைவரையும் வெளியேற்றி தொகுதி முழுவதும் ஏகபோக ஆதிக்கத்தை ஏற்படுத்திக் கொண்டது ஆளுங்கட்சிக் கிரிமினல் மூளை.

இவ்வளவும் செய்து ஜெயலலிதா கும்பல் வெற்றி பெற்றது வியப்புக்குரியதில்லை. எதிர்த்தரப்புக்கு ஆறுதல் அளிக்கும் ஒரே நிகழ்வு ஆளுங்கட்சி - வெளியூர் கிரிமினல் ரௌடிகளின் அராஜகம் தாங்கமுடியாததாகிய போது, பொதுமக்களே கொதித்தெழுந்து சாலை மறியல், கடையடைப்புகளில் ஈடுபட்டதுதான். குறிப்பாக, கட்சிமாறி எம்.பி. டாக்டர் மைத்ரேயன் ஓடி ஒளியும்படி விரட்டியடிக்கப்பட்டார். ஆனால், எதிர்க் கட்சியினர் மக்களின் இந்த எழுச்சியை ஒழுங்குபடுத்தி ஆளும் கட்சியின் கிரிமினல் ரௌடி எந்திரத்தைத் தாக்கி முடக்கி விட முயலவில்லை.

உண்மையைச் சொல்வதானால் தேர்தல் தொடங்குவதற்கு முன்பாகவே எதிர்க்கட்சிகள் எல்லாம் தோல்வியை ஒப்புக்கொண்டு சரணடைந்துவிட்டன. ''ஜெயலலிதா ஆட்சியின் கீழ் தேர்தல்கள் ஜனநாயக பூர்வமாக நடக்காது; தேர்தல் ஆணையமும், போலீசு உட்பட அரசு அதிகார வர்க்கமும் அதற்குத் துணை போகின்றன'' என்று கூறி எதிர்க்கட்சிகள் அடுத்தடுத்து இடைத்தேர்தல்களைப் புறக்கணித்து விடுகின்றன, அப்படியானால் வேறு என்ன செய்வது என்று செய்வதறியாது திகைத்து நிற்கின்றன.



**பாசிச முதல்வர் ஜெயலலிதாவிடம் ஆசிபெறும் வளர்ப்புப் பிராணி : சாத்தான்குளம் தேர்தலில் வெற்றிபெற்ற நீலமேகவர்ணம்.**

ஜெயலலிதா உருவாக்கி இருக்கும் அந்த இராட்சத கிரிமினல் ரௌடி எந்திரம் தேர்தல் வேலைகளை மட்டும் பார்ப்பதில்லை. சட்ட மன்றம் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் எதிர்த்தரப்பினர் செயல்பட முடியாமல் அராஜக வெறியாட்டம் போடுகின்றது. இந்த அமைப்புகளிலும் இவற்றுக்கு வெளியேயும் கூட எதிர்க்கட்சிகள் மீது நேரடித் தாக்குதல்கள் நடத்தி அடக்கி ஒடுக்குகின்றது; அரசின் போலீசு மற்றும் நிர்வாக எந்திரம் இதற்கு உறுதுணையாக நிற்கிறது.

குறிப்பாக, சென்னை மாநகராட்சியில் கராத்தே தியாகராஜன் நடத்தும் அராஜக ரௌடித்தனம், சட்டமன்றத்தில் தி.மு.க.வின் பரிதி இளம்வழுதிக்கு எதிரான ஜெயலலிதாவின் பாதந்தாங்கி காளிமுத்து ஏவிவிடும் குற்றநடவடிக்கைகள், விழுப்புரத்தில் முன்னாள் அமைச்சர் பொன்முடி மீது ஆளுங்கட்சியின் அடியாட்படையாக செயல்படும் போலீசு நடத்திய தாக்குதல் போன்றவை எதிர்த் தரப்பை ஒடுக்குவதில் இந்த ஆட்சியின் போக்கை வெளிப்படுத்துகின்றன.

போலீசு உட்பட மொத்த அரசு எந்திரமும் ஒன்று ஜெயலலிதாவின் ஆடம்பர – ஊதாரி விழாக்களுக்கான ஏற்பாடுகளைக் கவனிக்கிறது. இவை தவிர எதிர்க்கட்சிகள் மீது தாக்குதல் தொடுத்து பொய் வழக்குகள் போடுகிறது. ஆளுங்கட்சி அதிகாரமுறைகேடுகள் பல செய்து, பலபொதுக்கூட்டங்கள் நடத்தி, எதிர்த் தரப்பின் மீது ஆபாச வசவுகளை வீசியும், இசைத்தட்டு நாட்டியங்களையும் ஏற்பாடு செய்து கட்சி ஆதரவு பொறுக்கிக் கும்பலை குஷிப்படுத்துகிறது. அதேசமயம் எதிர்க்கட்சிப் பேச்சாளர்கள் ஜெயலலிதாவை அவமரியாதை செய்தாக அடுக்கடுக்கான வழக்குகள் போட்டு சிறையிலடைக்கிறது. ஜெயலலிதாவின் ''துக்ளக் தர்பார்'' ஆட்சி குறித்து சிறு அதிருப்தியைத் தெரிவிக்கும் பத்திரிக்கைகள் மீது கூட அவமரியாதை வழக்குகள் போட்டு அடக்குகிறது.

குஜராத்தை ஆளும் மதவெறி காட்டுமிராண்டி நரேந்திர மோடிக்கு இணை வைத்து பார்ப்பன பயங்கரவாதிகள் ஜெயலலிதாவைப் போற்றுவது முற்றிலும் பொருத்தமானதுதான். மோடியைப் போலவே ஜெயலலிதாவும் ஜனநாயக வழிமுறைகளில் தன்னை எதுவும் செய்து விட முடியாது என்று மீண்டும் மீண்டும் நிரூபிக்கிறார். இனி இத்தகையவர்களை அவர்கள் பாணியிலான எதிர்த்தாக்குதல்கள் மூலம்தான் முறியடிக்க முடியும் என்பது மீண்டும் உறுதியாகிவிட்டது. ●



படிப்பகம்

www.padippakam.com

# பெரியார் மண்ணில் பார்ப்பன வெறிக்கூச்சல்



''குருஷேத்திரத்தில் திரண்ட அர்ஜுனர்கள்'' என்று வர்ணித்துக் கொண்ட வி.எச்.பி.யின் இந்து இளைஞர் மாநிலமாநாடு பிப்ரவரி 8–9 ஆகிய தேதிகளில் திருச்சியில் நடை பெற்றது.

பார்ப்பன பயங்கரவாதத்தின் தமிழகத் தலைவியான ஜெயலலிதாவின் ஆசியோடு இம் மாநாடு நடந்தது.

மாநாட்டில், காஞ்சிமட சங்கராச்சாரிகளான ஜெயந்திரர், விஜயேந்திரர் ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவர், வடலூர் ஊரன் அடிகள் முன்னிலையில் வி.எச்.பி. தலைவர் அசோக் சிங்கால் மற்றும் அதன் செயலர் பிரவீண் தொகாடியா இருவருக்கும் தங்கத் திரிசூலங்கள் வழங்கப்பட்டன.

இத்தலைவர்கள் திரிசூலம் ஏந்தியவுடனே சிம்மமாய்ப் பாய்ந்தார்கள். ''திரிசூலத்தின் மூன்று முனைகளும் மூன்று எதிரிகளை – கிறித்துவர்கள், முசுலீம்கள் மற்றும் மதச்சார்பற்ற இந்துக்களைக் குத்தி கிழிக்கும்'' என ஓங்காரமிட்டார்கள்.

''அயோத்தியில் ராமருக்கு, மதுராவில் கிருஷ்ணருக்கு, காசியில் விஸ்வநாதருக்குக் கோயில் கட்ட வேண்டும் என்பதுதான் நமது ஆசை. கோடிக்கணக்கான இந்துக்களின் இந்த லட்சிய ஆவலைத் தடுப்பது மதச் சார்பற்ற இந்துக்கள்தான்! இவர்கள் தரும் பலத்தால்தான் இஸ்லாமியர்கள் மூன்று இடங்களையும் தர மறுக்கிறார்கள். தொடர்ந்து நாடு முழுவதும் பரவியுள்ள பயங்கரவாதம், தமிழகத்தில் உள்ள நாத்திகவாதம் – எல்லாவற்றையும் எதிர்கொண்டு வெல்வோம்!''

''மதச்சார்பின்மை பேசும் இந்துக்களுக்கும் சுயமரியாதையுள்ள இந்துக்களுக்கும் இடையேதான் குருஷேத்திரப் போர்!''

''இனி இந்த நாட்டை நாத்திகர்கள், கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் ஆள அனுமதிக்க கூடாது!''

–இப்படி முடிவேயில்லாமல் பார்ப்பன பயங்கரவாதம் தலைக்கேறி வெறிகூச்சல் போட்டது, மாநாடு. தொடர்ந்து, இந்து நலன் நாக்கும் ஜெயலலிதாவுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. மேலும், இந்து நலன்களுக்காக, ஜெயலலிதா அரசு செய்ய வேண்டிய சட்டத் திருத்தங்கள் நினைவு படுத்தப்பட்டன.

அரசு சட்டங்களிலிருந்து கோயில் நிலங்களுக்கு விலக்கு; கிராமந்தோறும் அரசு செலவில் இந்து இளைஞர் சங்கங்களை அமைத்தல்; பூசாரிகள் மேம்பாடு; கோயில் வழிபாட்டில் பாரம்பரிய (பார்ப்பன) முறையைப் பாதுகாத்தல்; இந்துக் கல்விக் கொள்கைக்கு சட்டத் திருத்தம் – ஆகிய திட்டவரைவுகள் முன் வைக்கப்பட்டன.

அதாவது, ஆர்.எஸ்.எஸ்.; வி.எச்.பி, பஜ்ரங்தள் போன்ற பார்ப்பன பயங்கரவாத அமைப்புகளை, அரசே நிறுவி, பாதுகாத்து வளர்க்க வேண்டும். சுருக்கமாக சொன்னால், பார்ப்பன பயங்கரவாதத்தின் போர்வளையத்திற்குள் தமிழகத்தை கொண்டுவரவேண்டும் என்று மூர்க்கத்துடன் முழக்கமிட்டனர்.

இந்த எச்சரிக்கையைத் தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவெங்கும் முழங்குகிறார்கள்.

''ராமர் கோயிலுக்கான போராட்டம் – அதையும் தாண்டிச்செல்லும். இந்து ராஜ்ஜியத்தை உருவாக்காமல் ஓய மாட்டோம்'' என்று பிப்ரவரி 22–ல் டெல்லியில் நடந்த வி.எச்.பி.யின் தர்ம சன்சத் (மத நாடாளுமன்றம்)தில் சாமியாடினார், பிரவீண் தொகாடியா.

வேலாயுதம், சூலாயுதம், வாளாயுதம், கதாயும், வில், அம்பு ஏந்தி மரவுரிதரித்த ஜடாமுடி முனிபுங்கவர்கள், சாத்வினிகள் என்று அழைத்துக் கொண்ட கஞ்சா சாமியார்கள் நாடாளுமன்றத்தைப் பலமணி நேரம் முற்றுகையிட்டனர். பல பாதுகாப்பு வளையங்களை கொண்ட துணை ராணுவமும் போலீசும் உளவுத் துறையும் இவர்களுக்கு வீதியில் கைகட்டிச் சேவகம் செய்தன. இவர்களுடைய பேயாட்டத்தால் டில்லியே அதிர்ந்தது.

இதே வழியில், இப்போது புதிதாக, மத்திய பிரதேசத்திலுள்ள போஜ்சாலா மசூதியையும், டில்லியிலுள்ள குதுப்பினாரையும் சொந்தம் கொண்டாடி அவற்றையும் பதற்றப் பகுதியாக்கி விட்டார்கள்.

இந்தப் பார்ப்பன பயங்கரவாத கும்பல் கடந்த ஓராண்டில் உருவாக்கிய கலவரங்களின் பட்டியல் இது: அரியானாவில் கைத்தாலா, லோஹாரு; ராஜஸ்தானில் கங்காபூர்; உ.பி.யில் பாராய்க், ஷஹரபூர், கான் ஆலம்பூரா; கர்நாடகவில் ஹவேரி, ரட்டிஹள்ளி, திலக்நகர்; மகாராஷ்டிராவில் நந்துர்பார், ஜாமீனர், பட்லாபூர், அவுரங்காபாத், முர்பாத், ஷோலாப்பூர்; கேரளாவில் கோழிக்கோடு.

இந்துப் பெண்களைக் கிண்டல் செய்ததாக, பசுக்கள் கொல்லப் பட்டதாக, இந்து ஊர்வலத்தில் கல்லெ

**தமிழகத்தை குஜராத்தாக்கத் துடிக்கும் பார்ப்பன பயங்கரவாதிகள் : காஞ்சி மட சங்கராச்சாரி, அசோக் சிங்கால், தொகாடியா, கோபால் மற்றும் பிறர்.**



www.padippakam.com



றிந்ததாக, ஆரிய சேனா என்று அவதூறாக எழுதியதாக, அனுமார் சிலையிலிருந்து கண்களை பிடுங்கியதாக, விநாயகர் மீது முட்டைகளை எறிந்ததாக, பயங்கரவாதி என்று கூறியதாக - இப்படி ஏதேதோ கூறி, இந்தியாவெங்கும் ரத்தம் குடிக்கிறார்கள். அந்த வழியில் இப்போது தமிழ்நாட்டைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

''ஐந்தாண்டுகளில் மதத்தலைவர்கள் சொல்வதைத்தான் மக்கள் கேட்கப் போகிறார்கள். எங்களைப் போன்ற மக்களை திரட்டுபவர்கள்தான் எதிர்காலத்தை நிர்ணயம் செய்வோம்'' என்கிறார்கள்.

பார்ப்பன பயங்கரவாதிகள் ஏதோ குருட்டாம் போக்கில், கும்பல் கூட்டி கைத்தட்டலுக்காக கத்திவிட்டு கலைந்து போகிறார்கள் என்பதில்லை. தங்களுடைய சித்தாந்த, அரசியல், அமைப்பு நடவடிக்கைகளுக்கு பருண்மையான வடிவம் கொடுத்திருக்கிறார்கள். இதை குஜராத் சோதனைக் கூடத்தில் வெற்றிகரமாக சாதித்திருக்கிறார்கள்.



மதச்சார்பற்ற ஜனநாயகச் சக்திகளை ஒழிக்க தொகாடியாவுக்கு வழங்கப்படும் சூலாயுதம்: பார்ப்பனப் பேய்களின் சதிராட்டம்.

இப்போது குஜராத் 'குளோனிங்' களை உருவாக்க, இந்தியா முழுக்க இடம் தேடி அலைகிறார்கள். பார்ப்பன பாசிஸ்டு ஜெயலலிதா, அவர்களுக்கு தமிழ் மண்ணை காட்டிக் கொடுத்திருக்கிறார்.

பார்ப்பன பயங்கரவாத கும்பலுக்கு இருக்கும் ஒரே தடை இனி, மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகள்தான் என்று குறி வைக்கப்பட்டுள்ளது.

போலி மதச்சார்பின்மை பேசும் தி.மு.க.; ம.தி.மு.க.; பா.ம.க. போன்ற தேசிய ஜனநாயக கூட்டணி அடிமாடுகளை, மலிவு விலையில் பிடித்து தனது

## மாநாட்டுத் துளிகள்

卐 ஒவ்வொரு ஊரில் இருந்தும் மாநாட்டுக்கு ஆட்களைத் திரட்டிவர இலவசமாக வண்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

மாநாட்டுக்கு வந்த பெண்களுக்கு இலவச சேலைகளும் 100 ரூபாய் பணமும் கொடுக்கப்பட்டிருந்தது. இளைஞர்களுக்கு 100 ரூபாய் பணமும் பனியனும் தலையில் கட்டி கொள்ள காவித்துணியும் கொடுத்திருந்தார்கள்.

卐 மேடையில் பேசியவர்கள், ''வி.எச்.பி.யின் இளைஞர்கள் கட்டுப்பாடானவர்கள், ஒழுக்கமானவர்கள். அதனால்தான் இவ்வளவு தலைவர்கள் இங்கு வந்து பேசுகிறார்கள். இவர்களை நீங்கள் சாதாரணமாகப் பார்க்க முடியாது'' என்றார்கள்.

ஆனால் கூட்டம் வெளியில் செல்வதும் உள்ளே வருவதுமாக இருந்தது ''நீங்கள் அனைவரும் அமர வேண்டும். அப்படிச் செய்தால்தான் சங்கராச்சாரி தொடர்ந்து பேசுவார்'' என அறிவித்தனர். ஆனாலும் யாரும் கண்டு கொள்ளவில்லை.

卐 மாநாட்டில் ஒரு லட்சம் இளைஞர்கள் திரள்கிறார்கள் என்று தமிழ்நாடு முழுக்க விளம்பரப்படுத்தியிருந்தனர். மாநாடு நடந்த பிறகும், ஒரு லட்சம் இளைஞர்கள் திரண்டதாக பத்திரிக்கைகள் பொய்ச் செய்திகள் வெளியிட்டன. ஆனால் மாநாட்டுக்கு வந்தவர்கள் 20,000-க்கும் குறைவு. பகல் 12-மணிக்கெல்லாம் இதிலும் பாதிப் பேரைக் காணவில்லை.

பகல் 12 மணியளவில் மேடையில், விழாத்தலைவர் ''யாரும் கலைந்து செல்ல வேண்டாம், சரியாக 2 மணிக்கு காலை அமர்வு முடிந்து விடும். உணவு உண்ட பின் மீண்டும் 3 மணிக்கு ஆரம்பமாகும். ஆகவே தயவு செய்து யாரும் இப்போதே உணவு சாப்பிடப் போக வேண்டாம்'' என்று அறிவித்தும் பலன் இல்லை. 12 மணிக்கே சாப்பிட்டுவிட்டு பலரும் கலைந்து விட்டனர்.

卐 மாலை அமர்வில், மொத்தம் 200 பேர்கூட மாநாட்டு திடலில் இல்லை. மாலை 6 மணிக்கு விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே திடலில் இருந்தனர். இருப்பினும் ஆளில்லாமலேயே 7.30 மணி வரை மைக்கில் பேசிக் கொண்டிருந்தனர்.

卐 மாநாட்டின் தீர்மானங்கள் வாசிக்கும் பொழுது, ''ஒவ்வொரு தீர்மானத்தையும் வாசித்து முடித்தவுடன் ''ஓம்'' சொல்லுங்கோ!'' என்று அறிவிப்பாளர் சொன்னார். ஆனால், யாரும் சொல்லவேயில்லை. ''எல்லோரும் ஓம் சொல்லுங்கோ. நன்னா உரக்கச் சொல்லுங்கோ'' என்று திரும்பத் திரும்ப சொன்னார். அதன் பிறகு ஆங்காங்கே இருந்தவர்கள் ''உம்'' என்றனர்.


படிப்பகம்

www.padippakam.com



"நீதிமன்றத்திற்கும் சட்டத்திற்கும் கட்டுப்பட மாட்டோம்;
அயோத்தியில் ராமன் கோயில் கட்டியே தீருவோம்!"
– நாடாளுமன்றத்தை முற்றுகையிட்டு எச்சரிக்கும் கஞ்சா சாமியார்கள்.

''கோ''சாலையில் வைத்து பாராமரிக்கிறது, பார்ப்பன பயங்கரவாத கும்பல்.

காங்கிரசோ, குஜராத் வெற்றியைக் கண்டு பீதியடைந்து எந்த பக்கம் போவது என்பதில் அதன் தலைமை பிளவுபட்டு நிற்கிறது.

'கம்யூனிஸ்ட்' கட்சிகளோ, காங்கிரசு கட்சியை வலது, இடதாக முகர்ந்து பார்த்துக் கொண்டிருக்கின்றன.

ஜெயலலிதா ஆசி கிடைத்த தைரியத்தில் சூலாயுதத்தைத் தூக்கிக் கொண்டு நோட்டம் பார்க்கிறது, பார்ப்பன பயங்கரவாதக் கும்பல்.

ராமஜென்மபூமி பித்தலாட்டங்களையும், குஜராத் படுகொலைகளையும் வெளி உலகுக்குக் காட்டிய உண்மையான மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளைக் குறிவைத்து தாக்கி அழிக்க நினைக்கிறது, இப்பயங்கரவாத கும்பல்.

மதமாற்றம், ராம ஜென்மபூமி, கோத்ரா ரயில் எரிப்பு என்று காரணம் காட்டி கிறித்துவர்களையும் முஸ்லீம்களையும் கொன்றொழித்த இக்கும்பல், இப்போது சூலாயுதத்தை ஜனநாயக சக்திகள் பக்கம் திருப்பியிருக்கிறது.

இரத்த வெறிபிடித்த இந்தக் கலவரக் கும்பல் இப்போது தமிழகத்தில் கூடி வெறிகூச்சல் போடுவதற்கு வேறு காரணம் உண்டு. இவர்களுடைய பருப்பு இதுநாள் வரையில் இங்கு வேகவில்லை. ''அவன் கிடக்கிறான் வெங்காயம்'' என்றார் பெரியார். பார்ப்பன பயங்கரவாதிகள் தூக்கி கொண்டு பூச்சாண்டி காட்டிய எல்லா கடவுள்களையும் பிய்ந்த செருப்பால் அடித்து விரட்டினார்.



பெரியார் என்ற பெரும் பகுத்தறிவுத் தீப்பந்தம் இந்த பாம்புகளை அதன் புற்றிலேயே பொசுக்கியது. 50 ஆண்டுகாலம் இப்பணியை அயராது செய்தது. தமிழகம் பெரியாரை இழந்தது; பகுத்தறிவை மறந்தது. பதுங்கியிருந்த பாம்புகள் மட்டுமல்ல, வாலறுந்த பாம்புகள் கூட இப்போது சீறிப்பாய்கின்றன. நாம் அதன் தலையிலேயே அடிப்போம். பெரியார் பிறந்த மண்ணை பகுத்தறிவுக் கோட்டையாக்குவோம். இனியும் தாமதிப்பதில் பயனில்லை. ஏனெனில், சூலத்தின் மூன்றாவது முனை யாருக்கு என்பதை பார்ப்பன பயங்கரவாதிகள் பகிரங்கமாக அறிவித்துவிட்டார்கள்.

● பச்சையப்பன்

## கொலைகாரர்களின் கூடாரம் ஆகும் கோயில்கள்

தமிழக கிராம கோயில் பூசாரி பேரவையில், பார்ப்பன பயங்கரவாதிகளின் ஒழுங்கிணைப்பை உருவாக்க வி.எச்.பி.யின் கீழ் 5,000 ஊழியர்களை முழு நேரமாக நியமிப்பது. பூசாரிகளுக்கு, பார்ப்பன 'கலாச்சாரத்தை' கற்றுக் கொடுக்க 5 நாள் முழு நேர பயிற்சி கொடுப்பது.

தமிழகம் முழுவதும் உள்ள, உள்ளூர் தெய்வ வழிபாட்டை 12 வகையாக நுணுக்கமாக பிரித்து வகைப்படுத்துவது, அதை பார்ப்பன தலைமையில் வழிநடத்துவது.

மையப்படுத்தப்பட்ட வகையில், உள்ளூர் கோயில்களுக்கு, வழிபாட்டுமுறைகள், சடங்குகள், சமஸ்கிருத சுலோகங்கள் அச்சிட்டு விநியோகிப்பது, வகுப்பெடுப்பது.

விசேச காலங்களில் மட்டுமே வழிபடும் உள்ளூர் தெய்வங்களை தினமும் வழிபடும் கோயில் நிறுவனங்களாக்குவது, அதை ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் கீழ் இயக்குவது.

கோயில் உள்ளேயே நடக்கும் விழாக்களை, வீதி ஊர்வல விழாவாக மாற்றுவது, ஆர்.எஸ்.எஸ். அமைப்புகள் அதை முன்னின்று நடத்துவது.

தமிழக அரசின், இந்து அறநிலைதுறையிடமிருக்கும் 36,000 கோயில்களையும், அதன் சொத்துக்களையும் ஜெயலலிதா துணையுடன் சட்டதிருத்தத்தின் மூலம் கைப்பற்றுவது; நாட்டார் தெய்வங்களான மதுரைவீரன், அய்யனார், இருளன், கருப்பன், ஒண்டி, மாடசாமி, முருகன், சுடலைமாடன், மாரியம்மன், கொற்றவை போன்ற சூத்திரர் மற்றும் பஞ்சமரின் தெய்வ வழிபாட்டையும் இந்து மதத்திற்குள் இழுப்பது; அதையே இந்து மதப்பற்று என்று மதவெறியாக மாற்றுவது. - இதுவே, ஆர்.எஸ்.எஸ்.யின் மைய வேலை. இதன் மூலம் சேரி பூசாரியிலிருந்து, சிதம்பரம் தீட்சதர் வரை இந்து மத ஏணி உருவாக்கி அதன் உயரத்தில் உட்கார்ந்து, பூணுலைப் பாதுகாத்துக் கொள்வது – இதுதான் அவர்களுடைய சதி வலை.

ஆனால், தமிழக மக்களின் மத இணக்கமும் தெய்வ வழிபாடும் பாரம்பரியமிக்கது; ஜனநாயக பூர்வமானது. பார்ப்பன கும்பலுக்கு எதிரானது.

ஏழுமலையின் கைக்குழந்தைக்கு சுக வீனமாயிருந்தால், இப்ராகீம் ராவுத்தர் மந்திரித்து விடுவார். சுப்பிரமணி, தன் குடும்பத்தோடு வேளாங்கண்ணிக்கு போய் வருவார்.

இந்த ஒற்றுமைதான் பார்ப்பன பயங்கரவாதிகளுக்கு, உறுத்தும் பயங்கரமாக இருக்கிறது. இதற்கெதிராக, ஒவ்வொருவராக மோதவிட்டு ரத்தம் குடிக்கத்தான் இந்து எழுச்சி என்று நரிக்கதை சொல்கிறது பார்ப்பன கும்பல்.


படிப்பகம்



## பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு:

# புரட்சிகர ஜனநாயகச் சக்திகளின் புதிய எழுச்சி

''இந்தியாவைத் தமிழ்நாடாக மாற்றுவோம்!'' இது, ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு., ஆகிய புரட்சிகர அமைப்புகளால் தஞ்சையில் பிப்ரவரி 22, 23 தேதிகளில் நடத்தப்பட்ட ''பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டின்'' இறுதியில் விடப்பட்ட அறைகூவல்.

இது அறைகூவல் மட்டுமல்ல; இது ஒரு சவால். ''இந்தியாவை குஜராத்தாக மாற்றுவோம்'' எனத் திமிராகப் பேசிக் கொண்டு திரியும் பார்ப்பன பயங்கரவாதக் கும்பலுக்கு எதிராக தமிழக மக்களின் சார்பில் விடப்பட்ட சவால்.

இப்படிபட்ட அறைகூவலை, சவாலை விடும்படி மாநாட்டை நடத்திய புரட்சிகர அமைப்புகளை உந்தித் தள்ளியது எது? இப்புரட்சிகர அமைப்புகள், இம்மாநாட்டிற்காக கடந்த இரண்டு மாதங்களாக தமிழகமெங்கும் நடத்திய பிரச்சாரத்திற்குத் தமிழக உழைக்கும் மக்களிடமிருந்தும், தாழ்த்தப்பட்டோரிடமிருந்தும், பெரியாரியவாதிகளிடமிருந்தும், முற்போக்கு – ஜனநாயக எண்ணங்கொண்டவர்களிடமிருந்தும் கிடைத்த ஆதரவும்; இரண்டுநாள் மாநாட்டின் அனைத்து நிகழ்ச்சிகளிலும் பங்கெடுத்துக் கொண்ட பத்தாயிரத்துக்கும் அதிகமான மக்களின் ஈடுபாடும்தான் இந்த அறைகூவலை, சவாலை விடும்படிச் செய்தது.

அரசு அதிகாரத்தையும், குண்டர் படைகளையும் கையில் வைத்திருக்கும் பார்ப்பன பயங்கரவாதிகளை எதிர்த்து நிற்க முடியுமா என யாரும் சந்தேகமோ, தயக்கமோ கொள்ளத் தேவையில்லை என்பதை நிரூபிக்கும் விதமாக நடந்து முடிந்தது, இப்பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு.

இம்மாநாட்டின் முதல் நாள் காலையில் நடந்த ஊர்வலம் பற்றிய உளவுத்துறை செய்தியே, பார்ப்பன பாசிச ஜெயாவையும், இராம.கோபாலனையும் பீதிஅடையச் செய்திருக்கும். தில்லி பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியரும், ''நிஷாந்த்'' என்ற வீதி நாடகக் குழுவின் முன்னணிச் செயல்வீரருமான தோழர் சம்சுல் இசுலாம் ஊர்வலத்தைத் தொடங்கி வைத்தார். அதோடு, தோழர் சம்சுல் இசுலாம் அமெரிக்கக் கொடியை அங்கியாகவும், ஜார்ஜ் புஷ்ஷின் முகமூடியையும் அணிந்து கொண்டு, வாஜ்பாயின் முகமூடியை அணிந்திருந்த மற்றொரு தோழரின் முதுகில் சவாரி செய்து கொண்டு, அமெரிக்கா ஆர்.எஸ்.எஸ். மூலம் இந்தியாவை அடிமைப்படுத்திவருவதை அம்பலப்படுத்தி, ஊர்வலத்தின் முகப்பில் நடித்துக் காட்டி வந்தார்.

பார்ப்பன பயங்கரவாதத்தை வீழ்த்த அணிதிரண்ட மாநாட்டுப் பேரணி.




கிட்டதட்ட மூவாயிரத்துக்கும் அதிகமான தோழர்களும், ஆதரவாளர்களும் செங்கொடியை ஏந்தி வந்த இந்த ஊர்வலம், தஞ்சை நகரின் கீழவாசலில் இருந்து தொடங்கி, மூன்று–நான்கு கிலோ மீட்டர் பயணம் செய்து, மாநாட்டுத் திடலை வந்தடைந்தது.

ஜெயாவையும், சங்கராச்சாரியையும், இந்து முன்னணியையும், மதமாற்றத்தடைச் சட்டத்தையும், ஆட்குறைப்பையும் பொடாவையும், தனியார்மயத்தையும் எதிர்த்தும், அம்பலப்படுத்தியும் எழுப்பப்பட்ட முழக்கங்கள், ஊர்வலம் சென்ற பாதையில் கூடி நின்ற மக்களை, ஓர் அடி கூட அசையவிடாமல் செய்தது.



மாநாட்டின் முதல் நாள் கருத்தரங்க நிகழ்ச்சிகளுக்கு ம.க.இ.க. மாநிலச் செயற்குழு உறுப்பினர் தோழர் **கதிரவன்** தலைமையேற்றார். அவரது தலைமையுரை, **''பார்ப்பன பயங்கரவாதம் என்று ஏன் குறிப்பிடுகிறோம்?''** என்பதனை விளக்குவதாக அமைந்தது.

''உன் சாதித் தொழிலைத்தான் நீ செய்ய வேண்டும்! இதை மீறினால் தண்டனை – இதுதான் பார்ப்பனீயம், இப்பார்ப்பனீயத்தை மீறி தவம் செய்த சூத்திரன் சம்புகனை ஆரிய இனப் பாதுகாவலன் இராமன் கொலை செய்தது தொடங்கி, திண்ணியத்தில் தாழ்த்தப்பட்டோரின் வாயில் மலத்தைத் திணித்தது வரை, வரலாறு நெடுகிலும் பார்ப்பன பயங்கரவாதத்தைக் காண முடியும்'' எனக் குறிப்பிட்ட தோழர் கதிரவன், ''ம.க.இ.க., இந்தப் பார்ப்பன பயங்கரவாதத்தை எதிர்த்துப் பல ஆண்டுகளாகவே தொடர்ந்து போராடி வருகிறது. சிறீரங்கம் கோயில் கருவறை நுழைவுப் போராட்டத்தை நடத்தினோம். பார்ப்பன பண்பாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிராக கடந்த ஒன்பது ஆண்டுகளாக தமிழ் மக்கள் இசை விழாவை நடத்தி வருகிறோம். அவற்றின் தொடர்ச்சியாகவே, இம்மாநாட்டைக் காண வேண்டும்'' எனக் கூறினார்.

இத்தலைமையுரையை அடுத்து ம.க.இ.க. பொதுச் செயலாளர் தோழர் **மருதையன்**



படிப்பகம்

www.padippakam.com



முதன்மை உரையாற்றினார். **''பார்ப்பன பயங்கரவாதத்தை எப்படி முறியடிப்பது என்பதற்காக நடத்தப்படும் மாநாடு இது''** என மாநாட்டின் நோக்கத்தைச் சுட்டிக் காட்டிய அவர், ''மற்ற ஓட்டுக்கட்சிகளைப் போல பா.ஜ.க.வையும் பார்க்க முடியாது; கொள்கை, சித்தாந்த வெறிகொண்ட பாசிச இயக்கம் அது. முசுலீம்கள் அனைவரும் சந்தேகத்துக்குரியவர்கள் என்ற பா.ஜ.க.வின் கண்ணோட்டம் சாதாரண மக்களின் மூளையிலும் ஊறத் தொடங்கிவிட்ட'' அபாயத்தை விவரித்தார்.

ஜெயப்பிரகாஷ் நாராயணன் தொடங்கி வை.கோ. வரையிலும் பல்வேறு மதச்சார்பற்ற தலைவர்களும் தன்னலம் பாராமல் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்குச் சேவை செய்திருப்பதை, கடந்த கால வரலாற்றில் இருந்து எடுத்துக்காட்டி, அவர்களின் மதச்சார்பின்மை முகமூடியைத் திரை கிழித்த தோழர் மருதையன், மதச்சார்பற்ற ஓட்டுக்கட்சிகள், இந்து மதவெறியின் இடதுகரமாகச் செயல்படுவதாகக் குற்றஞ்சாட்டினார்.

''போலீசு, இராணுவத்திற்கு வெளியே கொள்கைரீதியாகத் திரட்டப்பட்ட படையைக் கட்டியமைத்திருக்கிறது ஆர்.எஸ்.எஸ். இப்படிப்பட்ட எதிர்ப்புரட்சி கும்பல் படையை, அதற்கு எதிரான கொள்கை ரீதியாகத் திரட்டப்பட்ட படை இல்லாமல் வீழ்த்த முடியாது. இது வன்முறை என்றால், தீவிரவாதம் என்றால், ஆர்.எஸ்.எஸ்.ஐ வீழ்த்த வரலாற்றுக்கு நாணயமான வேறு வழி சொல்லுங்கள்'' என்ற கேள்வியை, மதச்சார்பற்ற ஓட்டுக்கட்சிகளைப் பார்த்து எழுப்பினார்.



**''பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களை இந்துத்துவம் விழுங்கியது எப்படி? குஜராத் அளிக்கும் படிப்பினை''** எனும் தலைப்பில் மும்பையிலுள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் பேராசிரியரும், மதச்சார்பின்மைக்காகப் போராடும் ''ஏக்தா'' என்ற அமைப்பின் உறுப்பினருமான **ராம் புனியானி** உரையாற்றினார்.

பேரா. ராம் புனியானி தனது உரையில், ''1980-களின் தொடக்கத்தில் தாழ்த்தப்பட்டோருக்கு எதிராகக் கலவரங்களை நடத்தி மேல்சாதியினரைத் தன் பக்கம் இழுத்துக் கொண்ட ஆர்.எஸ்.எஸ்., 1985-க்குப்பின் முசுலீம்களை எதிரியாகக் காட்டியும், இந்து ஒற்றுமையில்தான் தாழ்த்தப்பட்டோரின் நலன் பாதுகாக்கப்படும் எனப் பிரச்சாரம் செய்தும் தாழ்த்தப்பட்ட சாதியினரை அணி திரட்டியது'' என கடந்த இருபது ஆண்டுகளில் குஜராத்தில் ஆர்.எஸ்.எஸ்.இன் வளர்ச்சியை விவரித்ததோடு, ''தாழ்த்தப்பட்டோர் இயக்கங்கள் பிளவுபட்டு பலவீனமடைந்ததும், தாராளமயத்தின் பின் குஜராத் தலைநகர் அகமதாபாத் நகரில் மட்டும் ஒரு இலட்சம் தாழ்த்தப்பட்டோர் வேலையிழந்து நிர்க்கதியாய் நின்றதும் ஆர்.எஸ்.எஸ்.க்குச் சாதகமாக அமைந்தது'' எனச் சுட்டிக் காட்டினார்.

''மேல் சாதியினருக்கு ராமர்; சரசுவதி. ஆதிவாசிகளுக்கு ராம பக்தனான அனுமான், சபரி'' என சாதி ஏற்றத் தாழ்வுக்குத் தகுந்தபடி கடவுள்களைக் கொண்டு செல்லும் ஆர்.எஸ்.எஸ்.இன் சாதித் திமிரை அம்பலப்படுத்திய அவர், ''கல்வி, வேலைவாய்ப்பு, குடிநீர், சுகாதாரம் - இவைதான் மக்களின் அடிப்படை பிரச்சினைகள்; ராமர் கோயில் அல்ல'' எனச் சுட்டிக் காட்டினார். ''சிறு பான்மையினருக்கு எதிரான ஆர்.எஸ்.எஸ்.இன் வெறுப்பு அரசியலை வீழ்த்த, பல்வேறு தேசிய, சிறுபான்மை இன மக்களின் பண்பாட்டை ஒருங்கிணைக்க வேண்டியது அவசியம்'' எனத் தனது உரையில் முத்தாய்ப்பாகக் குறிப்பிட்டார், பேரா. ராம் புனியானி.



**''நாட்டார் தெய்வ வழிபாட்டின் பார்ப்பன மயமாக்கம்''** எனும் தலைப்பில் உரையாற்றிய பாளையங்கோட்டையைச் சேர்ந்த **திரு. சிவக்குமரன்,** ''நாட்டார் தெய்வங்களை, சிறு தெய்வங்கள் எனக் குறிப்பிடுவது பார்ப்பன சூழ்ச்சி; தெய்வங்களில் பெரியது, சிறியது என்ற ஏற்றத்தாழ்வுகளைப் பார்க்க முடியாது'' என ஆணித்தரமாக விளக்கினார்.

''மூத்த தேவி எனும் பெயரில் தமிழர்கள் வணங்கி வந்த தெய்வத்தைத் தான் மூதேவி எனப் பார்ப்பனர்கள் அவமானப் படுத்துகிறார்கள். விவசாய சமூகத்தின் தெய்வமான, கலப்பையை ஆயுதமாகக் கொண்ட பரசுராமனை, கிருஷ்ணனின் அண்ணனாக விழுங்கிக் கொண்டார்கள். வெள்ளையன், வெள்ளைச்சாமி ஆகிய தமிழ்த் தெய்வங்களைக் கொன்றார்கள்.''

''அனைவருக்கும் கல்வி கொடுக்க வேண்டும் என்பதற்கு எதிரானது பார்ப்பனீயம்; அது, பெண் கல்விக்கும் எதிரானது. அப்படியிருக்கையில், சரசுவதி என்ற பெண் தெய்வம் கல்விக் கடவுளானது எப்படி எனக் கேட்டால், இந்தத் தெய்வம் சமணர்களிடமிருந்து பார்ப்பனர்களால் பிடுங்கப்பட்டது'' என பார்ப்பனர்களால் விழுங்கப்பட்ட, கொல்லப்பட்ட, அவமானப்படுத்தப்படும் தெய்வங்களின் வரலாறை விவரித்த திரு.சிவக்குமரன், ''ஊரான் கோயிலை இடிப்பது பார்ப்பனர்களின் பண்பாடு'' என்றும் அம்பலப்படுத்தினார்.

''இந்து மதத்தையும், சாதியையும் பிரித்துப் பார்க்கக் கூடாது'' என அழுந்தக் கூறிய அவர், ''தமிழர்களுக்கு தெய்வ வழிபாடும், சடங்குகளும் தான் உண்டு; மதம் கிடையாது'' எனச் சுட்டிக்காட்டினார்.



மும்பையைச் சேர்ந்த திரு. அஸ்கார் அலி எஞ்சினீயர், **''இசுலாமிய மக்களும் இசுலாமிய பயங்கரவாதமும்''** எனும் தலைப்பில் உரையாற்றுவதற்கு இசைவு தெரிவித்திருந்தார். ஆனால், தவிர்க்க இயலாத காரணங்களினால் திரு.அஸ்கார் அலி எஞ்சி



படிப்பகம்

www.padippakam.com

னீயர் வர இயலாமல் போனதால், அவரருக்குப் பதிலாக அவரது மகனும், ''சமூகம் மற்றும் மதச்சார்பின்மைக்கான ஆய்வு மையம்'' எனும் அமைப்பைச் சேர்ந்தவருமான **திரு. இர்ஃபான் அலி எஞ்சினீயர்** அத்தலைப்பில் உரையாற்றினார்.

''இட்லரையும், முசோலினியையும், நாஜிசத்தையும், பாசிசத்தையும் ஆதரித்ததோடு, அவர்களிடமிருந்து இனவெறி அரசியலைக் கற்றுக் கொண்ட இந்து மதவெறியர்கள், இந்திய நாட்டு முசுலீம்களை அந்நியர்கள் என்றும், அந்நியர்களுக்கு விசுவாசமானவர்கள் என்றும் குற்றஞ் சுமத்துவது வேடிக்கையானது'' எனக்குறிப்பிட்ட இர்ஃபான் அலி எஞ்சினீயர், இந்நாட்டு முஸ்லீம்கள் இம்மண்ணோடு ஒன்றிப்போய் வாழ்ந்து வருவதற்கு பல்வேறு உதாரணங்களை எடுத்துக் காட்டினார்.

தனது தந்தையார் கேரளத்தைச் சேர்ந்த ஒரு முசுலீம் பெண்ணிடம் பேட்டி காணச் சென்ற பொழுது, அப்பெண் அவரிடம், ''மலையாளம் தெரியாத நீங்கள் எப்படி முசுலீமாக இருக்க முடியும்?'' எனக் கேட்டார்.

''அப்பெண்ணைப் பொருத்தவரை மலையாள மொழியையும் முசுலீம்களையும் பிரித்துப் பார்க்க முடியாது'' என விளக்கிய திரு. இர்ஃபான், ''அரியானா மாநிலத்தைச் சேர்ந்த மேவார் பகுதியில் வாழும் மியோ முசுலீம்கள் இராமாயணம், மகாபாரதக் கதைகளைக் கூறுவதில் நிபுணத்துவம் உடையவர்கள். குஜராத்தில் வாழும் பரிணாம் பந்தி முசுலீம்கள் இந்து –இசுலாமிய பாரம்பரியப்படி வாழ்பவர்கள். இவர்களது புனித நூல் கீதையும், குரானும் இணைந்ததாகும்'' என இம்மண்ணிற்கும், இசுலாமியர்களுக்கும் இருந்துவரும் பிணைப்பை எடுத்துக் கூறினார்.

''இந்து மதவெறியர்களின் தாக்குதலின் காரணமாகவே, இசுலாமியர்கள் மதத் தீவிரவாதம் பக்கம் போவதாக''க் குறிப்பிட்ட திரு இர்ஃபான், ''இந்த மத கடுங்கோட்பாடுவாதிகள், முசுலீம் மக்கள் தொகையுடன் ஒப்பிடும் பொழுது, மிகச் சிலர்தான் என்றாலும், இசுலாமிய சமூகத்தில் இந்தப் போக்கு வளர வேண்டும் என்றுதான் ஆர்.எஸ்.எஸ். விரும்புகிறது'' என்றார்.



முதல் நாள் கருத்தரங்கின் நிறைவாக **''இந்தியத் தத்துவ மரபு, இந்து தத்துவ மரபில்லை''** எனும் தலைப்பில் பேராசிரியர் **பெரியார் தாசன்** உரையாற்றினர். பார்ப்பனச் சாதி சங்கத் தலைவர் காஞ்சி சங்கராச்சாரி தொடங்கி அச்சாதியைச் சேர்ந்த பண்டித சிகாமணிகள் வரை அனைவரையும் கேலி, கிண்டல் செய்தும், சவாலுக்கு அழைத்தும், கிட்டதட்ட இரண்டு மணி நேரம் பேரா.பெரியார்தாசன் ஆற்றிய உரை அரங்கத்தில் மிகுந்த வரவேற்பைப் பெற்றது.

''சூடும், சொரணையும் உள்ளவர்கள் தமிழகத்தில் இல்லாமல் போய்விடவில்லை என்பதற்கு இக்கூட்டமே சாட்சி'' எனக் குறிப்பிட்டுத் தனது உரையைத் தொடங்கிய பேரா.பெரியார்தாசன், ''சாங்கியம், யோகம், மீமாம்சம், வைசேசிகம், நியாயம், வேதாந்தம், பௌத்தம், சைவம் – இவைதான் இந்தியத் தத்துவ மரபு''

''சாங்கியம் – சிந்தனையை ஒழுங்குபடுத்துவது; இந்து மதம் சிந்திக்கவே கூடாது எனும் பொழுது, சாங்கியம் எப்படி இந்து மரபாக இருக்கமுடியும்?''

''யோகம் – மனமும், உடலும் இணைந்து செயல்படுவது; மீமாம்சம் – செயல்திறனைக் கூறுவது'' என இந்தியத் தத்துவ மரபின் சிறப்புகளை விளக்கிய பேரா.பெரியார்தாசன், ''இம்மரபை இந்து மரபு ஏற்றுக் கொள்வதில்லை. அவர்களின் மரபு வேதம், உபநிடதம், சாஸ்திரம், ஆரண்யங்கள், புராணம், இதிகாசம்'' என இந்தியத் தத்துவ மரபையும், இந்துத் தத்துவ மரபையும் வேறுபடுத்திக் காட்டினார்.

''ரிக் வேதப் பாடல்கள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவை; முட்டாள் தனமானவை. அதில் அறிவுக்குப் பொருந்தக் கூடியவை எல்லாம் திராவிட மரபில் இருந்து சுருட்டப்பட்டவை. அதைத் திராவிட ரிக்கு என ஆரியர்களே குறிப்பிட்டுள்ளனர்.''

''சாம வேதம், கும்பல் பாலியல் வன்புணர்ச்சியைப் பற்றிப் பேசுகிறது. பார்ப்பனர்களோ இப்பாலியல் வன்கொடுமையை கலைஞானம் எனத் தூக்கிக் கொண்டாடுகிறார்கள்''

''சாதிய ஏற்றத்தாழ்வுகளையும், சமத்துவமின்மையையும் பற்றிப் பேசுவது மனுசாஸ்திரம்''

''பிளாட்பாரத்தில் குடியிருப்பவனுக்குத் தேவையில்லாதது வாஸ்து சாஸ்திரம்''

–என இந்துத் தத்துவ மரபுகளை ஒவ்வொன்றாக அம்பலப் படுத்தினார், பேரா.பெரியார்தாசன். ''இதற்கு மேல் இந்துத் தத்துவ மரபில் எந்த வெங்காயமும் இல்லை'' என்ற அவர் ''யசுர்வேதி, சாமவேதி.... சீதபேதி எனத் தனக்குத் தானே பட்டம் போட்டுக்கொண்டுள்ள பார்ப்பன பண்டிதர்கள் யாராவது இதை மறுக்க முடியுமா?'' எனத் தர்க்கத்துக்கும் அழைத்தார்.



கருத்தரங்கின் இரண்டாம் நாள் அமர்வு, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் பொதுச்செயலர் தோழர் **சுப. தங்கராசுவின்** தலைமையில் நடந்தது. அவர், தனது தலைமை உரையில், ''பா.ஜ.க., தனது கூட்டணிக் கட்சிகளோடு பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்காமல், ஆர்.எஸ்.எஸ். உடன் தான் விவாதிக்கிறது. எனவே, நடப்பது ஆர்.எஸ்.எஸ். ஆட்சிதான். இப்பார்பன பயங்கரவாதத்தைத் தூக்கியெறிய ஒடுக்கப்பட்டவர்களின் ஐக்கியம் தேவை'' என வலியுறுத்தினார்.

**''தேசபக்த வேடம் போடும் தேசத் துரோகிகள்''** எனும் தலைப்பில் தில்லிப் பல்கலைக்கழகப் பேராசிரியரும், ''நிஷாந்த்'' என்ற வீதி நாடகக் குழுவை இயக்கி வருபவருமான தோழர் **சம்சுல் இசுலாம்,** உரையாற்றினார்.

''நான் மார்க்சிய – லெனினிய – மாவோ சிந்தனையை ஏற்றுக் கொண்டவன்'' எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட தோழர் சம்சுல் இசுலாம், ''சமசுகிருத ஆதிக்கத்தை ஏற்காத மொழி'' எனத் தமிழைப் பாராட்டினார்.

இந்து ராஷ்டிரம் தான் பிரச்சினைக்குத் தீர்வு என்கிறது,



படிப்பகம்

www.padippakam.com

# பார்ப்பன பயங்கரவாதத்தின் இரத்த சாட்சியங்கள்

''இந்துத்துவம்'' என்றும், ''பாரதக் கலாச்சார''மென்றும் ஆர்.எஸ்.எஸ். கும்பலால் அழைக்கப்படும் பார்ப்பன பயங்கரவாதம், இமயம் முதல் குமரி வரை எண்ணிலடங்கா மக்களைப் பலி கொண்டிருக்கிறது.

அவர்களுள் சிலர் குஜராத்தில், திண்ணியத்தில், மீனாட்சி புரத்தில், கவுண்டம்பட்டியில், வைக்கத்தில் பார்ப்பன பயங்கரவாதத்தின் கொடூரத்தை நேரிலே கண்டவர்கள்; அந்த மனு தர்ம தண்டனையை அனுபவித்தவர்கள்; அந்தக் கொடுமையை, அதற்கு எதிராக அவர்கள் நடத்திய போராட்டத்தை மாநாட்டில் விவரித்தார்கள்.

**வைக்கம் போராட்டம்**

1930-களில் கேரளாவின் வைக்கத்தில் தந்தை பெரியார் தலைமையில் நடந்த ஆலய நுழைவுப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்ட போராளி **விசுவநாதன்**, ''அன்று திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் மனுதர்மம் எப்படியெல்லாம் ஆட்டம் போட்டது'' என விவரித்தார்.



''வைக்கம் போராட்டம், ஆலய நுழைவுப் போராட்டம் மட்டும் அல்ல; ஏனென்றால், அன்று வைக்கத்தில் கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களில் நாய்களும், நரிகளும் நடந்து போகலாம். ஆனால், தாழ்த்தப்பட்டவன் நுழைவதற்குக் கூட அனுமதி கிடையாது''

''வைக்கம் போராட்டத்திற்கு 197 ஆண்டுகளுக்கு முன்பே திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் கோவில் நுழைவுப் போராட்டம் தொடங்கிவிட்டது. அப்போராட்டத்தில் கலந்து கொண்டவர்களின் தலையை அறுத்து, குளத்தில் வீசியெறிந்தான் மன்னன். தாழ்த்தப்பட்டோரின் இரத்தத்தால் நிறம் மாறிப் போன அக்குளம் தலைவாய்க்குளம் என்று அழைக்கப் பட்டது. இன்று வைக்கம் நகரின் பேருந்து நிலையத்தைத் தோண்டினால், அந்த இரத்தத்தின் சுவடுகளைப் பார்க்கலாம்.''

''தந்தை பெரியார் வைக்கம் போராட்டத்தில் தனது மனைவி நாகம்மை, தமக்கை கண்ணம்மாவுடன் கலந்து கொண்டார். போராட்டத்தைப் பிசுபிசுக்க வைக்கும் சூழ்ச்சியோடு, பெரியாரைக் கைது செய்த அரசு, அவரை பத்து மாவட்டம் தள்ளிச் சிறை வைத்தது. பெரியார் கைது செய்யப்பட்டவுடன், போராட்டம் நாகம்மை தலைமையில் தொடர்ந்தது.''

''வைக்கம் போராட்டம் 603 நாட்கள் நடந்தது. பருவமழை கொட்டித் தீர்த்த பொழுதில் கூட போராட்டம் ஓய்ந்துவிடவில்லை. போராளிகள், கழுத்தளவு தண்ணீரில் நின்று கொண்டு போராடினார்கள். அதன் பிறகு திருவிதாங்கூர் சமஸ்தானம் பணிந்தது.''

**துலேனா படுகொலை**

அரியானா மாநிலம் துலேனா கிராமத்தில் பசுமாட்டின் தோலை உரிப்பதாகக் கூறி, படுகொலை செய்யப்பட்ட ஐந்து தாழ்த்தப்பட்டோரின் உறவினர்கள் இம்மாநாட்டில் கலந்து கொள்வதாக இருந்தது. அவர்கள் தவிர்க்க இயலாத காரணத்தால், வரஇயலாமல் போனதால், அச்சம்பலம் பற்றி நேரில் சென்று விசாரணை நடத்திய தோழர் சம்சுல் இசுலாம், அப்படுகொலை பற்றி விவரித்தார்.

''இப்படுகொலை தசரா பண்டிகை அன்று நடந்தது. இப்பண்டிகை, ராமன், ராவணனைக் கொன்றதைக் குறிப்பது. மாவட்ட ஆட்சியாளர், போலீசு துணைக் கண்காணிப்பாளர், வட்டார வளர்ச்சி அதிகாரி - இவர்களின் கண் முன்னே, அந்த ஐந்து தாழ்த்தப்பட்டவர்களையும், வி.இ.ப. கும்பல் ''கோமாதா வாழ்க!'' எனக் கத்திக் கொண்டே கொன்றது. கொல்லப்பட்டவர்களில் இரண்டு பேர் உயிரோடு கொளுத்தப்பட்டனர்.

''துலேனா கிராமம், தலைநகர் தில்லியில் இருந்து 80 கிலோ மீட்டர் தூரத்தில்தான் உள்ளது. ஆனாலும், குற்றவாளிகளுள் ஒருவரும் தண்டிக்கப்படவில்லை. மாறாக, இறந்து போனவர்களின் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. கொல்லப்பட்டவர்களின் குடும்பத்தினர், மேல்சாதி வெறியர்களுக்குப் பயந்து, கிராமத்தை விட்டு வெளியேறிச் சென்றுவிட்டனர்.''

''1857-ஆம் ஆண்டு நடந்த முதல் இந்திய சுதந்திரப் போராட்டம், மிகத் தீவிரமாக நடந்த இடங்களுள் ஒன்று



ஆர்.எஸ்.எஸ். மும்பய் சிவப்பு விளக்குப் பகுதியில் விபச்சாரத்தில் தள்ளப்பட்டுள்ள பெண்களுள் 65 சதவீதப் பெண்கள் இந்து ராஷ்டிர நாடான நேபாளத்தைச் சேர்ந்தவர்கள்'' என இந்து ராஷ்டிரத்தின் மக்கள் விரோதத் தன்மையை அம்பலப்படுத்திய தோழர் சம்சுல் இசுலாம், ''இந்துத்துவம் என்பது பார்ப்பன நலனைக் குறிப்பது'' என்றார்.

சுதந்திரப் போராட்டத்தில் ஆர்.எஸ்.எஸ். பங்கெடுத்துக் கொண்டதற்கு ஒரு சிறிய வரலாற்று ஆதாரம் கூடக் கிடையாது எனக் குறிப்பிட்ட சம்சுல் இசுலாம், 1942-ஆம் ஆண்டு நடந்த வெள்ளையனே வெளியேறு போராட்டத்தின் பொழுது ஆர்.எஸ்.எஸ்., ''நாங்கள் பிரிட்டிசாரைக் குறைகூற விரும்பவில்லை'' எனக் கூறி ஒதுங்கிக் கொண்டதைக் குறிப்பிட்டார்.

''பெரிய மீன் சின்னமீனை விழுங்கத்தான் செய்யும்'' என ஏகாதிபத்தியத்திற்கு வக்காலத்து வாங்கிய ஆர்.எஸ்.எஸ்.தான், 1989-90-ஆம் ஆண்டு, உலகமயம் நாட்டைக் கவ்வத் தொடங்கிய அதேபொழுதில், ராமர் கோயில் பிரச்சினையைக் கையில் எடுத்து, ஏகாதிபத்தியத்திற்குச் சேவை செய்கிறது'' என ஆர்.எஸ்.எஸ்.இன் தேசத் துரோகத்தைத் தோலுரித்துக் காட்டினார்.

''அம்பேத்கருக்குப் பிந்தைய தலித் இயக்கங்கள்'' எனும் நூலின் ஆசிரியரான **ஆனந்த் தெல்தும்டே** தவிர்க்க இயலாத காரணங்களினால் கருத்தரங்கில் கலந்து கொள்ளவில்லை


படிப்பகம்

துலேனா கிராமம் அமைந்திருக்கும் சஜ்ஜார் மாவட்டம். இன்று, அது இந்து மதவெறிக் கும்பலின் பிடியில்....''

**குஜராத் – முசுலீம் இனப்படுகொலை**

**ஆயிஷா பீபி:** இந்து மதவெறிக் கும்பலின் பிடிக்குள் சிக்கிக் கொள்ளாமல் தப்பியோடும் பொழுது, அகமதாபாத் நகரமே முசுலீம் மக்களின் பிணக் காடாக மாறிப் போனதைக் கண்டவர், இவர். பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டு, உயிரோடு கொளுத்தப்பட்ட ஒரு முசுலீம் பெண், பாதி எரிந்த நிலையில், அந்த வேதனையும் மீறி, ''அம்மணமாகக் கிடக்கும் தன் உடலின் மீது எதையாவது போட்டு மூடுமாறுக்கூற'' கட்டிய சேலையைத் தவிரக் கையில் வேறெதுவும் இல்லாத ஆயிஷா பீபி, ''தனது சேலையைக் கிழித்து, அப்பெண்ணின் நிர்வாணத்தை மறைத்ததாக''க் கூறினார். ''முசுலீம்கள் இங்கு இருக்க உரிமையில்லை என்கிறார்கள். நாளை என்ன நடக்கும் என்பது எங்களுக்குத் தெரியாது. என்ன நடந்தாலும், என் சாவு இந்த மண்ணில்தான்!'' என்று குமுறினார்.



**ஷகீல் அகமது:** ஜரிகை வேலைப்பாடு செய்யும் கலைஞனான இவர், பீகாரைச் சேர்ந்தவர்; பிழைப்பு தேடி குஜராத்துக்கு வந்து, அகமதாபாத்தில் குடியேறிய 'அந்நியர்'. ''எங்களைத் தாக்க வந்த இந்து வெறியர்களைத் திருப்பித் தாக்க, எங்கள் கைகளில் ஒரு கல்கூட கிடைக்கவில்லை. கலவரத்திற்கு இரண்டு நாள் முன்புதான் நகராட்சியில் இருந்துவந்து தெருவில் கிடந்த கற்களையெல்லாம் வாரிக் கொண்டு போனார்கள். எங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள வழியே இல்லை. முசுலீம் இருமினால் கூடக் குற்றம்; ஆனால், குண்டு வீசியவன் பெரிய ஆள்'' என முசுலீம் மக்கள் தற்காத்துக் கொள்ளக் கூட முடியாத நிலையைக் கூறிய இவர், ''உண்மையை மறைக்க முடியாது; காகிதப் பூ மணக்காது'' எனக் கவிதையின் மூலம் எதிர்காலத்தை நம்பிக்கையோடு பார்த்தார்.

**சோலங்கி:** தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த இவர், ஒரு திருமணத்திற்காக அகமதாபாத்திற்குச் சென்ற பொழுது கலவரத்தில் சிக்கிக் கொண்டார். அகமதாபாத் பற்றி எரிந்து வானம் புகை மண்டலத்தால் நிரம்பியதையும், அதற்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் துணை போனதையும் வேதனையோடு பகிர்ந்து கொண்டார்.

**மரியம் பீபி:** இந்து மதவெறிக் கும்பல் இவரது வீட்டைச் சூழ்ந்து கொண்ட பொழுது, முடமான தனது 18 வயது மகனை தூக்கிக் கொண்டு எப்படி தப்பியோடுவது எனத் தவித்துப் போனார், மரியம் பீபி. அவரது மகனோ, ''என்னைப் பார்த்த பிறகு, யாரும் ஒன்றும் செய்ய மாட்டார்கள்; நீ ஓடிப் போய்விடு'' என நம்பிக்கையோடு கூறியிருக்கிறான். ஆனால், அந்த நம்பிக்கை அடுத்த நிமிடம் நொறுங்கிப் போனது. அவரது மகனின் மீது பெட்ரோலையும், திராவகத்தையும் வீசி, மரியம் பீபியின் கண்முன்னே எரித்துக் கொன்றார்கள், இந்து மத வெறியர்கள்.

மகன் இரக்கமில்லாமல் கொல்லப்பட்டதை எந்தத் தாயால் அழாமல் நினைவு கூற முடியும்? மரியம் பீவியும் மேடையிலேயே கதறியழுதார். அழுகையின் ஊடே, தனக்கு இழைக்கப்பட்ட அநீதியை, கொடுமையை ஆயிரக்கணக்கான மக்களின் முன் எடுத்துக் கூறி, நீதி கேட்டார்.

**சகாபுதீன் ஷேக்:** ''மதச்சார்பின்மைக்கான மக்கள் அமைப்பு'' என்ற அமைப்பைச் சேர்ந்த சகாபுதீன் ஷேக், ''கோத்ரா சம்பவம் நடக்காமல் இருந்தால் கூட குஜாத்தில் இனப் படுகொலை நடந்திருக்கும்; குஜராத்தைப் பூகம்பம் தாக்கியிருக்காவிட்டால், இந்தக் கலவரம் அப்பொழுதே நடந்திருக்கும். இதை எனது இந்து நண்பர்களே கூறினார்கள்.''

''கோத்ராவில் ரயில் பெட்டி எரிந்த அன்று அதைப் பற்றிச் செய்தி வெளியிட்ட உள்ளூர் பத்திரிகைகள், ரயில் பெட்டி உள்ளிருந்தே எரிந்ததாகக் குறிப்பிட்டுள்ளன.''

''தமிழ்நாடு, மதச்சார்பின்மையின் பூமி. அதைப் பார்க்கும் பொழுது எங்களுக்கு நம்பிக்கை வருகிறது. கடைசி வரை நாங்கள் போராடுவோம்'' என்றார்.

**அய்யா வைகுந்தர் வழிபாடு**

பார்ப்பன வழிபாட்டுக்கு எதிரானது அய்யா வைகுந்தர் வழிபாடு. பார்த்தாலே தீட்டு என பார்ப்பனக் கும்பலால் அடக்கி ஒடுக்கப்பட்ட சாணார் சாதியைச் சேர்ந்த முத்துக் குட்டி என்பவரால் 172 ஆண்டுகளுக்கு முன்பு தென் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் அய்யா வைகுந்தர் வழிபாடு தொடங்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் வைகுந்தபுரத்தில் இந்த வழிபாட்டுக்கான கோயில் உள்ளது.

பார்ப்பன பயங்கரவாதத்தால் சாணார் சாதி மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டதை முத்துக்குட்டி, தனது அகிலத் திரட்டு நூலில் பதிவு செய்திருக்கிறார். நேருரை ஆற்றிய ஐயா வைகுந்தர் வழிபாட்டைச் சேர்ந்த **சுயம்பு** என்பவரும், கருத்தரங்கில் உரையாற்றிய வழக்கறிஞர் **லஜபதிராயும்** சாணர்களுக்கும், ஈழவர்



என்றும், **''மறுகாலனியாதிக்கப் பயங்கரவாதமும் மனுதரும பயங்கரவாதமும்''** எனும் தலைப்பில் அவர் எழுதி அனுப்பியிருந்த ஆங்கிலக் கட்டுரை, கருத்தரங்கில் தோழர் இளங்கோ சுப்பிரமணியத்தால் மொழிபெயர்க்கப்பட்டு வாசிக்கப்பட்டது.

''உலக மயமும், இந்துத்துவமும் இருமுனைத் தாக்குதல்களை நடத்துகின்றன'' என அக்கட்டுரையில் குறிப்பிட்டிருந்த முன்னவர் ஆனந்த் தெல்தும்டே, ''இன்று உலக அளவில் நடைபெற்றுவரும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களில் தன்னார்வக் குழுக்களும் பங்கு கொள்கின்றன. எனவே, இத்தகைய போராட்டங்களில் எந்த அளவிற்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு உள்ளது எனப் பரிசீலிக்க வேண்டும்'' எனக் கேட்டுக் கொண்டார்.

''இந்துத்துவ அபாயம் பற்றிப் பேசும் சிறுபான்மையினர் உலகமயத்தைப் பற்றிக் கவலை கொள்வதில்லை'' எனச் சுட்டிக் காட்டியிருந்த அவர், ''உலக மயம் தனி நபர் சுதந்திரத்தைக் கோருகிறது. இந்துத்துவம் மேல்சாதி சுதந்திரத்தைக் கோருகிறது'' என உலகமயத்தையும், இந்துத்துவத்தையும் பல்வேறு கோணங்களில் ஒப்பிட்டார். ''இந்த இரண்டு அபாயங்களையும் தேர்தல் பாதை மூலம் அல்ல; தெருப் போராட்டத்தின் மூலமே முறியடிக்க முடியும்'' என அவர் வழிகாட்டினார்.

**''இந்திய அரசமைப்பு மதச்சார்பற்றதா?''** எனும் பொருள் குறித்து கரூர் நகரைச் சேர்ந்த வழக்குரைஞர் தோழர். பி.ஆர்.

www.padippakam.com



களுக்கும் அழைக்கப்பட்ட அநீதியை எடுத்துக் கூறினார்கள்.

''சாணார் வீட்டுப் பெண்கள் மார்பகத்தைத் துணி போட்டு மறைக்கக் கூடாது. அப்பெண்களின் மார்பக வளர்ச்சிக்குக் கூட வரி போடப்பட்டது; ஆண்கள் மீசை வைத்துக் கொண்டால் வரி; பனை ஏறும் தொழிலுக்கான கருவிகளுக்கு வரி. இந்த வரிகளைக் கட்டாவிட்டால், தொண்டூழியம் செய்யவேண்டும்''

''இந்த அடக்கு முறைகளை எதிர்த்த இளைஞர்கள், கிறித்தவ சமயத்திற்கும், முத்துக்குட்டி வழிபாட்டுமுறைக்கும் மாறத் தொடங்கினார்கள். இப்படியே போனால் பல்லக்குத் தூக்கக் கூட ஆள் கிடைக்காது என்ற நிலையில்தான் 1937-இல் இந்து ஆலயப் பிரவேசச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனாலும், கருவறைக்குள் நுழைய முடியாது''

ஆனால் ''இந்த வைகுந்தர் வழிபாட்டு முறையில், கருவறைக்குள் எல்லோரும் நுழையலாம். கருவறையில் விக்கிரக வழிபாடு கிடையாது. மாறாக, கருவறையில் கண்ணாடிதான் இருக்கும்.

''பார்ப்பனர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் மேல் சட்டை அணிவதற்கும், தோளில் துண்டு போடுவதற்கும் தடை விதித்தார்கள். ஆனால், வைகுந்தர் வழிபாட்டில், கோயிலினுள் நுழையும் ஆண்கள், துண்டை தலையில் முண்டாசாகக் கட்டிக் கொண்டுதான் நுழைய வேண்டும். அனைவரும் சேர்ந்து கும்பிட வேண்டும். தமிழ் மொழியில் தான் வழிபாடு நடத்துகிறோம்; எங்கள் வீட்டுச் சடங்குகளில் பார்ப்பனர்களை அனுமதிப்பதில்லை'' எனக் குறிப்பிட்டார், சுயம்பு.

**மீனாட்சிபுரம் மதமாற்றம்**

தீண்டாமைக்கு எதிரான வலுவான எதிர்ப்புக் குரலாகக் கருதப்பட்ட சம்பவம் இது. இச்சம்பவத்தின் பின், பார்ப்பனக் கும்பல், நாடெங்கும் இந்து ஒற்றுமை யாத்திரை நடத்தியது.

பள்ளராக இருந்து முசுலீமாக மதம் மாறிய **முகம்மது இசுமாயிலும், முகம்மது முஸ்தபாவும்** மாநாட்டில் கலந்து கொண்டு, ''முசுலீமாக மதம் மாறுவதற்கு முன்பு'' தங்களின் வாழ்க்கை எப்படி இருந்தது? மதம் மாறிய பின்பு எப்படி இருக்கிறது? என விவரித்தார்கள்.

''எச்சி கிளாஸில் டீ கொடுத்தார்கள்; தேரில் வந்த சாமியைப் பார்க்கப்போன பொழுது தார்க்குச்சியால் குத்தினார்கள். அதனால் சுயமரியாதைக்காக மதம் மாறினோமே தவிர, காசுக்காக மதம் மாறவில்லை.''

''மீனாட்சிபுரத்தில் 300 தாழ்த்தப்பட்ட குடும்பங்கள்தான் மதம் மாறின. ஒரே குடும்பத்தில் அண்ணன் முசுலீமாக மதம் மாறியிருப்பான். தம்பி இந்துவாக இருப்பான். நாங்கள் சடங்கு, வழிபாடு முறைகளில் விட்டுக் கொடுப்பதேயில்லையே தவிர, எங்கள் இந்து சகோதரர்களோடு இன்றும் பாச உணர்வோடுதான் பழகி வருகிறோம்.''

''நாங்கள் மதம் மாறிய பொழுது, எங்களுக்கு வயல் வெளிகளைக் குத்தகைக்குவிடக் கூடாது என திருவாடுதுறை ஆதீனத்திடம் போய்ச் சொன்னார்கள். எந்த மதமாக இருந்தாலென்ன? குத்தகை ஒழுங்காக வந்தால் சரி எனக் கூறிவிட்டார், அவர். மதம் மாறியவர்கள் தாய் மதத்திற்குத் திரும்பிவிட்டதாகக் கூறுவதெல்லாம் சுத்தப் பொய்.''

''ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நெல்லை மாவட்டத்தில் சாதிவெறிக் கலவரம் நடந்த பொழுது, மீனாட்சிபுரம் அமைதியாகத்தான் இருந்தது. என்னுடைய சகோதரன் மீது கைவைத்தால் நாங்கள் வருவோம் என்பதால், மீனாட்சிபுரத்தில் கலவரம் நடக்கவில்லை.''

''சமீபத்தில் மீனாட்சிபுத்தில் இந்து – முசுலீம் மதக் கலவரத்தைத் தூண்டிவிட, ஆர்.எஸ்.எஸ். முயன்று தோற்றுப் போனது. ஏன்னா, இங்க சாதி உணர்வு இல்லை. இதுதான் மதச் சார்பின்மை''



மேலும், திண்ணியத்தில் மேல்சாதி வெறியர்களால் வாயில் மலம் திணிக்கப்பட்ட **கருப்பையாவும், ராமசாமியும்** கவுண்டம்பட்டியில் மூத்திரம் குடிக்க வைக்கப்பட்ட **சங்கனும்** நேரில் கலந்து கொண்டு, தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை எடுத்துக் கூறினார்கள்.

''இன்றும் கூட தாழ்த்தப்பட்டோரை பள்ள நாயே, பற நாயே என அவமானப்படுத்தி அழைக்கும் ஊரில் நான் நிமிர்ந்துவிட்டேன். அதனால் என் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை'' என்றார் சங்கன்.



**குப்புசாமி** உரையாற்றினார் ''சட்டப்படி நாம் இன்னும் சூத்திரரே'' என்ற நூலை ஆக்கிய ஆசிரியர்களுள் தோழர் பி.ஆர்.குப்புசாமியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

''இம்மாநாட்டிற்கு பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு என மிகப் பொருத்தமாகவே தலைப்பு வைக்கப்பட்டுள்ளதாக''ப் பாராட்டிய தோழர் பி.ஆர்.குப்புசாமி, ''இந்து மதத்தைக் காத்து வருவதே பயங்கரவாதம்தான்; சமணர்களைக் கழுவேற்றிக் கொன்றது, இதைத்தான் நிரூபிக்கிறது'' எனக் குறிப்பிட்டார்.

''இந்திய அரசியல் சாசனப் பிரிவுகள் 25,26 மற்றும் 372 ஆகிய மூன்றும் இந்து மதத்திற்குச் சாதகமானவை; குறிப்பாக, பிரிவு 372 வர்ணாசிரம தருமம் தொடரும் எனக் குறிப்பிடுகிறது,'' என்பதை விளக்கிய பி.ஆர்.குப்புசாமி, ''இப்பொழுது உச்சநீதி மன்றம் அனைவரும் அர்ச்சகர் ஆகலாம் என அனுமதித்துள்ளது. ஆனால், சமசுகிருதம் படித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதித்திருக்கிறது. இது புதுப் பார்ப்பனர்களை உருவாக்குவதாகும்'' என ''நீதி''யின் பார்ப்பன மதச் சார்பை அம்பலப்படுத்தினார்.

''அம்பேத்கர் பொது சிவில் சட்டம் கொண்டு வர முயன்ற பொழுது, அதை எதிர்த்தவர்கள் பார்ப்பனர்கள். ஆனால், இப்பொழுது, பொது சிவில் சட்டம் கொண்டு வருவதை முசுலீம்கள்தான் எதிர்ப்பதாக நயவஞ்சக நாடகமாடுகிறது பா.ஜ.க.''


படிப்பகம்

www.padippakam.com

# பார்ப்பன பண்பாட்டுக்

**மா**நாட்டின் இரு நாட்களிலும் இரவு ஏழு மணி தொடங்கி பின்னிரவு வரை, பார்ப்பன பயங்கரவாதத்திற்கு எதிரான புரட்சிகர கலை நிகழ்ச்சிகளும், பார்ப்பன பண்பாட்டுக்கு எதிரான தமிழ் மக்களின் ஆடல், பாடல், இசை நிகழ்ச்சிகளும் நாடகங்களும் நடத்தப்பட்டன.

பார்ப்பன சாதி சங்கத் தலைவனான ஜெயேந்திர சங்கராச்சாரியின் உருவப் பொம்மையை பாடையில் வைத்து, அதற்கு சங்கு ஊதி, சாவு மேளம் அடித்து கலை நிகழ்ச்சிகள் தொடங்கி வைக்கப்பட்டன.

பசுமாட்டை வளர்க்கவோ, பராமரிக்கவோ தெரியாத பார்ப்பனக் கும்பல், அதை கோமாதாவாகக் காட்டி, மேல்சாதி வெறியையும், முசுலீம் எதிர்ப்பு இந்து மதவெறியையும் தூண்டிவிட்டு அரசியல் ஆதாயம் தேட முயலுவதையும் அம்பலப்படுத்தியது, கம்பம் பகுதி வி.வி.மு.வின் நாடகக்குழு நடத்திக் காட்டிய **''அடிமாடு''** நாடகம்.

மதமாற்றத் தடைச் சட்டத்திற்கு ஆதரவு திரட்டுவதற்காக, சங்கராச்சாரி ''சேரி''களுக்கு விஜயம் செய்து கொண்டிருக்கிறார். இப்படியே போனால், நாடோடிகளாக வாழும் குறவர் சமூகத்தைக்கூட, ''இந்து'' வாக்கும் சூழ்ச்சியில் இறங்குவார்கள் என்பதை நகைச்சுவையோடு அம்பலப் படுத்தியது, **''குறவன் குறத்தி ஆட்டம், சங்கராச்சாரி ஓட்டம்''** என்ற நாடகம்.

''தில்லை நடராசனைத் தரிசிக்கக் கிளம்பிய நந்தனை, அவன் சாதியைச் சேர்ந்த சகோதரர்களும் எதிர்த்தார்கள் – பார்ப்பன சதி – சூழ்ச்சிக்குப் பலியாகாதே என்ற உண்மையைக் கூறி'' எனும் புதிய கோணத்தில் இருந்து நந்தனின் கதையை, **''போகாதே! நந்தா, போகாதே!''** எனும் நாடகமாக ஒத்திகை நாடகக் குழுவினர் நிகழ்த்திக் காட்டினர்.




**பார்ப்பன பயங்கரவாதத்திற்கு பாடைகட்டி, சங்கு ஊதி, சாப்பறை அடித்து....**

தப்படிக்க மறுத்ததற்காக கட்டை விரலை இழந்த தாழ்த்தப்பட்டவனின் கதையை **''சாம்பான்''** நாடகமும்; இந்துவோ, முசுலீமோ, இந்து ராஷ்டிரத்தில் உழைக்கும் மக்களுக்கு கோவணம்தான் மிஞ்சியிருக்கும் என்பதை **''லுங்கி''** நாடகமும் எடுத்துக்காட்டின.

''சம்புகன்'' கொலை தொடங்கி குஜராத் முசுலீம் இனப்படுகொலை வழியாக 2000 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் பார்ப்பன பயங்கரவாதத்தையும், அதற்கு எதிரான போராட்டத்தையும் ம.க.இ.க.வின் மையக் கலைக்குழுவினர் இசைக் கோவையாக வடித்து, அரங்கேற்றி நிகழ்த்திக் காட்டினர்.

மேலும், சக்கிலியப் பெண்ணை மணப்பதற்காக, பார்ப்பனச் சாதியைத் துறந்து, சக்கிலியனாக மாறியதால் கொல்லப்பட்ட **முத்துப்பட்டனின் கதை**; பறையில் ''ஜதி'' சொல்ல முடியும் என நிரூபித்த **மகுடாட்டம்**; ரெட்டிப்பாளையம் குழுவினரின் **தப்பாட்டம்**; பார்ப்பன கும்பலின் தமிழ்த்தீட்டை அம்பலப்படுத்திய ஆத்தூர் கோமதி குழுவினரின் **வில்லிசைப் பாடல்**; ''நிஷாந்த்'' குழுவைச் சேர்ந்த தோழர் சம்சுல் இசுலாம், தனது மனைவி, மகளோடு இணைந்து இந்து மதவெறிக்கு எதிராகப் பாடிய இந்தி மொழிப் பாடல்கள்; சிறுவர்களின் இசைநிகழ்ச்சி; முத்தாய்ப்பாக ம.க.இ.க. மையக் கலைக் குழுவினரின் **புரட்சிகர கலை நிகழ்ச்சி** என கலை நிகழ்ச்சிகள் இரண்டு நாட்களிலும் நள்ளிரவு வரை நடந்ததோடு, ஆயிரக்கணக்

---

''பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் மனு தர்மத்தைத் திருத்தி எழுத முயன்ற பொழுது, அதற்கு எதிராகத் திரண்டு, மத விசயங்களில் தலையிடமாட்டோம் என பிரிட்டிஷ் ராணியிடம் மகா சாசனம் எழுதி வாங்கியவர்கள் பார்ப்பனர்கள்.''

''1950–ஆம் ஆண்டு இந்தியா குடியரசான பொழுது, வருணாசிரம தருமத்தைத் தாங்கிப் பிடிக்கும் 372-வது பிரிவைத் தொடர வேண்டும் என்பதற்காக வாதாடியவர் செத்துப் போன சங்கராச்சாரி. அதனால்தான், பார்ப்பனர்கள் அவரை நடமாடும் தெய்வம் எனப் புகழ்ந்தார்கள்''

''தீண்டாமை எனது பிறப்புரிமை எனக் கூறிய பூரி சங்கராச்சாரியும், தீண்டாமை ஷேமகரமானது என்ற காஞ்சி பெரிய சங்கரனும் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவில்லை. தாழ்த்தப்பட்டவர்களை இழிவுபடுத்திப் பேசிய ஜெயேந்திர சங்கராச்சாரி மீது தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது.'' என அம்பலப்படுத்திய அவர், ''அதற்கு மாற்றாக, சமத்துவ நிர்வாகத்தை ஏற்படுத்த நாம் முயல வேண்டும்'' என்றார்.



மேலவளவு பஞ்சாயத்துத் தலைவரான முருகேசன் படுகொலை வழக்கையும், கோவையில் நடந்த போக்குவரத்துக் காவலர் செல்வராசு படுகொலை வழக்கையும் ஒப்பிட்டு, **''நீதித்துறை இந்துத்துவமயமானால்...''** எனும் தலைப்பில் கீழமை நீதிமன்றங்களின் வழக்குரைஞர் சங்கக் கூட்டமைப்பின் செயலர் தோழர் **பி. திருமலைராசன்** உரையாற்றினார்.

''கோவையின் ஒப்பணக்கார வீதியில் உள்ள பி–1 போலீசு நிலையத்தின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதியில் கட்டப்பஞ்சாயத்து செய்யும் உரிமை போலீசுக்கா, அல்–உம்மாவிற்கா? என்ற பிரச்சினைதான் கோவை கலவரத்திற்கு காரணம். பாலக்காட்டில் இருந்து 1,000–க்கும் அதிகமான ஆர்.எஸ்.எஸ்.

**மக்கள் வெள்ளத்தால்**




படிப்பகம்

www.padippakam.com

# திரான போர்முழக்கம்




**வெல்லப்போவது யார்? இந்துத்துவமா? நக்சல்பாரியா? - ம.க.இ.க.வின் புரட்சிகர கலைநிகழ்ச்சி.**

கான உள்ளூர் மக்களையும் தன்பால் ஈர்க்கவும் செய்தன.

கருத்தரங்கம், கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றோடு, அம்மாநாட்டின் ஓர் அங்கமாக பார்ப்பன பயங்கரவாதத்திற்கு எதிரான ஓவியக் கண்காட்சியும் நடத்தப்பட்டது. குஜராத்தில் நடந்த முசுலீம் இனப்படுகொலை; இந்து மத வெறியர்களின் அகண்ட பாரதக் கனவு; ஜெயா – சங்கராச்சாரி கும்பலின் வக்கிரம், அடாவடித்தனம் எனப் பார்ப்பன பாசிசக் கும்பலின் பல்வேறு முகங்களையும், அமெரிக்காவின் மேலாதிக்க பயங்கரவாதத்தையும் பல்வேறு கோணங்களில் - கிண்டலாகவும், துயரத்தோடும், எதிர்ப்பு உணர்வைத் தூண்டும் ஆவேசத்தோடும் பதிவு செய்திருந்த இந்த ஓவியக் கண்காட்சியை தில்லிப் பல்கலைக்கழகத்தின் நாடகத் துறையில் பணியாற்றும் தோழர் **நீலிமா சர்மா** தொடங்கி வைத்தார்.

''இந்து மதவெறிக் கும்பலை தனது ஓவியங்களின் மூலம் உலகெங்கிலும் அம்பலப்படுத்திய தோழர் இர்பானின் ரத்தம் ஒவ்வொரு ஓவியத்திலும் கலந்து உயிர்த்துடிப்பாக இருக்கிறது'' என தோழர் நீலிமா சர்மா இக்கண்காட்சி பற்றிக் குறிப்பிட்டார். அந்த இரண்டு நாட்களிலும் கிட்டதட்ட 6,000 பார்வையாளர்கள் ஓவியக் கண்காட்சிக்கு வந்து சென்றனர். கிராமத்து பெண்கள், ம.தி.மு.க., த.மு.எ.ச உள்ளிட்ட மாற்று அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் எனப் பல தரப்பினரும் ஓவியக் கண்காட்சி பற்றித் தங்களின் கருத்துக்களைப் பதிவு செய்தனர். பதிவான 300-க்கும் மேற்பட்ட கருத்துக்களில், ''தந்தை பெரியாரின் காலத்திற்குப் பிறகு, பார்ப்பனக் கும்பலை அம்பலப்படுத்தும் ஓவியக் கண்காட்சியை இப்பொழுதுதான் பார்க்கின்றேன்'' எனக் குறிப்பிட்டிருந்தார் ஒரு முதியவர். ''அத்வானிப் பயல ஏன் வரையாமல் விட்டீர்கள்?'' என ஆவேசப்பட்டிருந்தார் மற்றொருவர். ''வெகுவாக ஈர்த்தது'' என வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் குறிப்பிட்டிருந்தனர்.

ம.க.இ.க.வின் திரை முழக்கம் தயாரித்த **''பார்ப்பன பயங்கரவாதத்தின் இரத்த சாட்சியங்கள்''** என்ற **ஆவணத் திரைப்படம்,** இம்மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டு வெளியிடப்பட்டதோடு, மாநாட்டின் முதல்நாள் கலைநிகழ்ச்சிகள் முடிந்தபின், பொதுமக்களுக்குத் திரையிட்டும் காட்டப்பட்டது.

கிட்டதட்ட ஒரு மணி நேரம் ஓடும் இந்த ஆவணப் படம், 1800-ஆம் ஆண்டுகளில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில், சாணார் சாதி மக்கள் வருணாசிரம அடக்கு முறைக்கு எதிராக நடத்திய மாராப்பு அணியும் போராட்டம்; கிறித்தவர்களுக்கு எதிராக ஆர்.எஸ்.எஸ். தூண்டிவிட்டு நடத்திய மண்டைக்காடு மதக் கலவரம்; மேல்சாதி அடக்குமுறைக்கு எதிராக நடந்த மீனாட்சிபுரம் மத மாற்றம்; தந்தை பெரியார் தலைமையேற்று நடத்திய வைக்கம் ஆலய நுழைவுப் போராட்டம் ஆகிய வரலாற்று நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளது.

***

**க**ருத்தரங்குகளில் உரையாற்றிய தீஸ்தா சேதல்வாத்தை ஆசிரியராகக் கொண்டு, மும்பயில் இருந்து கடந்த பத்தாண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் **''மதவெறிக்கெதிராகப் போராடு''** (Communalism Combat) என்ற ஆங்கில மாத இதழும்; ''நீதி - அமைதிக்கான மக்கள் குழு'' என்ற

குண்டர்கள் கோவைக்குள் புகுந்து, போலீசாரோடு கைகோர்த்துக் கொண்டு, கோவை கலவரத்தை நடத்தினார்கள்'' எனக் குறிப்பிட்ட தோழர் திருமலைராசன், ''மேலவளவு முருகேசன் படுகொலை வழக்கில் 40 குற்றவாளிகளுள் 17 பேர்தான் தண்டிக்கப்பட்டனர். இவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை கூட இந்திய தண்டனைச் சட்டம் 302–பிரிவின் கீழ் அளிக்கப்பட்டதே தவிர, குற்றவாளிகளுள் ஒருவரும் வன்கொடுமை தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படவில்லை. குற்றவாளிகளை வன்கொடுமை சட்டத்தின் கீழும் தண்டிக்க அதிகாரம் இருந்தும் கூட, நீதிமன்றம் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்த மறுத்து விட்டது. ஆனால், அதே நீதிமன்றத்தின் அதிகாரம், நாடாளுமன்றத் தாக்குதல் வழக்கில் பயன்படுத்தப்பட்டு, குற்றம் சாட்டப்பட்ட முசுலீம்கள் தண்டிக்கப்பட்டனர்'' என நீதித்துறையின் இந்து மதவெறிப் போக்கை அம்பலப்படுத்தினார்.

**நாட்டு அரங்கம்.**



குஜராத் முசுலீம் இனப்படுகொலையில் ஆர்.எஸ்.எஸ்.இன் பிரச்சாரகனாகச் செயல்பட்ட செய்தி ஊடகங்கள் பற்றி, மும்பயில் இருந்து வெளிவரும் ''மதவெறிக்கெதிராகப் போராடு'' (Communalism Combat) என்ற ஆங்கில மாத இதழின் ஆசிரியர்களுள் ஒருவரான **தீஸ்தா சேதல்வாத் ''இந்து மத வெறியின் ஆயுதமாக பேனா''** என்ற தலைப்பில் உரையாற்றினார். 1990–இல் மும்பயில் நடந்த முசுலீம் படுகொலைக்கு போலீசே உடந்தையாக இருந்ததை, போலீசாரின் ஒயர்லெஸ் பேச்சைப் பதிவு செய்து நிரூபித்தவர், தீஸ்தா சேதல்வாத்.



''கோத்ராவின் ரயில் பெட்டி எரிந்தவுடனே, அது பற்றி வந்த வானொலி மற்றும் தொலைக்காட்சி செய்திகள், அதனை

www.padippakam.com



ஓவியக் காட்சியைத் திறந்து வைத்துப் பார்வையிடும் தோழர் நீலிமா சர்மா: தூரிகையும் ஆயுதம்!




''அடிமாடு'' - நாடகக் காட்சி; 'கோமாதா' மோசடிக்கு பதிலடி.

அமைப்பு குஜராத் இனப் படுகொலை பற்றி விசாரணை நடத்தி வெளியிட்டுள்ள **''மனிதத்துவத்திற்கு எதிரான குற்றம்''** (Crime Against Humanity) என்ற ஆவணமும் மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டன. கீழைக்காற்று, பகத்சிங் புத்தகப் பயணம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் உள்ளிட்ட பல்வேறு புத்தக வெளியீட்டாளர்கள் மாநாட்டு அரங்கில், கடைகளைத் திறந்திருந்தனர்.

மாநாட்டுக்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு மாநாட்டுத் திடலிலேயே மிகக் குறைந்த விலையில் (ரூ.5-) இரண்டு நாட்களும் உணவு வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பார்ப்பன பண்பாட்டுக்கு எதிரான கலகமாக, மாட்டுக் கறி பிரியாணி, பக்கோடா தயாரித்து மாநாட்டில் இரண்டு நாட்களும் விற்பனை செய்யப்பட்டது.

***

பெரியார் வழியைப் பின்பற்றுவதாகக் கூறும் தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. ஆகிய கட்சிகள் கூட ''பார்ப்பான்'' என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் ஒதுங்கிப் போகும் இவ்வேளையில், ம.க.இ.க.வும் அதன் தோழமை அமைப்புகளும் அரசியல் துணிவோடு பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டை நடத்தி முடித்துள்ளன. மேலும், இந்த அரசியலைப் பிரச்சாரம் செய்து, ஆயிரக்கணக்கான மக்களை அணிதிரட்டவும் முடியும் என்றும் நிரூபித்துள்ளன.

போலி கம்யூனிஸ்டுகள் கூட இந்து மதத்தை விமர்சிக்காமல், அதற்கு ஒளிவட்டம் போடும்பொழுது, இந்த அமைப்புகள், இந்து மதம் ஒரு மதமே அல்ல; அதை மறுக்காமல், பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பில் ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாது என்பதை ஆணித்தரமாக எடுத்துக் கூறி, கம்யூனிச புரட்சிகர மரபை நிலைநாட்டியுள்ளன.

மாநாட்டுக்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான தோழர்களும், ஆதரவாளர்களும், பொது மக்களும், இரண்டு நாளும் நடந்த அனைத்து நிகழ்ச்சிகளிலும் உற்சாகத்தோடும், கட்டுப்கோப்போடும் பங்கெடுத்துக் கொண்டதைக் கவனித்த குஜராத் மாநிலத்தில் இருந்து வந்திருந்த முசுலீம்கள் ''இது தங்களுக்கு புது நம்பிக்கையை ஏற்படுத்தியதாக''க் குறிப்பிட்டார்கள். பார்ப்பன பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட இவர்களின் வார்த்தைகளைத் தவிர, இம்மாநாட்டின் வெற்றியைக் கூறுவதற்கு வேறெதுவும் தேவையில்லை!

ஒரு விபத்தாகத் தான் குறிப்பிட்டன. அன்றிரவுக் கூடிய மோடியின் அமைச்சரவைதான் கோத்ரா விபத்தை, முசுலீம்கள் நடத்திய திட்டமிட்ட தாக்குதலாக, உண்மையைத் திரித்துக் கூறியது.'' இந்தப் பொய்யைத் திரும்ப திரும்பக் கூறி 'உண்மை'யாக்கியதோடு, இதைக் காட்டி, குஜராத் இனப்படுகொலை எவ்வளவு கொடூரமாக நடத்தப்பட்டது என்பதையும் விவரித்தார்.

பொய்யை உண்மையைப் போல் திரிக்கும் கோயபல்சு பாணி பிரச்சாரத்தில் நிபுணத்துவம் பெற்றுள்ள ஆர்.எஸ்.எஸ். கும்பல் ''அம்பேத்கரின் பேச்சைக்கூடத் தனக்குச் சாதகமாகத் திரிக்கிறது'' என்ற அவர், அதற்கு உதாரணமாக, துணைப் பிரதமர் அத்வானி, அம்பேத்கரின் பேச்சைத் திரித்து ''அம்பேத்கர் அரசியல் சாசனத்தை மாற்ற விரும்பினார்'' எனக் கூறிக் கொண்டு திரிவதை எடுத்துக் காட்டினார்.

''இந்து மதத்தில் இருந்து சாதியைப் பிரித்துப் பார்க்கக் கூடாது'' என எச்சரித்த தீஸ்தா சேதல்வாத், ''அரசு, மதச்சார்பற்றதாக இருந்தால் மட்டும் போதாது. சாதிகளை ஒழிப்பதாகவும் அமைய வேண்டும்'' எனத் தனது உரையில் முத்தாய்ப்பாகக் குறிப்பிட்டார்.

கருத்தரங்கின் நிறைவாக, ''இந்து என்ற வரையறை அரசியல் சாசனத்தில் இருந்து நீக்கப்பட வேண்டும்; உழைக்கும் மக்களை சூத்திரன் என வரையறுப்பதும் நீக்கப்பட வேண்டும்; உழைக்கும் மக்கள் பார்ப்பனச் சடங்குகளைப் புறக்கணிக்க வேண்டும்; தாழ்த்தப்பட்டோரை இழிவுபடுத்திய சங்கராச்சாரி கைது செய்யப்பட வேண்டும்; ஆர்.எஸ்.எஸ். பயிற்சி முகாம்கள் தடை செய்யப்பட வேண்டும்; ''பொடா'' சட்டம் நீக்கப்பட வேண்டும்'' என்பது உள்ளிட்ட 27 தீர்மானங்கள் அரங்கில் வாசிக்கப்பட்டு, பார்வையாளர்களின் கரவொலி முழக்கத்தோடு நிறைவேற்றப்பட்டன.



இத்தீர்மானங்களை விளக்கி கருத்தரங்க நிறைவுரை ஆற்றிய ம.க.இ.க. இணைச் செயலர் தோழர் காளியப்பன், ''இந்து மத வெறியர்கள் குஜராத்தை மாதிரியாகக் காட்டுகிறார்கள். நாம், பெரியார் பிறந்த மண்ணான தமிழகத்தை பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பின், மதச்சார் பின்மையின் முன் மாதிரியாக ஆக்குவோம்'' என்ற அறை கூவலை விடுத்து, கருத்தரங்கை முடித்து வைத்தார்.

— தொகுப்பு: பு.ஜ. செய்தியாளர்கள்.


படிப்பகம்

www.padippakam.com

# இந்துத்துவ மூலவருக்கு படத்திறப்பு
# போலி கம்யூனிஸ்டுகள் முகத்தில் கரிப்பூச்சு

கடந்த பிப்ரவரி 26-ஆம் நாளன்று நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் இந்துவெறியர்களின் சித்தாந்த குருவும் ஆர்.எஸ்.எஸ்.-இன் நிறுவனர்களில் ஒருவருமான சாவர்கரின் உருவப்படம், அவரது 37-வது நினைவு நாளில் இந்துவெறி ஆட்சியாளர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரர்; மிகச் சிறந்த தேசப் பற்றாளர் என்று ஆளுங்கும்பல் அவரைத் துதிபாடி போற்றுகிறது.

வினாயக் தாமோதர் சாவர்கர் எனப்படும் வி.டி. சாவர்கர் அன்றைய காலனிய ஆட்சியாளர்களால் கைது செய்யப்பட்டு அந்தமான் சிறையில் அடைக்கப்பட்ட போது, 1911-இல் அவர் பிரிட்டிஷாரிடம் கருணைக்கு மன்றாடியவர். ''என்னை விடுதலை செய்தால் நான் என்றென்றும் பிரிட்டிஷ் அரசுக்கு விசுவாசமாக இருப்பேன்'' என்று கடிதம் எழுதிக் கொடுத்து விடுதலை பெற்ற கோழை. காந்தியைச் சுட்டுக் கொன்ற வழக்கில் கோட்சேவுடன் சேர்ந்து சதி செய்ததாக 7-வது குற்றவாளியாக சேர்க்கப்பட்டவர். (இதற்கான ஆதாரங்கள் இருந்தபோதிலும் வழக்குமன்ற விதிமுறைகளின்படி சாட்சியங்களை நிரூபிக்க இயலாத நிலையில் அவர் விடுதலையானார்). இந்துக்களுக்கு இந்தியா, முசுலீம்களுக்கு பாகிஸ்தான் என்று மத அடிப்படையில் பிரிவினையை ஆதரித்தவர். ''இந்துத்துவா'' என்ற சொல்லைப் பிரபலப்படுத்த பாடுபட்ட அவர் ஆர்.எஸ்.எஸ்-இன் நிறுவனர்களில் ஒருவர். பின்னர் இந்துவெறி அமைப்பான இந்து மகாசபையின் தலைவராகச் செயல்பட்டவர்.

இவர்தான் இப்போது மாபெரும் சுதந்திரப் போராட்டத் தியாகியாகவும் தேசபக்தராகவும் சித்தரிக்கப்படுகிறார். இவரது உருவப்படத்தை நாடாளுமன்றத்தில் வைப்பது அவமானகரமானது என்று பல சுதந்திரப் போராட்ட வீரர்களும் வரலாற்றியலாளர்களும் இடதுசாரி சிந்தனையாளர்களும் கண்டனம் தெரிவித்தனர். கோழையும் தேசவிரோதியும் இந்து வெறியருமான ஒருவரின் உருவப் படத்தை நாடாளுமன்றத்தில் வைப்பது வெட்கக்கேடானது என்று சாடினர். அதைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகள் அனைத்தும் நாடாளுமன்றத்தில் சாவர்கரின் படத்தை வைப்பதைக் கண்டித்து, படத்திறப்பு விழாவைப் புறக்கணித்துள்ளன.

ஆனால் சாவர்கரின் படத்திறப்பானது, எதிர்க்கட்சி உறுப்பினர்களை உள்ளடக்கிய நாடாளுமன்றக் கமிட்டியின் ஒப்புதலுடன்தான் நடந்துள்ளது. இக்கமிட்டியில் சி.பி.எம். கட்சியின் சோமநாத் சட்டர்ஜி, சி.பி.ஐ.யின் சித்தரஞ்சன், காங்கிரசின் பிரணாப் முகர்ஜி மற்றும் சிவராஜ் பட்டீல் ஆகியோர் உள்ளனர். கடந்த ஆண்டு டிசம்பரிலேயே அவர்களது ஒப்புதலுடன் சாவர்கார் படத்திறப்பு பற்றி சபாநாயகர் முன்னிலையில் முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இப்போது எதிர்ப்பு வலுக்கத் தொடங்கியதும், ''ஐயோ! தெரியாமல் நடந்து விட்டது; கவனக்குறைவாக இருந்தது தவறுதான்!'' என்று சுயவிமர்சனம் செய்து கொள்கிறார் சி.பி.எம். 'தோழர்' சோமநாத் சட்டர்ஜி. காங்கிரசு உறுப்பினர்களோ நெருப்புக் கோழிகளாகி விட்டனர்.

உண்மையில் இவர்கள் இப்போது தவறு ஏதும் செய்துவிடவில்லை. ஏற்கனவே இந்துத்துவ கொள்கைகளை அனுசரித்து எதிர்க்கட்சிகள் பின்பற்றி வந்த போலி மதச்சார்பின்மை கொள்கையின் விளைவுதான் இது. இன்று எதிர்ப்பு காட்டி முறுக்கிக் கொள்ளும் எதிர்க்கட்சிகள் அனைத்தும், நேற்றுவரை சாவர்கரை ஆதரித்து புகழ் பாடியவைதான்.

1966 பிப்ரவரி 26 அன்று தனது 83-வது வயதில் சாவர்கர் மரணமடைந்ததும், இரு நாட்கள் கழித்து சி.பி.ஐ. நாடாளுமன்ற உறுப்பினரான ஹிரேன் முகர்ஜி, சாவர்கருக்கு அவை அஞ்சலி செலுத்த வேண்டுமென கோரிக்கையை முன்வைத்தார். அதன்படி, அன்றைய அரசு தலைவர் இராதாகிருஷ்ணன் முன்னிலையில் அனைத்து ஓட்டுக் கட்சியினரும் நாடாளுமன்றத்தில் அஞ்சலி செலுத்தினர். சி.பி.ஐ. கட்சியின் அன்றைய தலைவரான டாங்கே, சாவர்கரை ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சியாளர்களில் ஒருவர் என்று புகழாரம் சூட்டினார். காங்கிரசு தலைவியும் அன்றைய பிரதமருமான இந்திரா காந்தி, ''துணிவும் தேசப்பற்றும் நிறைந்த வீரர்'' என்று சாவர்கரை வாழ்த்தினார். பின்னர் 1970-இல் இந்திரா அரசு சாவர்கரைப் பெருமைப் படுத்தும் வகையில் அஞ்சல் தலையை வெளியிட்டது. அவரது நினைவு மண்டபத்திற்கு தனிப்பட்ட முறையில் இந்திரா ரூ. 11,000 நன்கொடையும் அளித்துள்ளார். மைய அரசின் செய்தி ஒளிபரப்பு துறை மூலம் சாவர்கரின் வாழ்க்கை வரலாற்றைச் சித்தரிக்கும் ஆவணத் திரைப்படத் தயாரிப்பையும் தொடங்கி வைத்துள்ளார்.



இப்படி நேற்றுவரை சாவர்கரின் துதிபாடிய போலி கம்யூனிஸ்டுகளும் காங்கிரசு கயவாளிகளும் இப்போது அரசியல் ஆதாயத்துக்காக சந்தர்ப்பவாதமாக எதிர்ப்பு வேஷங்கட்டி ஆடுகின்றனர். இக்கட்சிகளின் போலி மதச்சார்பின்மையைச் சாதகமாக்கிக் கொண்டு, இந்துத்துவக் கொள்கைகளைத் தீவிரமாகச் செயல்படுத்தி வரும் பா.ஜ.க. அரசு, தமது சித்தாந்த குருவின் படத்தை நாடாளுமன்றத்தில் வைக்கவும் துணிந்துவிட்டது. அடுத்த கட்டமாக, ஹெட்கேவர், கோல்வார்கர் முதலான இந்துவெறி குருசாமிகளின் படங்கள் நாடாளுமன்றத்தில் திறக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

● இராசு

www.padippakam.com

### புரட்சிகர அமைப்புகள் மீது பாய்ச்சல்:

# த.தே.பொ.க.வின் மூளைக் காய்ச்சல்

ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; மற்றும் பு.ஜ.தொ.மு; ஆகிய புதிய ஜன நாயகப் புரட்சிகர அமைப்புகள் நடத்தி வரும் பார்ப்பன பயங்கரவாத இயக்கத்தை இரண்டு பிரிவினர் ''மட்டுமே'' எதிர்க்கின்றனர். ஒருபிரிவு நாம் எல்லோருக்குமே தெரியும் பார்ப்பன பயங்கரவாதிகள். இன்னொரு பிரிவினர் யாரென்று பலருக்கும் தெரியாது. அவை, த.தே.பொ.க., த.ஒ.வி.இ. போன்ற சில தமிழினவாதக் குழுக்கள்.

பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு இயக்கத்தின் எதிரிகளாக இருப்பதால், இந்து வெறியர்கள் இந்த இயக்கத்தை எதிர்ப்பதில் புதுமையோ, வியப்போ எதுவும் இல்லை. ஆனால், கொள்கை பூர்வமான காரணமோ, காரியமோ எது வுமில்லாத இந்தத் தமிழினவாதிகள் நமது இயக்கத்தை எதிர்க்கின்றனர். தாங்கமுடியாத எரிச்சலையும், குருட்டுத் தனமான காழ்ப்புணர்ச்சியையும் காட்டி யுள்ளனர். இதற்காக நம்முடையது அல்லாத நிலைப்பாட்டை இட்டுக்கட்டி, விமர்சனம் என்கிற பெயரில் அவதூறு களை எழுதுவதை வழக்கம்போல செய்துள்ளனர்.

பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு இயக்கத்தின் ஒரு முழக்கமாக, ''சுயமரி யாதை உள்ள தலித்துக்களே சூத்திரர் களே இந்துமதத்தை விட்டு வெளியே றுங்கள்!'' என்பதை புதிய ஜனநாயகப் புரட்சிகர அமைப்புகள் முன் வைத்துள் ளன. அந்த முழக்கத்திற்கு தமது சொந்த வியாக்கியானமும் உள்நோக்கமும் கற்பித்து ''ம.க.இ.க.–வின் மறைமுகப் பார்ப்பனியம்'' என்று தலைப்பிட்டு த.தே.பொ. கட்சியின், ''தமிழர் கண்ணோட்டம்'' எழுதியிருக்கிறது.

தலித்துக்களும் சூத்திரர்களும் இந்து மதத்தை விட்டு வெளியேறக் கோரி இயக்கம் நடத்தும் ம.க.இ.க. சில விளக் கங்கள் தரும்படி கேட்கும் ''தமிழர் கண்ணோட்டம்'' சில கேள்விகளை எழுப்பியுள்ளது. ஆனால் ம.க.இ.க சார்பில் விளக்கமளிக்கும் முன்பாகவே, தானே கற்பித்த விளக்கங்கள் அடிப்ப டையில் வாதங்களை அடுக்கியிருக்கி றது.

''அவர்கள் இந்துமதத்தை விட்டு வெளியேறி வேறு மதத்திற்குப் போவதா? அல்லது மதமற்றவராக இருப்பதா? வேறுமதத்திற்குப் போவது என்றால் எந்த மதத்திற்குப் போவது? வேறு எந்த மதத்திற்குப் போனால் சாதி ஒழியும்? மார்க்சிய - லெனினிய வழியில் இவர்கள் கூறும் மதமாற் றத்தைச் சாதி ஒழிப்பிற்கான தீர்வு என்று நிலைநாட்டமுடியுமா?

''தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் இந்து மதத்தை விட்டு வெளியே றினால், அவர்கள் இப்பொழுது அனுப வித்துவரும் இடஒதுக்கீடு பறிபோய் விடும். அப்படிப் போனால் போகட்டும் என்று ம.க.இ.க. கருதுகிறதா?''

''மதமற்றவர் பொதுப் பட்டியலில் வந்துவிடுவதால், அவர்கள் இடஒதுக் கீட்டை இழப்பார்கள் என்பது ம.க.இ.க.வுக்குத் தெரியாதா?''

– இவை ''தமிழர் கண்ணோட்டம்'' எழுப்பியிருக்கும் கேள்விகள். இந்த அடி முட்டாள்தனமான கேள்விகளுக்கு இடஒதுக்கீடு – சமூக நீதி சித்தாந்தத் தலைவர்களான பெரியாரும் அம்பேத் கரும் தக்க பதிலளித்துள்ளனர் என்பது த.தே.பொ.க. தலைமைக்குத் தெரி யாதா?

முந்தைய விசயங்கள் ஒருபுறமி ருக்க, தற்போது கொங்குச் சீமையிலே வேளாளர்களும், வடுகநாயக்கர்களும், தென்மாவட்டங்களில் முக்குலத்தோர் களும் இந்து நாடார்களும் ஆகிய இட

## பேராசிரியப் பெருந்தகையா? கிணற்றுத் தவளையா?

ம.க.இ.க. முதலிய புதிய ஜனநாயகப் புரட்சி அமைப்புகள் மீது தமிழினவாதிகள் இட்டுக்கட்டி அவதூறு செய்வது மட்டு மல்ல; சம்பந்தா சம்பந்தமில்லாமல் வசைபாடுவதும் செய்கிறார்கள். இதற்கு ஒரு எடுத்துக்காட்டு, த.தே.பொ.க.வைச் சேர்ந்த பேராசிரியர் பெருந்தகை கல்யாணி அவர்கள் ''தலித் முரசு'' ஏட்டிற்கு கடந்த ஜூனில் அளித்த நேர்காணலில் உள்ளது.

''தலித் அரசியல் அமைப்புகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்பது கேள்வி.

''தலித் அரசியல் ஒரு வலுவான அர சியலாகப் பரிணமிக்காததற்கு தன்னார்வத் தொண்டு நிறுவனங் கள்தான் காரணம். தொண்டு நிறுவ னங்கள், ஒரு சார்பு மனோபாவத்தை ஏற்படுத்தி விடுகின்றன. முதலில் திட்டத்திற்காக நிதி திரட்டுவார்கள்; பிறகு நிதிக்காகத் திட்டங்களைத் தீட்டு வார்கள். இதனால் சுயேட்சையான வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுகிறது.



''ஒரு அமைப்பு ஒரு இயக்கம் என்பது, மக்களைத் திரட்டி ஒருங்கி ணைக்கிற விசயம். வெறுமனே துண்ட றிக்கை போட்டு, சுவரொட்டி ஒட்டுவ தல்ல. வெறும் எழுத்தினாலேயே இயக்கத்தைக் கட்டிவிடலாம் என்றால், இன்றைக்கு ம.க.இ.க. தான் தமிழகத்தி லேயே பெரிய இயக்கமாக இருந்தி ருக்கும். ம.க.இ.க. என்று சொல்லி விட்டு, தாலுக்கா அளவில் மக்கள் பிரச் சினைக்காக குரல் கொடுக்க ஒரு பத்துப்பேர் கூட இல்லையே. எல்லாவற் றுக்கும் அடிப்படை மக்கள்தானே''

– இது பேராசிரியர் கல்யாணியின் பதில். கேள்வியையும் பதிலையும் மீண்டும் படியுங்கள். கேள்விக்கும் ம.க.இ.க.வுக்கும் சம்பந்தம் இருக்கிறதா பாருங்கள். ம.க.இ.க. தலித் அரசியலை ஏற்றுக் கொண்டிருக்கும் அமைப்பு மல்ல; உதாரணத்துக்கு என்று எடுத்துக் கொண்டாலும், எந்தவொரு தலித் அர சியல் அமைப்பும் ம.க.இ.க.வின் அர சியல் நடைமுறையைக் கொண்டிருக்க வுமில்லை.

எவ்வளவு பெரும் பேராசிரியர்! எவ்வளவு சின்னப் புத்தி! ஒருபுறம், தலித் அரசியல் அமைப்புகள் பற்றி


படிப்பகம்

www.padippakam.com

ஒதுக்கீட்டினால் ஆதாயம் அடையும் சாதிகள்தாம் ''இந்துத்துவா'' பார்ப்பன–பயங்கரவாதத்தின் சமூக அடிப்படையாக உள்ளனர். மதமாற்றத்தடைச் சட்டத்தை உயர்த்திப் பிடிப்பதில் சங்கராச்சாரி – ஜெயலலிதா கும்பலுடன் பிற்படுத்தப்பட்ட சாதிச்சங்கங்கள்தாம் தோளோடுதோள் உரசிக் கொண்டு நிற்கின்றன. இங்கே கமண்டலத்துடன் மண்டல் கைகோர்த்துக் கொண்டுள்ளது. மேலும் உலகமயம், தனியார்மயம், தாராளமயம் என்ற சர்வகட்சிக் கொள்கையின் கீழ் சமூகநீதி – இடஒதுக்கீடு முறை காற்றோடு கரைந்து போகிறது; அதைத் தடுக்கும் சக்தியும் முனைப்பும் சமூக நீதி வாதாடிகளுக்குக் கிடையாது. இதெல்லாம் த.தே.பொ.க.வுக்குத் தெரியாதா?

தெரிந்தும் த.தே.பொ.க. எழுதுகிறது, ''இந்து மதத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று இயக்கம் நடத்தும் ம.க.இ.க.வின் உள்நோக்கம் ஐயத்திற்கு உரியது''; ''இட ஒதுக்கீட்டைக் களவு செய்ய ம.க.இ.க. மறைமுகப் பார்ப்பனீய வேலை செய்வதாக நாம் ஐயுறுகிறோம்'' என்று.

மேலும், ''பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீட்டை, அதைப் பரிந்துரைத்த மண்டல் குழு அறிக்கையை ம.க.இ.க. கடுமையாக எதிர்த்தது'' என்று பச்சைப் புளுகை எழுதியுள்ளது. ''எனவே, ம.க.இ.க.வின் இதயத்துக்குள் கிடக்கும் இடஒதுக்கீடு எதிர்ப்புத்

**தலித்துகளும் சூத்திரர்களும் தற்போது அனுபவித்து வரும் இடஒதுக்கீடு பறிபோகாமல் காத்துக் கொள்ள வேண்டுமானால் அவர்கள் இந்து மதத்திலேயே இருக்க வேண்டும்; வெளியேறி விடக்கூடாது என்கிறது த.தே.பொ.க. உண்மையில் இதுதான் ''பிற்படுத்தப்பட்ட'' மேல்சாதி இந்து வெறியர்களின் விருப்பத்தைப் பாதி வழிபோய் வரவேற்கும் நிலைப்பாடு.**

திட்டத்தை முழுமையாக நிறைவேற்றிக் கொள்ள ஓர் உத்தியாக, இந்து மதத்தை விட்டு, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை ஒட்டுமொத்தமாக வெளியேற்றக் கோருகிறதா?'' என்றும் கேள்வி எழுப்பியுள்ளது.

''இந்துமதத்தை விட்டு வெளியேறுங்கள்!'' என்று பெரியாரும் அம்பேத்கரும் குரல் கொடுத்தபோது, அப்படிச் செய்பவர்களுக்கு இடஒதுக்கீடு ஏற்பாடு நீடிக்கும் என்று இருந்ததா? இல்லையே! இந்து மதத்தைவிட்டு வெளியேறினால் இடஒதுக்கீடு ஏற்பாடு பறிக்கப்படும் என்று தெரிந்தும் அவர்கள் அவ்வாறு ஏன் குரல் கொடுத்தார்கள்? அம்பேத்கரும் பெரியாரும் செய்ததைப்போல் இடஒதுக்கீட்டையும் ஆதரித்துக் கொண்டு இந்துமதத்தைவிட்டு வெளியேறுங்கள் என்று இயக்கம் நடத்தினால் த.தே.பொ.க.வுக்கு உடன்பாடா? இப்படிச் செய்தாலும் இந்துமதத்தை விட்டு வெளியேறுபவர்களுக்கு இட ஒதுக்கீடு மறுக்கப்படும் என்கிற விளைவு ஒன்றுதானே!

இந்த முரண்பட்ட நிலைக்கு த.தே.பொ.க. ஒரு எளிமையான தீர்வு கண்டுள்ளது. தலித்துக்களும் சூத்திரர்களும் இந்து மதத்தை விட்டு வெளியேறக் கோரி இயக்கம் நடத்தக்கூடாது. வெளியேறும் உரிமைக்காக, அந்த உரிமையைச் சுற்றிவளைத்துப் பறிக்கும் தமிழக அரசின் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தை எதிர்ப்பதோடு நின்று விட வேண்டும் என்கிறது, த.தே.பொ.க. தலித்துகளும் சூத்திரர்களும் தற்போது அனுபவித்துவரும் இட ஒதுக்கீடு பறிபோகாமல் காத்துக்கொள்ள வேண்டுமானால் அவர்கள் இந்து மதத்திலேயே இருக்க வேண்டும்; வெளியேறிவிடக் கூடாது. இதுதான் த.தே.பொ.க.வின் நிலைப்பாடு. ''சபாஷ்!'' இதுதான் ''பிற்படுத்தப்பட்ட'' மேல்சாதி இந்துவெறியர்களின் விருப்பத்தைப் பாதி வழிபோய் வரவேற்கும் த.தே.பொ.க.வின் நிலை. அதாவது தானும் சமூக ரீதியில் ஒடுக்கப்பட்டவர்கள் என்கிற பெயரில் இடஒதுக்கீடு வசதியையும் பெற்றுக் கொள்ள வேண்டும்; தாமே சமூக ரீதியில் ஒடுக்குவதற்கு வசதியாக தலித்துகளும், உண்மையில் சூத்திர சாதிகளும் இந்து மதத்தை விட்டு வெளியேறிவிடக்

நேரடியாகவும் வெளிப்படையாகவும் கருத்துக் கூற துணிவற்ற கோழைத்தனம்! மறுபுறம், ம.க.இ.க.வின் செயல்பாடுகள் குறித்த ''புரட்சிகர'' வதந்திகள், கிசுகிசுக்கள் மூலமாக பரப்பப்படும் செய்திகளைத் தொகுத்துக் கொண்டு அவதூறுகளைப் பேசும் அற்பத்தனம்! இப்படிப்பட்ட பேராசிரியர்களிடம் அரசியல் பாடம் கற்கும் மாணவர்களின் நிலை குறித்து உண்மையில் வருந்துகிறோம்.

''வெறும் எழுத்தினாலேயே இயக்கத்தைக் கட்டிவிடலாம் என்றால், இன்றைக்கு ம.க.இ.க.தான் தமிழகத்திலேயே பெரிய இயக்கமாக இருந்திருக்கும்'' என்கிறார் கல்யாணி. சரி, நாடாளுமன்ற – சட்டமன்ற அரசியலுக்கு வெளியே உள்ள அரசியல் இயக்கங்களில், தமிழகத்திலேயே ம.க.இ.க. முதலிய புதிய ஜனநாயகப் புரட்சி இயக்கம் தவிர வேறு பெரியது ஏதாவது இருக்கிறதா? பேரா. கல்யாணி உட்பட அவர் போன்றவர்களின் தலைமையிலான இயக்கங்கள்தாம் பெரியவையா?

அவர் கூறுவதைப் போல வெறும் துண்டறிக்கை போடும், சுவரொட்டி ஒட்டும், வெறும் எழுத்தினாலேயேயான இயக்கமாகவே இருக்கட்டும்; இந்த வேலைகளைச் செய்வதற்கான அணிகளை இந்த முறையிலேயே பெற்றுவிட்டதா? வேறு எந்த அமைப்புகளாலும் இல்லாதவாறு ஆண்டுக்கு ஆண்டு பல மைய இயக்கங்களையும், ஆயிரக்கணக்கானோரையும் நமது அமைப்புகள் திரட்டுகின்றனவே அதுவும் வெறும் பிரச்சார நடவடிக்கைகள் மூலமாகவே சாதிக்கின்றனவா? பொருளாதாரவாத, தொழிற்சங்கவாத, சுயநல அடிப்படையிலான போராட்டங்களின்றி அரசியல் இயக்கங்களுக்கு அணிகளைத் திரட்ட முடிகிறது என்றால் அது வரவேற்கத்தக்கதுதானே!

உண்மையில் பல மைய அரசியல் இயக்கங்களோடு பேராசிரியர் கல்யாணி குறிப்பிடுவதைப் போன்ற மக்களின் பிரச்சினைகளுக்காக ம.க.இ.க. முதலிய புதிய ஜனநாயகப் புரட்சி இயக்கங்கள் நூற்றுக்கணக்கான இயக்கங்களை ஆண்டுதோறும் நடத்தி வருகின்றன. கிணற்றுத்தவளையாக இருந்து பேராசிரியர் கல்யாணி போன்றவர்கள் அவை பற்றி அறியாமல் இருக்கிறார்களா? அல்லது அறிந்தும் மூடி மறைக்கின்றனரா?

பேராசிரியர் கல்யாணி குறிப்பிடுவதைப் போல ம.க.இ.க. வெறும் எழுத்து இயக்கம் நடத்துவதாகவே வைத்துக் கொள்வோம். அதன் துண்டறிக்கைகள், திருப்பதி வெங்கடாசலபதி அவதாரத்தை அறிவிப்பனவா? சுவரொட்டிகள், நடிகர்களைப் போற்றும் ரசிகர் மன்ற அறிவிப்புகளா? அல்லது சுவரெழுத்துக்கள் திருமாவளவன், கிருஷ்ணசாமி, லெமூரியன், கிருஷ்ணப் பறையனார் என்று தனிநபர் பெயர்களை ஆளுயரத்துக்கு அடுத்தடுத்து தீட்டுவனவா? ம.க.இ.க. எழுத்து இயக்கம் என்பதுகூட அரசியல் ரீதியிலானவைதானே! நூறு சுவரெழுத்துக்களில், ஆயிரம் சுவரொட்டி களில், பத்தாயிரம் துண்டறிக்கைகளில் உள்ள அரசியல் ஒரு சிலரை அடைந் தாலும் பயனளிக்கக் கூடியதாக இருக் காதா? பேராசிரியருக்கு இது ஏன் உரைக்கவில்லை. அதைவிட ராமதாசு, வீரப்பன் மூலமாக ''அரசியல் பிரச்சாரம்'' செய்வது சரியானது என்று எண்ணுகிறாரா?


படிப்பகம்

www.padippakam.com

கூடாது. இதற்காகத்தான் பிற்படுத்தப்பட்ட மேல்சாதி சங்கங்கள் மத மாற்றத் தடைச்சட்டத்தை ஆதரிப்பதில் பார்ப்பன பயங்கரவாதத்துடன் கைக்கோர்த்துக் கொண்டுள்ளன. மேலும், இதனால் அவை அரசியல் ஆதாயமும் அடைவது கூடுதல் போனசு!

த.தே.பொ.க.வின் வாதங்கள் எல்லாம் ஒரே ஒரு அடிப்படையிலானதுதான். பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டையும் அதைப் பரிந்துரைத்த மண்டல் குழு அறிக்கையையும் ம.க.இ.க. எதிர்க்கிறது என்கிற பொய்தான். இதே பொய்யின் அடிப்படையில்தான் ம.க.இ.க.வுடன் தன்னுடைய அணுகுமுறையை அக்கட்சி தனது மாநாட்டில் தீர்மானித்துள்ளது. எதிராளியின் நிலைப்பாடு என்னவோ அதை வைத்து வாதங்கள் புரிவதுதான் நேர்மையானவர்கள் செய்யும் வேலை. ஆனால், த.தே.பொ.க. தலைவர்கள் நம்பூதிரிபாடு பாசறையில் பயின்றவர்கள் அல்லவா! அதனால்தான் நமது நிலைப்பாட்டைத் திரித்துச் சொல்லி வாதங்கள் புரிந்துள்ளனர்.

பொதுவில் இடஒதுக்கீடு, குறிப்பாக பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு பற்றி நமது நிலையைப் பலமுறை தெளிவாக விளக்கியுள்ளோம். பொதுவில் இடஒதுக்கீடு என்பது ஒரு சமூக சீர்திருத்தக் கொள்கைதானே தவிர, சமூக நீதிக்காரர்கள் வாதிடுவதைப் போல அது சமூகப் புரட்சிக் கொள்கை என்பதை நாம் ஏற்கவில்லை. அடுத்து, பிற்படுத்தப்பட்ட சாதிகள் என்று மண்டல் குழு பரிந்துரை வரையறுத்துள்ளவை அனைத்தும் உண்மையில் சமூக ரீதியில், வரலாற்று ரீதியில் ஒடுக்கப்பட்ட சாதிகள் அல்ல; தமிழகத்தைப் பொருத்தவரை பார்ப்பனரல்லாத, தாழ்த்தப்பட்டவரல்லாத பிற எல்லா சாதிகளும் சூத்திர சாதிகள்தாம் என்கிற பெரியாரின் நிலைப்பாடு ஏற்கத்தக்கதல்ல.

உண்மையில் எந்தெந்த சாதிகள் சூத்திர வர்ண வழிப்பட்ட சாதிகள் என்பதில் பிரச்சினை உள்ளது. இன்று பிற்படுத்தப்பட்ட சாதிகள் என்று கூறிக் கொண்டு இட ஒதுக்கீடு வசதி பெறும் சாதிகளில் பலவும் அதற்குத் தகுதியற்றவை; பார்ப்பனர்கள் கூறுவதைப் போல அந்தச் சாதிகள் பொருளாதார ரீதியில் முன்னேறியவர்கள் என்பதற்காக இதை நாம் கூறவில்லை. வரலாற்று ரீதியிலும், தற்போதும் தாழ்த்தப்பட்ட மக்களையும் உண்மையான சூத்திர சாதிகளையும் சமூக ரீதியில் ஒடுக்கும் சத்திரிய, வைசிய வழிவந்த மேல்சாதிகள் பலவும் தாமும் பிற்படுத்தப்பட்டவர்கள், சமூக ரீதியில் ஒடுக்கப்பட்டவர்கள் என்று ஏமாற்றி இட ஒதுக்கீடு வசதி பெறுகின்றனர்.

பிற்படுத்தப்பட்டவை என்று வரையறுக்கப்பட ஆயிரக்கணக்கான சாதிகளில் ஒரு சில மட்டுமே இடஒதுக்கீடு வசதியை ஏகபோகமாக அனுபவித்து முன்னேறியுள்ளன; இந்த உண்மையை மூடிமறைப்பதற்கு தமிழினவாதம் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன; இவ்வாறு சட்டநாதன் குழு மற்றும் மண்டல குழு அறிக்கைகளே கூறியுள்ளன. பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீடு பற்றிய நமது கொள்கை மேற்கண்ட உண்மைகள் அடிப்படையிலானவை.

1989–இல் மண்டல் குழு பரிந்துரைகளை ஜனதாதள அரசு அமலாக்கிய போது புதிய ஜனநாயகப் புரட்சி அமைப்புகள் (ம.க.இ.க. முதலியவை) அதை எதிர்க்கவுமில்லை;ஆதரிக்கவும் இல்லை. மண்டல் குழு பரிந்துரை அமலாக்கமும் எதிர்ப்பும் அரசியல் பலன்களை அடைவதற்காக மேல்சாதிகளுக்கு இடையே நடக்கும் மோதல் – சண்டை என்று வரையறுத்தது. ஆளும் வர்க்கங்களுக்குள்ளே, ஆளும் சாதிகளுக்குள்ளே அதிகாரத்துக்காக நடக்கும் மோதல் – சண்டையில் ஏதாவது ஒருதரப்பை ஆதரிக்க வேண்டும், மறுதரப்பை எதிர்க்கவேண்டும் என்பதில்லை. மூன்றாவது ஒருநிலை எடுப்பதுதான் சரியாக இருக்கும் என்பதுதான் ம.க.இ.க. முதலிய புரட்சிகர அமைப்புகளின் நிலை. இதன் பொருள், நாம் நடுநிலை வகிக்கிறோம் என்பதல்ல. இரண்டு தரப்பிடமிருந்து மாறுபட்ட வேறொரு நிலை எடுக்கிறோம். அதே சமயம், மண்டல் குழு பரிந்துரைகள் அமலாக்கத்தை எதிர்த்து பார்ப்பன பயங்கரவாதிகள் நடத்திய வக்கிரமான – குரூரமான வெறியாட்டத்தைக் கடுமையாக எதிர்த்து வந்துள்ளோம்.

இந்த உண்மைகளை மூடிமறைத்து விட்டு ம.க.இ.க. முதலிய புரட்சிகர அமைப்புகளின் நிலையைத் திரித்துச் சொல்லி வாதம் புரியும் த.தே.பொ.க. பின்வருமாறு கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

''ம.க.இ.க. தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரும் இந்து மதத்தை விட்டு வெளியேறி விட்டார்களா? தங்கள் குழந்தைகளைக் கல்விக் கூடங்களில் சேர்க்கும்போது மதமற்றவர் என்று சேர்த்துள்ளார்களா?'' என்று கேட்டு, பிறருக்கு நம்பிக்கையூட்டவும், நமது நேர்மையை எடுத்துக் காட்டவும் அந்தப்பட்டியலை வெளியிடும்படி கேட்டுள்ளது. இந்த இரண்டு கேள்விகளுக்கும் சந்தேகத்திற்கிடமின்றி ஆமாம் என்பதுதான் பதில்; ம.க.இ.க.வினர் அனைவரும் சாதி–மதமற்றவர்கள்தாம். ம.க.இ.க. கறாராக வழிகாட்டி வலியுறுத்தி அமலாக்கும் நிலைப்பாடுகளில் இதுவும் அடங்கும். இதன் விளைவுகளை இந்த அமைப்பினர் சந்தித்து வருகின்றனர்.

கடந்த பல ஆண்டுகளாக சாதி–மத மறுப்பு, ''இந்துமத'' எதிர்ப்பு இயக்கங்களை நடத்திவரும் ம.க.இ.க.விடம், அதன் நேர்மைக்கு எடுத்துக்காட்டாக தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் பட்டியலை வெளியிடும்படி த.தே.பொ. கட்சி கேட்பதில் உண்மை அறியும் நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. காக்கிச் சட்டைகளின் வேர்வை நாற்றம்தான் அதில் அடிக்கிறது. அவசியமானால் த.தே.பொ.க.வினர் மட்டுமல்ல; வேறு எந்த இயக்கத்தினரானாலும் ம.க.இ.க. அலுவலகத்திற்கு வந்து எமது சாதி–மத மறுப்புகளுக்கு அவர்கள் கோரும் சான்றுகளைக் கண்டு நம்பிக்கை பெறலாம் என்று அழைக்கிறோம்.

— ஆசிரியர் குழு


''புதிய ஜனநாயகம்'' உரிமையாளர் மற்றும் இதர விவரங்கள்
படிவம் IV (விதி 8-இன் படி)

| | | |
|---|---|---|
| 1. வெளியிடும் இடம் | : | 110, 2-ஆம் தளம் மாநகராட்சி வணிக வளாகம் 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 2. வெளியிடும் காலம் | : | மாதம் ஒருமுறை |
| 3. அச்சிடுபவர் பெயர் | : | இரா. சண்முகராசு, |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | எழில் பிரிண்ட்ஸ், 110, 2-ஆம் தளம், மாநகராட்சி வணிக வளாகம் 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 4. உரிமையாளர் மற்றும் வெளியிடுபவர் பெயர் | : | இரா. சண்முகராசு, |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 110, 2-ஆம் தளம், மாநகராட்சி வணிக வளாகம் 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |
| 5. ஆசிரியர் பெயர் | : | இரா. சண்முகராசு |
| இந்தியக் குடிமகனா? | : | ஆம் |
| முகவரி | : | 110, 2-ஆம் தளம், மாநகராட்சி வணிக வளாகம் 63, என்.எஸ்.கே. சாலை, கோடம்பாக்கம், சென்னை -600 024. |

இரா. சண்முகராசுவாகிய நான், மேலே குறிப்பிட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்று உறுதியளிக்கின்றேன்.

1.3.2003

(ஒ-ம்) இரா. சண்முகராசு,
வெளியிடுபவர்.




படிப்பகம்

www.padippakam.com

# "காசேதான் கல்வியடா!"

## -சுயநிதி கல்லூரி முதலாளிகளின் கொட்டம்

கிழவிகளுடன் போஸ் கொடுப்பது, ரிக்ஷா ஓட்டுவது, சோசலிசமே அண்ணாயிசம் என்பது, சென்னைக்கு ரயிலில் குடிநீர் கொண்டுவருவது என கவர்ச்சி அரசியலில் ''கட் அவுட்'' சாதனை படைத்தவர் எம்.ஜி.ஆர். அப்போதாவது ஓட்டுப் பொறுக்கிகளின் பிழைப்புக்கு ஏழைகள், மக்கள் தொண்டு இன்ன பிற சொல்லளவு சோசலிச உதார்கள் தேவைப்பட்டன. இந்த உதார்களுடன் வலம் வந்த அப்போதைய அனைத்துக் கட்சி அண்ணன்களும், வள்ளல்களும், தளபதிகளும் வெறும் கமிஷன் வருவாய் மட்டும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

பின்னர் வந்தது புதிய பொருளாதாரக் கொள்கை என்ற தங்க முட்டையிடும் வாத்து. சாராயம், கந்துவட்டி, கட்டைப் பஞ்சாயத்து, அதிகாரத்தரகு என சுற்றிக்கொண்டிருந்த மேற்படி அண்ணன்கள் அனைவரும் ஒரே நாளில் சுயநிதிக் கல்லூரி முதலாளிகளாய் மாறி விட்டனர். ஒரு சில இலட்சங்களை முதலிட்டு இன்று பல கோடிகளைச் சுருட்டியிருக்கும் அண்ணன்கள் கல்வி வள்ளல்களாக உலா வரும் ''காமடி'' ஒருபுறமிருக்க, சமூக நீதி, இடஒதுக்கீடு, ஏழைகளுக்கான கல்வி, கல்வி என்பது கடைச் சரக்கல்ல போன்ற வார்த்தைகளைக் கூட கல்வித் தொழிலின் அகராதியிலிருந்து எடுத்தாக வேண்டும் என்று இப்போது சாமியாடுகிறார்களே, அதுதான் முக்கியமானது.

கவர்ச்சி அரசியல் கூட தேவையில்லை என்று ஓட்டுப் பொறுக்கிகளை மாற்றியமைத்திருக்கும் தனியார்மயம் – தாராளமயம் – உலக மயம் என்ற மும்மூர்த்திகளின் மகிமை இது. ஆம். கல்வி என்பது இனிமேலும் அறிவுத் துறை சார்ந்ததல்ல; அடிப்படை உரிமையுமல்ல; மூலதனமிட்டு இலாபம் பார்க்கும் ஒரு தொழிற்துறை இதை ஜேப்பியாரின் தலைமையிலான சுயநிதி பொறியியல் கல்லூரி முதலாளிகளின் கும்பலுக்கும், அண்ணா பல்கலைக் கழகத்துக்கும் இடையே கடந்த இரு மாதங்களாக நடைபெறும் அறிக்கைப் போரின் செய்திகள் நேரடியாக உணர்த்துகின்றன.

சுயநிதிக் கல்லூரிகளின் சார்பான வழக்கொன்றில் உச்சநீதி மன்றம் கடந்த அக்டோபர் 31-ஆம் தேதி ஒரு தீர்ப்பளித்தது. கல்வி என்பது வணிகம்தான் என்பதை மறைபொருளாகவும், சில இடங்களில் நேரடியாகவும் விளக்கியிருக்கும் இத்தீர்ப்பு, முக்கியமாக கல்வி முதலாளிகளுக்குரிய உரிமைகளைப் பாசத்துடன் அறிவித்திருக்கிறது. அரசியல் சட்டப்படி ஆரம்பக் கல்வி மட்டுமே அடிப்படை உரிமையாகக் கொள்ள முடியுமெனவும், உயர் கல்வி அந்த உரிமையில் சேராது எனவும் உச்ச நீதிமன்றம் கூறியிருக்கிறது. மேலும் உயர் கல்வியினால் தனிநபர்கள்தான் ஆதாயம் அடைகிறார்களேயொழிய சமுதாயத்திற்கு பயனில்லையாம். ஒரு குடிமகன் உயர்கல்வி கற்கும் உரிமையை அரசு செய்துதர வேண்டிய அடிப்படை உரிமையாகக் கருதமுடியாது எனும் இந்த உன்னதக் கருத்து ஏற்கனவே உலக வங்கி வைத்திருக்கும் நியதியாகும்.

உலக வங்கியின் ஆணையை மொழி பெயர்த்திருக்கும் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி மருத்துவ – பொறியியலாளர்களால் சமூகத் திற்குப் பயனில்லை என்றாகிறது. அதன்படி 24 மணி நேர மருத்துவமனைகள் ஆண்டு முழுவதும் கொள்ளையடிப்பதும், அரசு மருத்துவமனைகள் இழுத்து மூடப்படுவதும் சாத்தியம் என்றாகிறது.

அடுத்து, சுயநிதி கல்லூரிகளுக்கு வானளாவிய அதிகாரங்களைக் கொடுத்திருக்கும் விளக்கம்தான் மிகவும் முக்கியமானது. இதன்படி, அரசு உதவி பெறாத சுயநிதிக் கல்லூரிகள், மாணவர்களைத் தெரிவு செய்வதற்கும், இடஒதுக்கீடு அளவு குறித்தும், கட்டணம் வசூலிப்பதற்கும் உரிமை படைத்தவர்கள். இக்கல்லூரிகளின் நிர்வாகம், ஆசிரியர் நியமனம் இன்ன பிற விசயங்களில் அரசும் தலையிடக் கூடாது. மற்றபடி பாடத்திட்டம், சான்றிதழ் கொடுப்பது போன்ற பிரச்சினையில்லாத சமாச்சாரங்களில் மட்டும் அரசும், அதன் கல்வி நிறுவனங்களும் தலையிடலாம். தீர்ப்பில் வழங்கப்பட்டுள்ள இவ்வுரிமைகள் அரசு உதவி பெறாத சிறுபான்மை நிறுவனங்களுக்கு என்ற பெயரில்தான் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும், ஏனைய சுயநிதிக் கல்லூரிகளும் இந்த உரிமைகளைச் சொந்தம் கொண்டாடுவதை எவரும் மறுக்கவில்லை.

அடுத்து, கல்வி சேவைப் பணியாக இருந்தாலும், மூலதனமிட்டு வசதிகளைத் தரவேண்டியிருப்பதால் மாணவர்களிடம் உபரித் தொகையைக் கட்டணமாக வசூலிப்பதில் தவறில்லை என்று ஒரு வியாக்கியானம் உள்ளது. இதன்படி தரமான கல்வி என்ற பெயரில் நிறைவாக வசூலிப்பதற்கு உச்ச நீதிமன்றமே யோசனை தெரிவிக்கிறது. மற்றபடி தரமான கல்வி, மாணவர்களைச் சேர்ப்பதில் ஒளிவு மறைவின்றி செய்வது போன்றவற்றில் 'கவனமாக' இருக்கும்படி உச்ச நீதிமன்றம் கேட்கி

**தீனதயாள் பொறியியல் கல்லூரி நிர்வாகத்தின் கட்டணக் கொள்ளை, அச்சுறுத்தலால் வேறு கல்லூரிக்கு மாற்றக் கோரி போராடும் மாணவ மாணவியர்: சுயநிதி கல்லூரிகளின் 'மகிமை'**




படிப்பகம்

றது. இந்தக் 'கவனத்திற்கு' சட்டரீதியான, நிர்வாக ரீதியான அளவுகோல்கள் எதுவும் இருக்கக் கூடாது என்பதற்காகவே இந்த காசுப்பெறாத நீதி மொழி இடம் பெற்றிருக்கிறது.

உச்சநீதி மன்றத் தீர்ப்பு என்பதால் நகைச்சுவை இருக்கக்கூடாது என்பதல்ல. சுயநிதிக் கல்லூரி முதலாளிகளைக் கல்வியாளர்கள், இரக்கமுள்ள கொடையாளிகள், ஆன்மீக அமைப்புகள் என்றெல்லாம் பரவசப்படும் நீதிபதிகளை நினைத்துப்பார்த்தால் அடுத்த கணமே ஜேப்பியார், தங்கபாலு, தம்பிதுரை போன்ற 'மகான்'கள் நமட்டுச் சிரிப்புடன் தோன்றுகின்றனர். இந்தியாவிலுள்ள அரசு உதவி பெறாத சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் 10 சதம் மட்டுமே சிறுபான்மை மற்றும் மத நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. ஏனைய 90 சதம் மேற்படி 'மகான்' வகையறாக்களால்தான் ஆட்சி செய்யப்படுகின்றன. உலகறிந்த உண்மையைக் கூட உச்ச நீதிமன்றம் அறிந்திருக்கவில்லை என்று யாரும் நகைக்கக் கூடாது. ஏனெனில், உயர் கல்வியைப் பொறுத்தவரை அரசு முதலீடு செய்ய முடியாது என்ற நிலையில் தனியார் நிறுவனங்களே அதனை நிறைவேற்றுகின்றன என்ற நீதிபதிகளின் பாராட்டு ஒரு உண்மையான விசயம்தானே! ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் நடத்தலாம் என்றால் உயர்கல்வி கிடைப்பதற்காக சில ஜோக்குகளை உதிர்ப்பதற்கு மேதகு நீதிபதிகளுக்கு உரிமையில்லையா என்ன!

இப்படி நீதியரசர்கள் வாயாலேயே கல்வி வள்ளல்களாக துதிக்கப்படும் நமது 'அண்ணன்'கள் தீர்ப்பு வந்த சில



அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பாலகுருசாமி: பலவீனமான எதிர்ப்பு.

தினங்களிலேயே ஆட்டம் போட ஆரம்பித்து விட்டார்கள். இதற்கு முன்னரே தமிழகத்தின் அனைத்துப் பொறியியற் கல்லூரிகளையும் அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைத்து விட்டிருந்தது தமிழக அரசு. 5 + 3 = 8 என்று பாடம் நடத்தி, பரீட்சை நடத்தி கல்வித்தரம் கண்ட பொறியியல் கல்லூரி முதலாளிகள் இவ்விணைப்பினால் உரிமை போய்விட்டதென்று குய்யோமுய்யோ என்று கதறினார். காரணம், அண்ணா பல்கலைக்கழகம் ஒருங்கிணைத்து நடத்திய பருவத்தேர்வுகளில் சுயநிதிக் கல்லூரி மாணவர்களின் தேர்ச்சி சதம் 28 மட்டுமே. இப்படிக் குறைவான தேர்ச்சிக்கு அண்ணா பல்கலையின் கடினமான கேள்வித்தாளே காரணம் என்று நொண்டிச்சாக்கு கூறப்பட்டாலும், உண்மையில் சுயநிதிக் கல்வி முதலாளிகளின் உயர் கல்வி தர இலட்சணம் ஊரறிய வெளிவந்தது.

இந்நிலையில், உச்ச நீதிமன்றத் தீர்ப்பு இவர்களுக்கு தேவாமிர்தமாக தித்தித்தது. ஜேப்பியாரின் தலைமையில் கூடிய அரசு உதவி பெறாத சுயநிதிப் பொறியியற் கல்லூரி முதலாளிகள் தங்களது ஆணைகளை வெளியிட்டார்கள். இதன்படி, மாணவர் சேர்க்கைக்கான அண்ணா பல்கலையின் மைய நுழைவுத் தேர்வை விடுத்து, அந்தந்தக் கல்லூரி முதலாளிகளே நுழைவுத்தேர்வை நடத்துவார்கள். அரசு ஆணையிலுள்ள இட ஒதுக்கீடு இனி கிடையாது. பொருளாதார ரீதியில் நலிவடைந்த ஏழைகளுக்கு மட்டும் இட ஒதுக்கீடு செய்யப்படும் ''ஃப்ரீ சீட்'' (நுழைவுத் தேர்வு மூலம் முறையான சேர்க்கை; கட்டணம் குறைவு) ''பேமெண்ட் சீட்'' (பணம் கொடுத்து நேரடியாகச் சேருவது; கட்டணம் அதிகம்) என்ற இரு முறைகள் ஒழிக்கப்படும். மாறாக, ஒரே மாதிரியான கட்டணம் வசூலிக்கப்படும். அது ஏறக்குறைய 35 முதல் 50 ஆயிரமாக இருக்கும். மாணவர் சேருவதற்கு தகுதி +2 தேர்ச்சியடைந்தாலே போதும். மாறாக, அதிக மதிப்பெண்ணைக் கோரும் ''கட் ஆப் மார்க்'' முறை ஒழிக்கப்படும்.

இவை முதலாளிகள் செய்ய இருக்கும் விசயங்கள். இன்னும் இவர்கள் அரசு மற்றும் அண்ணா பல்கலையிடம் வைக்கும் கோரிக்கைகள் தனி. அவை: அண்ணா பல்கலை மற்றும் அரசுக்கல்லூரிகளின் இடம் நிரம்புவதற்கு ஒரு மாதம் முன்பேயே சுயநிதிக் கல்லூரிகளின் இடம் நிரம்பவேண்டும்; ஒரு கல்லூரியில் சேர்ந்த மாணவன் பின்பு வேறு கல்லூரிக்கு மாறுவதைத் தடைசெய்ய வேண்டும்; அரசு மற்றும் அதன் உதவிபெறும் கல்லூரிகளில் மட்டும் இடஒதுக்கீடு ஒதுக்கவேண்டும்.

இனி, ஜேப்பியார் கும்பல் அறிவித்துள்ள நடவடிக்கைகளால் என்ன நடக்கும் என்பதைப் பார்ப்போம். ஏற்கெனவே இம்முதலாளிகள் நில உச்சவரம்பு சட்டத்தை ஏமாற்றியும், வருமான வரி விலக்கு பெற ஆச்சி, தாத்தா பெயர்களில் அறக்கட்டளை போர்வையில் கல்விக் கொள்ளை நடத்திவருகின்றனர். இந்த இரு சலுகைகளையும் கடைசியாகப் பெற்ற முதலாளிகளில் முன்னாள் கல்வி மந்திரி தம்பிதுரையும் ஒருவர். இந்தக் கல்வி முதலாளிகளின் கையில்தான் தமிழகத்தில் உள்ள 240 பொறியியற் கல்லூரிகளின் 90 சதம் இருக்கிறது. இவற்றில் வருடத்திற்கு 75,000 பொறியியலாளர்கள் ஈசலைப்


இப்போது விற்பனையில்...

மாபெரும் சதி

- மைக்கேல் சேயர்ஸ்
ஆல்பர்ட் இ. கான்



உலகத்திற்கு சமாதானத்தையும் ஜனநாயகத்தையும் போதிக்கின்ற அமெரிக்காவும் பிற ஏகாதிபத்தியங்களும் இளம் சோசலிச சோவியத் ஒன்றியத்தை ஒழித்துக் கட்ட என்னென்ன அக்கிரமங்களிலும் அருவருக்கத்தக்க நடவடிக்கைகளிலும் ஈடுபட்டன என்பதை அடுக்கடுக்காக அம்பலப்படுத்திக் காட்டுகிறது, கிடைத்தற்கரிய இச்சிறு நூல்.

புதிய ஜனநாயகம் வெளியீடு

விலை: ரூ. 30.00

பிரதிகள் கிடைக்குமிடம்

புதிய ஜனநாயகம்
110, இரண்டாம் தளம்
63, என்.எஸ்.கே. சாலை
சென்னை - 600 024.

கீழைக்காற்று வெளியீட்டகம்
10, அவுலியா சாகிபு தெரு
எல்லீசு சாலை
சென்னை - 600 002.

"பார்ப்பன பயங்கரவாத அமைப்புகளைத் தடைசெய்!"

31.3.03 திங்கள்

# மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம்

**பார்ப்பன பயங்கரவாத அமைப்புகளான விசுவ இந்து பரிசத், சிவ சேனா, இந்து முன்னணி, பஜ்ரங் தளம் முதலானவற்றைத் தடை செய்யக் கோரி தமிழகமெங்கும் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு. ஆகிய அமைப்புகள் செயல்படும் பகுதிகளில் ஆர்ப்பாட்டம் நடைபெறும்.**

*அணிதிரள்வோம்! பார்ப்பன பயங்கரவாதத்தை முறியடிப்போம்!*

**ம.க.இ.க. - வி.வி.மு. - பு.மா.இ.மு. - பு.ஜ.தொ.மு.**

போல வெளிவருகின்றனர். அரசு நிறுவனங்கள் மூடப்படுவதும், ஆட்குறைப்பையே அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் விதியாக வைத்திருப்பதும் அதிகரிக்கின்ற அதே நாட்டில்தான், ஈசல்களும் கணக்கற்றுப் பறக்கின்றன. விரைவில் மடிந்து போகும் என்று தெரிந்தே ஈசல்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் அரசு உதவியால் அதிகரித்தபடியேதான் இருக்கின்றன.

தற்போதுள்ள மாணவர் சேர்க்கையின்படி ஒரு சுயநிதிக்கல்லூரியின் 100 இடங்களில் 50–ஐ அக்கல்லூரிகளும், 50–ஐ அரசும் எடுத்துக் கொள்கின்றன. இதன்படி 75,000 இடங்களில் இட ஒதுக்கீட்டின்படி தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு சுமார் 24,000 இடங்கள் கிடைக்கும். இனி இட ஒதுக்கீடே கிடையாது என்று ஜேப்பியார் அறிவித்துள்ள நிலையில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளின் வாயிலாக 600 இடங்கள் மட்டுமே இட ஒதுக்கீட்டின்படி கிடைக்கும்.

பொருளாதார ரீதியில் ஏழைகளுக்கு இட ஒதுக்கீடு செய்யப்படும் என்று புல்லரித்த ஜேப்பியர் அந்த 'ஏழைகளிடம்' வசூலிக்கப்போகும் கட்டணம் வெறும் 50 ஆயிரம் மட்டும்தான். ஆக 50 ஆயிரம் கட்டி படிப்பவன் ஏழை என்றால் பணக்காரர்கள் யார் என்பது தெரியவில்லை! அடுத்து, 35 மதிப்பெண் எடுத்தாலே பொறியியற் கல்லூரிகளுக்கு விண்ணப்பிக்கும் தகுதி உண்டு எனும் ஜேப்பியார், இச்சலுகை தற்போது வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு மட்டும் உள்ளதை உள்நாட்டு இந்தியர்களுக்கும் வழங்குகிறோம் என்கிறார். இதைப் போன்ற சமாச்சாரங்களை வைத்தே பல வெளிநாட்டு லெட்டர் பேடு – பல்கலைக்கழகங்கள் மூன்றாம் உலக பணக்காரர்களை ஏமாற்றி சம்பாதிக்கின்றன. அதையே உள்ளூர் முதலாளிகள் செய்யப்போகிறார்கள். இதன்படி, ஒரு பணக்காரக் குழந்தை கருவிலிருக்கும் போதே 'இஞ்சினியர்' என்று முடிவு செய்து விடலாம்.

அடுத்து, சுயநிதிக் கல்லூரிகளின் சேர்க்கை அரசுக் கல்லூரிகளின் சேர்க்கையைவிட ஒரு மாதம் முன்பே முடிக்க வேண்டும்; ஒரு கல்லூரியில் சேர்ந்துவிட்டு வேறு கல்லூரியில் சேரக்கூடாது - போன்ற கோரிக்கை கள் மாணவர்களிடையே பயத்தை ஏற்படுத்தி சுயநிதிக் கல்லூரிகளில் மட்டும் சேர்த்துவிட்டு, இறுதியில் அரசுக் கல்லூரிகளை ஒழிப்பதற்கான திட்டமேயன்றி வேறொன்றுமில்லை. அடுத்து, இம்முதலாளிகளின் இலாபத்தை, எங்கப்பன் குதிருக்குள் இல்லை என்பது ஒரு விசயத்தின் மூலம் கூறுகிறார் ஜேப்பியார். அதாவது, சென்ற கல்வியாண்டில் சுயநிதிக் கல்லூரிகளின் நிரப்பப்படாத இடங்களினால் மட்டும் 320 கோடி ரூபாய் நட்டமேற்பட்டுள்ளதாம். ஆக நிரம்பிய இடங்களினால் லாபம் எவ்வளவு, முழு இடங்களும் நிரம்பினால் வரும் லாபம் எவ்வளவு என்பதை நீங்களே ஊகித்துக் கொள்ளலாம்.

மாணவர் சேர்க்கையை அந்தக் கல்லூரிகளே பார்த்துக்கொள்ளலாம் என்பதன் பொருள் பணக்கார முட்டாள்கள் எவரும் இங்கு சிரமமின்றி சேரலாம் என்பதுதான். மற்றபடி மாணவர்களின் அறிவுத் திறன், தகுதி போன்ற சமாச்சாரங்களுக்கு இடமில்லை. ஆக, ஒடுக்கப்பட்ட சாதியினருக்கும், பொறியியலை இலட்சியமாகக் கொண்ட மாணவர்களுக்கும் இடமில்லை. இடம் வேண்டுவோர் வைத்திருக்க வேண்டிய தகுதி பணம்தான்.

பகற்கொள்ளைக்கு உரிமை கோரும் 'கல்வி வள்ளல்' ஜேப்பியார்.



இப்படி தனியார் பொறியியற் கல்லூரி முதலாளிகள் போர் தொடுத்திருப்பதை ஒத்துக் கொள்ளும் அண்ணா பல்கலையின் துணை வேந்தர் பாலகுருசாமி அவர்களுடன் பலவீனமாகத்தான் போரிடுகிறார். அதிலும் அண்ணா பல்கலையில் படித்த மாணவர்கள் அமெரிக்காவில் கௌரவத்துடன் இருப்பதை இந்த தனியார் கல்லூரிகளின் தரம் கெடுத்துவிடும் என்றே கவலைப் படுகிறார். பன்னாட்டு முதலாளிகளுக்கும், உள்நாட்டு தரகு முதலாளிகளுக்கும் தரமான மாணவர்களைத் தாரை வார்ப்பது முடியாமல் போய்விடும் என்ற கவலைதான் இது. மாறாக, இந்தக் கவலை ரூ. 50,000 பணம் கட்டி யார் படிக்க முடியும், இது ஒரு மாணவனின், சமூகத்தின் உரிமையைப் பறிக்கிறதே என்பதிலிருந்து வரவில்லை. ஏற்கனவே அண்ணா பல்கலை, ஐ.ஐ.டி உள்ளிட்ட அரசின் உயர் கல்வி நிறுவனங்கள் பெரும்பான்மை மக்களின் கைகளுக்கு எட்டாத உயரத்தில்தான் இருக்கின்றன. அதே போன்று இந்தியரின் சமூக பொருளாதார தேவைக்கான கல்வியாகவும் அவை இல்லை.

பார்ப்பனியத்தை எதிர்ப்பதே எங்கள் மூச்சு என்று சவடாலடித்த திராவிடக்கட்சிகள், பா.ஜ.க.வுடன் பல்லிளித்துக் கொண்டிருக்கும் போது, இட ஒதுக்கீடும், சமூக நீதியும் இப்படித்தான் இருக்க முடியும். தனது வாரிசுகள் எப்படியாவது ஒரு இன்ஜினியர் – டாக்டராக வரவேண்டும் என்ற நடுத்தர வர்க்கக் கனவை வைத்து இந்த அயோக்கியர்களின் கொள்ளை பகிரங்கமாக நடக்கிறது. எதிர்ப்பவர் எவருமில்லை. ஆரம்பக் கல்வியோடு உயர்கல்வியும் தமது அடிப்படை உரிமைதான் என்ற விழிப்புணர்வும், உலகமயமாக்கத்தின் பேரில் கல்வி காசாவதைக் கண்டு கோபமும் தமிழக மாணவர்களிடம் எழாத வரை, இந்த கல்வி வியாபாரத்திற்கு முடிவு இல்லை.

● செல்வம்

www.padippakam.com



## கொள்கைக்கு கோமாதா துதி வியாபாரத்துக்கு கோமாதா கறி

பசு இந்துக்களின் தாய்; பசுக்கள் இறைச்சிக்காகக் கொல்லப்படுவதைத் தடை செய்ய வேண்டும்; இந்துக்களின் பெரும்பான்மையினரின் உணர்வுகளை இழிவுபடுத்தும் வகையில் முசுலீம்கள் மாட்டுக்கறியை உண்கிறார்கள்; பசுவைக் கொல்பவர்கள் இந்துக்களின் எதிரிகள் - என்று கூறிக் கொண்டு ஆளும் இந்துவெறியர்கள் நாடு முழுவதும் பசுவதை தடைச் சட்டத்தைச் செயல்படுத்த மூர்க்கமாகக் கிளம்பியுள்ளனர்.

ஆனால் இந்து வெறியர்களுக்கு கொள்கை வேறு; வியாபாரம் வேறு. பசு வதை எதிர்ப்பு நாடகமாடும் இந்து வெறியர்களின் ஆட்சியில் தான் மாட்டுக்கறி ஏற்றுமதி வியாபாரம் முந்தைய ஆட்சிகளைவிட அதிகரித்துள்ளது. 2000-விருந்து 2002 வரையிலான காலத்தில் மட்டும் இந்தியாவின் மாட்டுகறி ஏற்றுமதி 45% அதிகரித்துள்ளதாக வர்த்தக அமைச்சகப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. மேலும், இந்தியாவின் மாட்டிறைச்சி ஏற்றுமதி வியாபாரிகளாக உள்ள 5 பெரும் புள்ளிகளில் 3 பேர் இந்துக்களாவர். இது தவிர மாட்டு எலும்பு ஏற்றுமதி வியாபாரத்திலும் இந்துக்களே முன்னணியில் உள்ளனர்.

ம.பி.யின் காங்கிரசு முதலமைச்சரான திக் விஜய் சிங், இந்து ஓட்டுக்களை அறுவடை செய்யும் நோக்கத்துடன் இந்துவெறியர்களுக்குப் போட்டியாக நாடு முழுவதும் பசுவதை தடைச் சட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று கோரி வருவதோடு, வாஜ்பாய் அரசு இந்துக்களின் அரசு அல்ல என்று சாடி வருகிறார். வாஜ்பாய் ஆட்சியில் மாட்டுக் கறி ஏற்றுமதி அதிகரித்திருப்பதைக் காட்டி, ''பசு நமது தாய்; வாஜ்பாய் தாயையே வெட்டித் தின்கிறார்!'', ''மாட்டுக் கறி வியாபாரி வாஜ்பாய் உண்மையான இந்து அல்ல'' என்ற முழக்கங்களுடன் ம.பி. இளைஞர் காங்கிரசு கண்டன ஆர்ப்பாட்டத்தையும் நடத்தியது.

அம்பலப்பட்டுப் போன ஆத்திரத்தில் மாநில பா.ஜ.க. தலைவரான வினய் மல்ஹோத்ரா, ''சோனியாவை மாட்டுக் கறி தின்பதை நிறுத்தச் சொல்ல முடியுமா?'' என்று எதிர்கேள்வி எழுப்பி காங்கிரசாரை அதிர வைத்தார். பா.ஜ.க.வினரோ, ''எருமை, காளை மாடுகளின் இறைச்சி ஏற்றுமதிதான் உயர்ந்துள்ளது. பசு மாட்டு இறைச்சி ஏற்றுமதி செய்வதாகக் கூறுவது பொய்'' என்று தாங்கள் உண்மையான இந்துக்கள்தான் என்று பசப்பி வருகின்றனர்.

ம.பி. முதல்வர் திக் விஜய்சிங், தான் உண்மையான இந்து என்று காட்டிக் கொள்ள, ''நான் தினமும் கோ மூத்திரம் குடிக்கிறேன்'' என்று பெருமையடித்துக் கொள்கிறார். தலைநகர் போபாலில் பசு மூத்திரத்தைக் குடுவையில் அடைத்து 1 லிட்டர் ரூ.6-க்கு விற்க ஏற்பாடு செய்துள்ளதாக அறிவித்துள்ளார். இதென்ன பிரமாதம்? நாங்கள் பசு மூத்திர ஷாம்பு, புனிதமான சோப்பு, இருமல் மருந்து, மேனி அழகு சாதனங்களைத் தயாரித்து ஏற்கனவே விற்பனை செய்து வருகிறோம் என்று மார்தட்டுகின்றனர், இந்து வெறியர்கள்.

இப்படி காங்கிரசும் பா.ஜ.க.வும் போட்டி போட்டுக் கொண்டு கோமாதா துதிபாடி இந்துத்துவக் கொள்கைகளைச் செயல்படுத்த விழையும் வேளையில்தான், இராஜஸ்தான், ம.பி. மாநிலங்களில் வறட்சியின் காரணமாக பல நூற்றுக்கணக்கான மாடுகள் மடிந்து போயுள்ளன. ஆயிரக்கணக்கான மாடுகள் எலும்பும் தோலுமாக நிற்கின்றன. விவசாயிகளோ வறட்சி - பஞ்சம் காரணமாக கால்நடைகளை அடிமாட்டு சந்தையில் விற்கின்றனர். விவசாயிகளையும் கால்நடைகளையும் வறட்சியிலிருந்து மீட்க வக்கற்ற இக்கயவாளிகள்தான், பசு பாதுகாப்பு பற்றியும் பசுவதை தடைச் சட்டம் பற்றியும் பெருங்கூச்சல் போடுகின்றனர்.

பசுவை வளர்க்கவோ, மேய்க்கவோ, சாணி பொறுக்கவோ தெரியாத பார்ப்பன கூட்டம்தான் கோமாதாவைத் துதிபாடுகிறது. பசுவதை தடைச் சட்டம் என்பது பார்ப்பன கும்பலைத் திருப்தி படுத்தி, பார்ப்பன நாடாக்கும் சதியின் ஓர் அங்கமே யாகும். பசுவதை தடுப்பு பற்றிப் பேசும் இக்கயவாளிகள்தான் தாழ்த்தப்பட்ட - பிற்பட்டோரை வதைக்கும் சாதிவெறிக் கொடுங்கோலர்களாக உள்ளனர். மாட்டுக்கறி தின்பவர்கள் இந்து விரோதி என்று முழங்கும் இந்துவெறியர்கள்தான், தாழ்த்தப்பட்ட - பிற்பட்டோரையும் சேர்த்து ''நாமெல்லாம் இந்துக்கள்'' என்று நாடகமாடுகின்றனர்.

## ஏகாதிபத்திய எதிர்ப்பு: பச்சோந்திகளாக போலிகள்

ஓட்டுக் கட்சிக்குள் நடக்கும் கோஷ்டி சண்டைகள் மூலம் பல உண்மைகள் வெளியே வந்துவிடுகின்றன. ஓட்டுப் பொறுக்கும் சி.பி.எம். கட்சியின் கேரள கிளையின் மாநிலச் செயலாளர் பினாரயி விஜயன் கோஷ்டிக்கும் எதிர்த்தரப்பு அச்சுதானந்தன் கோஷ்டிக்குமிடையே நடக்கும் நாய்ச் சண்டையில், அக்கட்சியின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையின் யோக்கியதை சந்தி சிரிக்கத் தொடங்கிவிட்டது.






www.padippakam.com



கேரளத்தை ஆளும் காங்கிரசு கூட்டணி அரசு, தனியார்மயமாக்கலைத் தீவிரப்படுத்தும் வகையில் ஆசிய வளர்ச்சி வங்கியிடம் கடுமையான நிபந்தனைகளுடன் கடன் வாங்கியுள்ளதோடு, உலகளாவிய ஏகபோக முதலீட்டாளர்களின் கூட்டத்தையும் அண்மையில் நடத்தியுள்ளது. மாநிலத்தை அடிமைப்படுத்தி மக்களை மரணக் குழியில் தள்ளும் இத்தனியார்மய கொள்கைகளை எதிர்த்து உள்ளூர் அளவில் ஆங்காங்கே போராட்டங்கள் தொடர்கின்றன. இந்த எதிர்ப்பு அலையைச் சாதகமாக்கிக் கொண்டு அரசியல் ஆதாயம் தேடும் நோக்கத்துடன், சி.பி.எம். கட்சியின் அதிருப்தி கோஷ்டியின் தலைவரான அச்சுதானந்தன், தாமும் காங்கிரசு அரசின் தனியார்மயக் கொள்கையை எதிர்ப்பதாக சூரத்தனம் காட்டினார். குறிப்பாக, பாலக்காடு மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ள கோகோ கோலா ஆலை, கொச்சி தனியார் குடிநீர் திட்டம், பதிராமனல் சுற்றுலா தளத்தை ஒபராய் என்ற தனியார் ஏகபோக முதலாளிக்குக் கொடுத்தது முதலானவற்றை எதிர்த்து மிகப்பெரிய போராட்டம் நடத்தப் போவதாக சவடால் அடித்தார்.

உடனே காங்கிரசு முதல்வர் அந்தோணி, இந்தத் தனியார்மய திட்டங்கள் எல்லாம் முந்தைய 'இடதுசாரி கூட்டணி' ஆட்சியில் போடப்பட்டவை என்றும், அவற்றையே தமது அரசு செயல்படுத்தி வருகிறது என்றும் உண்மையைப் போட்டு உடைத்தார். வாயடைத்துப்போன அச்சுதானந்தன், "இவையெல்லாம் இடது முன்னணியின் கவனத்துக்கு வராமலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளன; இடது முன்னணியின் ஒருங்கிணைப்பாளரான எனது பார்வைக்கு வராமலேயே இவை செயல்படுத்தப்பட்டுள்ளன. பாரதூரமான முக்கிய முடிவுகளைக் கட்சிக்கே தெரியாமல் எப்படி செயல்படுத்தலாம்? இதை நான் விடப் போவதில்லை!" என்று முந்தைய சி.பி.எம். முதல்வர் நாயனார் மற்றும் பினாரயி விஜயன் கோஷ்டிக்கு எதிராக முண்டா தட்டினார். "1996 முதல் 2001 வரை இடது முன்னணி பதவியில் இருந்த காலத்தில் எடுக்கப்பட்ட முக்கியமான முடிவுகளைப் பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்க ஒரு விசாரணைக் கமிசனை நிறுவ வேண்டும்" என்று சி.பி.எம். கட்சியில் மத்திய கமிட்டிக்கு கோரிக்கை விடுத்தார். அரசியல் தலைமைக் குழு உறுப்பினரான அச்சுதானந்தனின் கோரிக்கையை ஆதரித்து அவரது விசுவாசிகளும் கட்சிக்குள் கையெழுத்து இயக்கம் நடத்தி சூடேற்றினர். இதன்மூலம் விசாரணை பூச்சாண்டி காட்டி விஜயன் கோஷ்டியை முடக்கி கட்சிப் பதவிகளைக் கைப்பற்றவும், தம்மை தனியார்மய எதிர்ப்புப் போராளியாகக் காட்டிக் கொள்ளவும் அச்சுதானந்தன் கோஷ்டி முயற்சித்தது.

ஆனால், சி.பி.எம். கட்சியின் பொதுச் செயலாளரான சுர்ஜித், அச்சுதானந்தன் கோஷ்டியின் கனவில் மண்ணை அள்ளிப் போட்டார். "முந்தைய இடதுசாரி அரசின் கொள்கைகள் - திட்டங்கள் பற்றி விசாரணை செய்ய இயலாது. காலம் மாறுகிறது. அதற்கேற்ப வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளாவிடில் இழப்பு நமக்குத்தான். மாநிலத்தின் தொழில் வளர்ச்சியை முன்னிட்டு பன்னாட்டு நிறுவனங்களை எதிர்க்க மாட்டோம். அதேசமயம், உலகமயத்தால் தனது முகத்தை



கேரளம் இழந்துவிட அனுமதிக்கவும் மாட்டோம். மக்களையோ இயற்கை மூலாதாரங்களையோ சுரண்டாத வகையில், பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களை அனுமதிப்பதில் தவறேதுமில்லை" என்று தமது ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கையின் லட்சணத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார். சி.பி.எம். கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினரான ராமச்சந்திர பிள்ளை, "கோகோ கோலா விவகாரத்திலும் எங்களது நிலைப்பாடு இதுதான்!" என்று பத்திரிகையாளர்களுக்கு பேட்டியும் அளித்து தமது கட்சியின் சந்தர்ப்பவாதத்தை பகிரங்கமாக்கியுள்ளார்.

இப்படி, மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கானது என்று சொல்லித்தான் ஆந்திராவின் முதல்வர் சந்திரபாபு நாயுடு பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் ஆதிக்கத்தை நியாயப்படுத்துகிறார். சி.பி.எம். கட்சியும் அதே காரணத்தைத்தான் சொல்கிறது. ஆனால், சந்திரபாபு நாயுடு செய்வது மக்கள் விரோதமானதாம்; சி.பி.எம். செய்வது மக்கள் நலனுக்கானதாம்! அது எப்படி என்பது சி.பி.எம். கட்சியினருக்கே வெளிச்சம்.

## கேரளத்தைப் பாலைவனமாக்கும் துரோக ஆட்சியாளர்கள்

சட்டிஸ்கர் மாநில அரசு, ஷியோநாத் ஆற்றைத் தனியார்மயமாக்கியுள்ளதைத் தொடர்ந்து இப்போது கேரள மாநில அரசு 5 நீர்த் திட்டங்களைத் தனியாருக்குக் கையளிக்கத் தீர்மானித்துள்ளது. எர்ணாகுளம் மாவட்டத்தில் விரிவடைந்த கொச்சி பகுதி நீர்த்திட்டம், பாலக்காடு மாவட்டத்தில் கன்ஜிகோடு தொழிற்பேட்டை பகுதி நீர்த்திட்டம், குருவாயூர் நீர்திட்டம், கோட்டயம் மாவட்டத்தில் குமரகோம் நீர்த்திட்டம், திருவனந்தபுரத்தில் கோவளம் நீர்த்திட்டம் ஆகியனவற்றைத் தனியாருக்கு - உலகளாவிய ஏகபோக நிறுவனங்களுக்குக் கையளிக்க ஆளும் காங்கிரசு அரசு முடிவு செய்துள்ளது.

330 கோடி மதிப்பிலான கொச்சி பகுதி நீர்த்திட்டத்தின் மூலம் பெரியாறு ஆற்றிலிருந்து ஆலப்புழையிலுள்ள மகிலாலயம் அருகே தினமும் 20 கோடி லிட்டர் தண்ணீர் உறிஞ்சப்படும். பின்னர் அது கலம்சேரி எனுமிடத்தில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள சுத்திகரிப்பு நிலையத்துக்கு வந்து அங்கிருந்து கொச்சிக்கு விநியோகிக்கப்படும். தொழில் - வர்த்தக நிறுவனங்களுக்கு ஒரு கிலோ லிட்டர் தண்ணீர் ரூ. 14-க்கு விற்கப்படும். இதில் ரூ. 2 அரசுக்கு வரியாகக் கிடைக்கும். இத்திட்டம் அன்னிய ஏகபோக நிறுவனங்களுக்கு 20 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்படும். தண்ணீர் முறையாகக் கிடைக்க இந்நிறுவனங்கள் ஆற்றின் குறுக்கே நீர்பிடிப்பு பகுதியில் சிறிய அணைகளையும் கட்டிக் கொள்ளலாம்.

ரூ. 1351 கோடி மதிப்பிலான கன்ஜிகோடு நீர்திட்டம், குறிப்பாக, பெப்சி குளிர்பான நிறுவனத்தின் ஆதாயத்திற்காகவே கொண்டு வரப்பட்டுள்ளது. கன்ஜிகோடில் பெப்சி நிறுவனம் ஆழ்குழாய்கள்




படிப்பகம்

www.padippakam.com



மூலம் தினமும் 1.75 லட்சம் லிட்டர் நிலத்தடி நீரை உறிஞ்சி வருகிறது. இது பற்றாக்குறையாக உள்ளதால், மலப்புழா ஆற்றிலிருந்து தண்ணீரை உறிஞ்சுவதற்காகவே இத்திட்டம் போடப்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி, கோடை காலத்தில் ஆற்றில் ஆழ்குழாய்கள் மூலம் நிலத்தடி நீரை உறிஞ்சிக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மலப்புழா அணை மூலம் கிடைக்கும் நீரிலிருந்து 20,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. 60 நாட்களில் குறுவை சாகுபடி செய்வதற்குக் கூட இந்த அணைநீர் பற்றாக்குறையாக உள்ளது. மேலும், பாலக்காடு பகுதிக்கு இந்த அணைநீர்தான் குடிநீருக்கான ஒரே ஆதாரமாக உள்ளது. இந்நிலையில் நீர் ஆதாரமும் மூலவளங்களும் கொள்ளையிடப்பட்டால் இப்பகுதிவாழ் விவசாயிகளும் மக்களும் பெரிதும் பாதிக்கப்பட்டு அவர்களது எதிர்கால வாழ்வே கேள்விக்குறியாகிவிடும்.



கொச்சி நகரில் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்ட பெரியாறு: இயற்கை மூலாதாரமும் கொள்ளை.

கொச்சி பகுதியில் தரகுப் பெருமுதலாளித்துவ ஆலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகள் பெரியாறு ஆற்றில் கலந்து கடலுக்குச் செல்கிறது. இந்த ஆற்றில் நீர்வரத்து குறைந்தால் கொச்சி பகுதியில் பெரியாறு ஆற்றில் கழிவுகள் தேங்கி, சுற்றுச் சூழலுக்கும் நிலத்தடி நீருக்கும் பேரபாயம் ஏற்படும்.

ஏற்கனவே பாலக்காடு மாவட்டத்தில் பிளாச்சிமடாவில் உள்ள கோகோ கோலா நிறுவனம் ஆழ்குழாய்கள் மூலம் நிலத்தடி நீரை நாளொன்றுக்கு 10 லட்சம் லிட்டர் அளவுக்கு உறிஞ்சுவதால், ஆலையை ஒட்டியுள்ள சிற்றூர் வட்டாரத்தில் குடிநீர் தட்டுப்பாடும் வறட்சியும் ஏற்பட்டுள்ளது. விவசாயம் பொய்த்துப் போய் மக்கள் வேதனையில் உழல்கின்றனர். இதுவும் போதாதென்று வளமிக்க கேரள மாநிலத்தையே பாலைவனமாக்கும் சதியில் துரோக ஆட்சியாளர்கள் இறங்கி விட்டனர். தென்னமெரிக்கக் கண்டத்து நாடுகளைப் போல இந்தியாவும் தண்ணீருக்காக ஏகாதிபத்திய நிறுவனங்களிடம் கையேந்தி நிற்குமா, அல்லது இயற்கை மூலதாரங்களையே கொள்ளையிடக் கிளம்பியுள்ள மறுகாலனியாதிக்க சதிமுறியடிக்கப்படுமா என்பது உழைக்கும் மக்களின் போராட்டங்களைப் பொறுத்தே உள்ளது.

## உ.பி.யில் ஒரு "தாலிபான்" ராஜ்ஜியம்

"உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஜோகியா கெரா பஞ்சாயத்தில் அதிரடியாய் ஒரு தீர்ப்பு நடைமுறைப்படுத்தப் படுகிறது. முசுலீம்கள் பெரும்பான்மையாக வாழும் இக்கிராமத்து பஞ்சாயத்தில் சென்ற பக்ரித் தினத்தன்று போடப்பட்ட 'பத்வா' (மதக் கட்டளை), பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப தொழுகைக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்காமல் இருப்பதற்கு திரைப்படங்களும், தொலைக்காட்சியும்தான் காரணமென்று முடிவு செய்தது. அதன்படி 4000-க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் அப்பஞ்சாயத்து முழுவதும் திரைப்படங்கள், தொலைக்காட்சிகள் பார்ப்பதும் பாடல் ஒலிப்பேழை, குறுந்தகடுகளைக் கேட்பதும் தடை செய்யப்பட்டுள்ளதோடு, மீறினால் தொலைகாட்சிகளை அடித்து நொறுக்கவும் உத்தரவிட்டுள்ளது. இதைக் கண்காணிக்க ஒரு குழுவை உருவாக்கி இரவு பகலாக காவலிலும் வைத்துள்ளது. அப்பகுதியில் ஏற்கனவே பயன்படுத்தி வந்த தொலைக்காட்சி, வானொலி பெட்டிகளை அதன் உரிமையாளர்கள் பஞ்சாயத்தாரிடம் ஒப்படைத்து விற்கச் சொல்லிவிட்டனர். இந்நடவடிக்கையை தாலிபான் ஆட்சியாளர்களைப் போலவே, "வரும் தலைமுறையைப் பண்பாட்டுச் சீரழிவிலிருந்து காப்பாற்றுவோம்" என்று நியாயப்படுத்துகிறது 'பத்வா'.

சேலத்தில் நடத்தப்பட்ட விளக்கு பூஜை: பார்ப்பன - ஜெயா ஆட்சியின் கொட்டம்.



## பார்ப்பன நீதி

கடந்த பிப்ரவரி ஏழாம் தேதி சேலம் மாவட்டம் முழுவதுமுள்ள அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்களுக்கு திடீரென அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டது. இங்குள்ள சுவனேஸ்வர் கோயிலில் 1008 சங்குகளை வைத்தும், 108 குத்து விளக்குகளை வைத்தும் சிறப்பு பூசை நடத்தப்படுவதையொட்டிதான் இந்த விடுமுறை; இதற்கான உத்தரவு இந்து அறநிலையத் துறை மூலம் தனக்கு வந்ததாக கூறுகிறார் மாவட்ட ஆட்சியர் இராதாகிருஷ்ணன். 'இந்தப் பூஜையே 'அம்மா' ஆட்சியில் நீடிக்கவும், சாத்தான் குளம் தேர்தலில் வெற்றிப் பெறவும் சோதிடர்களின் ஆலோசனைப்படி செய்யப்பட்டது' என்று உண்மையைப் போட்டு உடைத்தார் ஒரு போலீசு அதிகாரி. ஒருபுறம் அரசு ஊழியர்கள் உரிமைக்காக வேலை நிறுத்தம் செய்வதைக் கிரிமினல் குற்றமாக அறிவித்து தடை. இன்னொரு பக்கம் சங்காபிஷேகத்துக்கு அரசு விடுமுறை. இதுதான் ஜெயாவின் பார்ப்பன நீதி.

www.padippakam.com

● விவசாயிகளைத் தட்டேந்த வைத்த ஜெயாவின் வக்கிர ஆட்சியை எதிர்த்து பல பகுதிகளில் விவசாயிகள் போராடியுள் ளனர். தருமபுரி அருகே நடுப்பட்டி கிரா மத்தில் 300-க்கும் மேற்பட்டோர் குறிப் பாக, பெண்கள் தன்னெழுச்சியாக அணி திரண்டு அரிசி கூப்பன் வழங்குவதில் பாரபட்சமின்றி அனைவருக்கும் தரக் கோரி திடீர் சாலை மறியலில் ஈடுபட் டனர். வாய்பேச முடியாத ஒரு ஏழை விவ சாயப் பெண்மணி பேருந்தை மறித்து சாலையில் படுத்து போராடிய நிகழ்ச்சியா னது, ஒடுங்கிக் கிடந்த மக்களின் உணர்வைத் தூண்டியது. மக்களின் போர்க்குணத்தைக் கண்டு அரசு அதிகாரி களும் உள்ளூர் ஓட்டுக் கட்சித் தலைவர் களும் போலீசாரும் பீதியடைந்து, வேறு வழியின்றி விவசாயிகளின் கோரிக் கையை ஏற்பதாக உறுதியளித்தனர். போராட்டம் ஒன்றே விவசாயிகளைப் பட்டினிச் சாவு - தற்கொலைகளிலிருந்து மீட்பதற்கான ஒரே வழி என்ற பு.ஜ.வின் கூற்றை இது எதிரொலிப்பதாக அமைந் துள்ளது.

— புரட்சித் தூயன், தருமபுரி.

● பஞ்சாப் - அரியானா, கர்நாடகா உயர் நீதிமன்ற நீதிபதிகளிலிருந்து உச்ச நீதிமன்ற நீதிபதிகள் வரை சீரழிவு குற்ற நடவடிக்கைகளின் கறை படிந்தவர் கள்தான் என்ற உண்மையை ''அடிமுதல் நுனி வரை அழுகி நாறுது நீதித்துறை'' என்ற கட்டுரை எடுப்பாக உணர்த்தியது.

— செ. ஷீபா, வல்லம்.

● மீனவர் வாழ்வைப் பறித்துவிட்டு மெரீனா கடற்கரையை அழகுப்படுத்தக் கிளம்பியுள்ள பாசிச ஜெயா ஆட்சியின் வக்கிரத்தைக் கண்டு அதிர்ச்சி அடைந்தேன். பாசிச ஜெயாவை அம்ப லப்படுத்தி ''பசி பட்டினி பற்றி இவருக்கு என்ன தெரியும்? படத்தில் வேசங்கட்டி ஆடத்தானே தெரியும்?'' என்ற ம.க.இ.க.வின் பாடல் வரிகள்தான் என் நெஞ்சில் முட்டி மோதின.

— முரளி மற்றும் ஜோசப்,
அம்மையப்பன்.

● உண்மையைப் பிரித்தறிவிப்பதில் பு.ஜ. என்றுமே தனித்துவத்தோடு நிற்கி றது. இசுலாமிய தீவிரவாதிகள் மதப் போர்வையின் மூலம் இசுலாமியர்க ளையே கொலை செய்யும் கொடுஞ் செயலைத் துணிவுடன் தெளிவுபடுத்தி யுள்ளீர்கள். எனினும், பர்தாவை இசுலா மியப் பெண்கள் சுயவிருப்பத்துடன் அணிவதில்லை என்று நீங்கள் கூறுவது சரியல்ல.

- அ. காஜாமுகைதீன், ஒத்தக்கடை.

● காசுமீரில் இசுலாமியத் தீவிரவாதிகள் செய்து வரும் அட்டூழியங்களை எவரும் ஏற்க முடியாது. அதேசமயம், கற்பழிப்பு, நகைக் கொள்ளை முதலானவை நடை பெறாதிருக்க பர்தா அணிவது ஒரு கவச மாக இருக்கும். பெண்கள் வெளியே

# வாசகர் கடிதம்

செல்லும்போது பர்தா அணிய வேண் டுமே தவிர, 24 மணிநேரமும் கட்டாய மாக பர்தா அணியவேண்டும் என்று இசு லாமிய மார்க்கம் கூறவில்லை.

— காஜா அப்துல்காதர்,
திருநெல்வேலி - 5.

*(இசுலாமியப் பெண்கள் சுயவிருப்பத் துடன் பர்தா அணிவதாக வாசகர் காஜாமு கைதீன் கூறுவது யதார்த்த நிலைக்கு மாறானதாகும். கற்பழிப்பு, நகைக் கொள்ளை நடவாதிருக்க பர்தா ஒரு கவச மாக இருக்கும் என்று வாசகர் காஜா அப்துல்காதர் நம்புவது பாமரத்தனமா னது. பர்தா விவகாரம் மட்டுமின்றி, ஷாரியத் உட்பட இசுலாமிய கோட்பாடு களைப் பலரும் பலவிதமாக வியாக்கி யானம் செய்து நியாயப்படுத்தி வரும் வேளையில், இசுலாமிய மார்க்கத்தின்படி பெண்கள் வெளியே செல்லும் போதுதான் பர்தா அணிய வேண்டும் என்று இந்த வாசகர் கூறுவது பொருத்தப்பாடுடைய தல்ல.*

*- ஆசிரியர் குழு)*

● இந்துத்துவத்தையும், இந்துமத வெறி யர்களையும் எவ்வித சமரசமுமின்றி தோலுரித்துக் காட்டுவதால், பு.ஜ.வை இசு லாமிய அடிப்படைவாதிகளுக்கு ஆதர வான பத்திரிகை என்று சிலர் கூறி வந்தனர். ஆனால் பு.ஜ.வில் வெளியான இசுலாமிய மதப்போர்வையில் தீவிரவாதி களின் வெறிச் செயல் என்ற கட்டு ரையைப் படித்த பிறகாவது பு.ஜ. எந்த மதத்திற்கும் ஆதரவான பத்திரிகை இல்லை; அது மக்கள் ஜனநாயகத்திற்கும் புரட்சிகர சிந்தனைக்குமான பத்திரிகை என்பதை உணர்வார்கள் என்று நம்பு கிறேன்.

- விஜயசாந்தி, மதுரை.

## நெருப்பைப் பொட்டலம் கட்ட முடியுமா?

நெல்லை மாவட்டத்தில் இயங்கி வரும் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணியைச் சேர்ந்த தோழர்கள் சுரேஷ், பாலு ஆகிய இருவரும் திரு நெல்வேலியில் ''பார்ப்பன பயங்கர வாத எதிர்ப்பு மாநாட்''டிற்கான சுவர் விளம்பரம் எழுதிக் கொண்டிருந்த போது, கடந்த 20.1.03 அன்று போலீ சாரால் கைது செய்யப்பட்டனர். போலீசு நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட பத்து நிமிடங்களுக்குள் அ.தி.மு.க. வார்டு உறுப்பினர் சுதா பர மசிவன் தலைமையில் வந்த 20-க்கும் மேற்பட்ட ஆளுங்கட்சி குண்டர்கள், போலீசு நிலையத்திலேயே தோழர் களை மிரட்டி எச்சரித்தனர். அதைத் தொடர்ந்து மேலிடத்து உத்திரவின்படி போலீசார், அரசு சுவரில் அனுமதி யின்றி விளம்பரம் செய்ததாகவும், 'மாண்புமிகு' முதல்வரை அவம திக்கும் வகையில் சுவரில் எழுதியதா கவும் தோழர்கள் மீது வழக்கு பதிவு செய்தனர். தோழர்களைச் சிறையில் அடைத்துவிடும் நோக்கத்தோடு அன்றிரவே குற்றப் பத்திரிகையும் தாக்கல் செய்து விட்டனர்.

சட்டக் கல்லூரி மாணவரான தோழர் சுரேஷ் கைது செய்யப்பட் டதை அறிந்த திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரி மாணவர்கள் மறுநாள் (21.1.03) வகுப்புகளைப் புறக்கணித் துவிட்டு திடீர் சாலை மறியல் போராட் டத்தில் ஈடுபட்டனர். ''கைது செய்யப் பட்டவர்களை நிபந்தனையின்றி விடு தலை செய்! வழக்குகளை ரத்து செய்! போலீசு அராஜகம் ஒழிக!'' என்ற முழக் கங்களுடன் நடந்த இப்போராட் டத்தால் வாகன போக்குவரத்து ஸ்தம் பித்தது. இதைக் கண்டு அரண்டு போன போலீசார், மாணவப் பிரதிநிதிகளிடம் பேச்சு வார்த்தை நடத்த முன் வந்தனர். வழக்கு மன்றத்தில் கைதானவர்களைப் பிணையில் விடுதலை செய்ய போலீசு தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்க மாட்டோம் என்று உறுதியளித்தனர். நீதிபதியும் தோழர்களை மன்னித்து நிபந்தனையின்றி விடுதலை செய்தார்.

தோழர்களின் செயல்பாடுகளில் உள்ள நியாயத்தை உணர்ந்தும், அ.தி.மு.க. குண்டர்கள் மற்றும் போலீசார் மீதான வெறுப்பினாலும் திர ளான மாணவர்கள் இப்போராட் டத்தில் இறுதிவரை உறுதியாக நின்று வெற்றியைச் சாதித்துள்ளனர். அர சியல் காரணங்களுக்காகக் கைது செய்யப்பட்ட தோழர்களை விடுவிக்க, கட்சி வேறுபாடின்றி அனைத்து மாண வர்களும் இணைந்து போராடிய செய லானது, எதிர்காலத்தில் மாணவர்கள் அரசியல் போராட்டங்களை நடத்துவ தற்கு முதற்படியாகவும் மாணவர் களின் போராட்ட வலிமையை உணர்த் துவதாகவும் அமைந்தது.

**— புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, திருநெல்வேலி**

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.

படிப்பகம்

www.padippakam.com

# இதுதான் இன்றைய இந்தியா

தென்னிந்தியாவின் நெற்களஞ்சிய மான தஞ்சை மாவட்டத்தில் பயிர்களைப் போலவே விவசாயிகளின் வாழ்க்கையும் கருகி போனது. தமிழகத்தின் வறட்சி குறித்து பார்வையிட வந்த மத்திய ஆய்வுக் குழு அதிகாரிகளின் காலில் விழுந்து அழுகின்றனர், நாகை மாவட்டம் பிரதாபராமபுர விவசாய பெண்கள்.



பொன்விளையும் பூமி புழுதிமேடாகி போனது. குறுவைக்கும் சம்பாவுக்கும் தண்ணீர் இல்லை. இப்போது குடிநீருக்கும் வழியில்லை. கால்நடைகளுக்கும் தீவன மில்லை. பெற்ற குழந்தைக்கு சோறு இல்லையென்றாலும் தன்பயிரையும், கால்நடைகளையும் கடன்பட்டு கவனிக்கும் விவசாயிகள் மனமொடிந்து அழுகிறார்கள்.

ஆனால் ஆட்சியாளர்களும் அதிகாரிகளும் விவசாயிகளின் அவலத்தையும் கேவலப்படுத்துகிறார்கள். "தண்ணீர் இல்லை யென்றால் வேறு விவசாய பயிர் செய்து கொள்வதுதானே" என்கிறார்கள். "எவ்வளவு கொடுத்தாலும் எலிகறி 'ருசி'யை விட மாட்டான்" என்கிறார்கள்.

ஒருபுறம் காவிரி வறண்டு போனது. மறுபுறம் அ.தி.மு.க. தலைமையின் வக்கிரமோ கரைபுரண்டு ஓடுகிறது. ஜெயலலிதாவின் 55-வது பிறந்தநாள் விழா பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படுகிறது. நாளேடுகளில், அரசு விழாக்களில், தமிழகம் முழுக்க சுவர்களில், பலவண்ணங்களில், அன்னையாக, அம்மாவாக, மனித புனிதவதியாக, ஆதி பராசக்தியாக, சமூக நீதி காத்த வீராங்கனையாக, புரட்சித் தலைவியாக ஆப்பிள் கன்னத்தில் ரோஜா வண்ணத்தில் ஜெயலலிதா சிரிக்கிறார்.

தொண்டர்கள் வாழ்த்த வயதில்லை யென வணங்குகிறார்கள். தங்கத்தில், வெள்ளியில் தேர் இழுக்கிறார்கள். படத்தில் பார்ப்பது சென்னை நகர துணை மேயர் கராத்தே ஆர்.தியாகராஜன், நிதியமைச்சர் பொன்னையன் மற்றும் அ.தி.மு.க. பிரமுகர்கள். இதற்கு 'வெகுமதியாக' தமிழகத்தையே கூறு போட்டு கொள்ளையடிக்க அனுமதிக்கப்படுகிறார்கள். அடிமட்ட தொண்டர்களோ சுண்டு விரலைக் காணிக்கையாக்கி அம்மாவின் கருணை பார்வைக்கு ஏங்குகிறார்கள்.



விவசாயிகளின் வாழ்க்கையையே கேள்விக் குறியாக்கி, அவர்களைத் தட்டேந்த வைத்து, அதையே சமூக நீதிக் காத்த சாதனையாக்கி, வாண வேடிக்கைகள் நடத்தி பிறந்தநாள் விழா கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த கும்பலை இன்னும் எத்தனை காலம்தான் சகித்துக் கொண்டிருப்பது?